சக்தி மலர்

ஏ. கே. செட்டியார்

ஜப்பான்

T14948
R005E02
T·14948



ஸ்ரீ ஏ. கே. செட்டியார் இருமுறை ஜப்பான் சென்று, அங்கு சில காலம் தங்கி கல்வி பயின்றார். ஜப்பானிய மக்களுடன் நெருங்கிப் பழகினார். தமது பிரயாணத்தின் போது எழுந்த எண்ணங்களைத் தொகுத்து இந்நூலை எழுதியுள்ளார்.

ஜப்பான்

[பிரயாண நூல்]

ஏ. கே. செட்டியார்

☆

சக்தி காரியாலயம்
ஜார்ஜ் டௌன், :: சென்னை

பதிப்புரிமை] [விலை ரூ. 1

Revised Edition, January 1942

சக்தி பிரஸ் லிமிடெட் (சாந்தி பிரஸ்), சென்னை

பதிப்புரை

'ஜப்பான்' புத்தகத்தின் முதலாவது பதிப்பு 1936-ல் ரங்கூனில் வெளியிடப் பெற்றது.

'சக்தி' மலராக வெளிவரும் இப்புத்தகம் ஜப்பானின் இரண்டாவது பதிப்பு.

'சக்தி' மலர்களிலே இது மூன்றாவது பிரயாண நூல்.

பிரயாண நூல்களுக்குத் தமிழ் மக்கள் காட்டிவரும் ஆதரவுதான், இந்நூலை வெளியிடும்படி எங்களைத் தூண்டியது.

சக்தி காரியாலயத்தார்.

பொருளடக்கம்

1.	போகும் வழியிலே	...	1
2.	ஹாங்காங் தரிசனம்	...	3
3.	ஷாங்காய் அநுபவம்	...	10
4.	கோபையின் காட்சி	...	13
5.	டோக்கியோ—ஜப்பானின் தலைநகர்		29
6.	பத்திரிகாலயம்—ஒரு தனி உலகம்	...	41
7.	அங்கும்—இங்கும்	...	47
8.	சில குணங்கள்	...	63
9.	ஜப்பானில் இந்தியர்கள்	...	70
10.	ஜப்பான் ஒரு தனி நாடு		
	சரித்திர வரலாறு	...	75
	அரசியல் அமைப்பு	...	85
	கல்வி முறை	...	87
	பத்திரிகைகள்	...	90
11.	முடிவுரை	...	103
12.	அநுபந்தம்	...	105

ஜப்பான்

போகும் வழியில்

சிங்கப்பூரிலிருந்து "சூவாமாரு" என்ற ஜப்பானிய கப்பலில் பிரயாணமானேன். "சூவாமாரு" கப்பல் நான் எதிர்பார்த்தபடி அவ்வளவு வசதியுடையதாக இருக்கவில்லை. என். ஒய். கே. கம்பெனியாருடைய பழைய கப்பல்களில் இதுவும் ஒன்று. ஆனால் கப்பல் வேலைக்காரர்கள் மிகவும் அன்பாகவும் மரியாதையாகவும் நடந்து கொண்டனர். மணியடித்ததும் எல்லோரும் சாப்பிடும் இடத்திற்குச் செல்வது வழக்கம். ஆனால் என்னைப் பொறுத்த மட்டில் எனது அறையிலேயே உணவு உட்கொண்டேன். நான் முதலிலேயே மாமிசம் அருந்துவதில்லை என்று தெரிவித்தபடியால் எனக்காகத் தனியே காய்கறிகள் சமைத்தனர். சாதம், பிரெஞ்ச் பட்டாணி, உருளைக்கிழங்கு, கீரைத்தண்டு முதலியனதான் எனது ஆகாரம். சமையல் நன்றாக இருந்தபோதிலும் அதன் சுவை எனக்குப் பிடிக்கவில்லை. பெயரளவில்தான் சாப்பிட்டேன். குறைந்தது பிரெஞ்ச் பட்டாணியும் ஐஸ்கிரீமும் பழங்களும் சாப்பிடத் தெரிந்ததை முன்னிட்டு என்னை

நானே பாராட்டிக்கொள்வதுண்டு. சாப்பாட்டைப் பொறுத்தவரை "சூவாமாரு" கப்பல் கஷ்டமாகத் தான் இருந்தது. ஆனால் வேலைக்காரர்கள் காட்டிய அன்பு காரணமாக நான் சில 'கேக்கு'களையும் ஆரஞ்சுப் பழ ரசத்தையும் உட்கொண்டு எனது பசியைத் தணித்துக்கொண்டேன்.

சிங்கப்பூரிலிருந்து ஹாங்காங் நகரை ஆறாவது தினத்தில்தான் காணமுடிந்தது. இப்பிரயாணத்தில், ஒரு நாள் முழுதும் பிரயாணிகள் கொடுங்காற்றின் காரணமாய்த் துன்புற்றனர். என்ற போதிலும் கப்பற் பிரயாணத்தைக் கூடியவரை இன்பமுள்ள தாகச் செய்ய கப்பல் வேலைக்காரர்கள் முயற்சி செய்கின்றனர். தினந்தோறும் ரேடியோ மூலம் உலக விஷயங்களை ஒருவாறு தெரிந்து கொண்டோம்.

ஹாங்காங் தரிசனம்

எங்கள் கப்பல் ஹாங்காங் நகரை யணுகிற்று. காலை ஏழு மணிக்குக் கோலூன் துறைமுகத்தை யடைந்தோம். ஹாங்காங் மலைமேலமைந்த நகரம். சுமார் நூறு வருட காலமாக இப்பட்டணம் பிரிட்டிஷார் கையில் இருந்து வருகின்றது. இது ஒரு கவர்னரின் ஆளுகைக்குட்பட்டது. இதற்கு எதிரிலுள்ள கோலூன் நகரமும் பிரிட்டிஷாரின் ஆதீனத்திலேயே இருக்கின்றது. ஹாங்காங் துறைமுகத்தை (Land Locked Harbour) அதாவது நிலம் சூழ்ந்த துறைமுகமென்று கூறலாம். எங்கு திரும்பிப் பார்த்தாலும் மலைகள்தான். கப்பல் எவ்வழியில் செல்லும் என்பதை யறிவது கஷ்டம். அன்றியும் ஆயிரக்கணக்கான படகுகளில் மக்கள் வாழ்வதைக் காண்பது உண்மையிலேயே வியப்பைத் தருவதாகும். எந்தச் சமயத்தில் பார்த்தாலும் ஹாங்காங்—கோலூன் துறைமுகம் சுறுசுறுப்பாகவே யிருக்கும். பல நாட்டுக் கப்பல்களையும் பல நாட்டு மனிதர்களையும் இங்கு காணலாம்.

அன்று தினம் ஞாயிற்றுக்கிழமை யாதலால் தாமஸ் குக்கில் 'செக்'கை மாற்ற முடியவில்லை. எனவே பணமாற்றுபவர் (Money Changer) ஒருவரிடம் சென்று இரண்டு பவுனுக்கு ஹாங்காங் டாலர்கள் மாற்றினேம். நாணய மாற்றுப்படி எங்

கட்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய தொகையி லிருந்து நாற்பது செண்ட் குறைவாகக் கிடைத்தது. வேறு வழியில்லாததால் இக்குறைந்த தொகையைப் பெற்றுக்கொண்டு ஒரு வாடகை மோட்டாரில் ஹாங்காங் தீவைச் சுற்றிப் பார்த்தோம்.

ஹாங்காங் தீவு சுமார் 40 மைல் சுற்றளவுள் ளது. பல இயற்கைக் காட்சிகளைக் கொண்டது. இங்குள்ள இந்தியர் சிலரின் வியாபார ஸ்தலங்கட் குச் சென்றோம். வழியில் ஹாங்காங் சர்வகலா சாலை, அபர்டீன் பாதிரியாரின் தொழிற் கல்விச் சாலை, வனப்பு வாய்ந்த ரீபல்ஸ் பே, குடி தண்ணீர்த் தேக்கம் முதலியவைகளையும் பார்த்துவிட்டு நகரின் மத்தியில் வந்து சேர்ந்தோம். பத்துப் பன்னிரண்டு மாடிகளையுடைய கட்டிடங்கள் பல வரிசையாய் இருக்கின்றன. செட்டார் ரோடில் பல பாங்கு களின் பெரிய கட்டிடங்கள் கம்பீரத் தோற்றமளித் தன. எல்லாவற்றிலும் குறிப்பிடத் தக்கது புதிதாகக் கட்டப்பெறும் அழகுமிக்க "ஹாங்காங் அன்-ஷாங்கே பாங்கிங் கார்ப்பொரேஷன்" கட்டிடந் தான்.

ஹாங்காங் நகர்வாசம், அதிகப்பணச்செலவுடை யது. அரண்மனை போன்ற பல ஹோட்டல்கள் இங்கு இருக்கின்றன. சில ஹோட்டல்களில் ஒரு அறையில் ஒரு நாளைக்குத் தங்குவதற்கு மட்டும் பத்து டாலர்கள் கொடுக்க வேண்டும். சாப்பாடு 'ரெஸ்டாரண்டுகள்' பல அமெரிக்க முறையில் அமைக்கப்பட்டுள்ளன. கப்பலில் 'நல்ல சாப்பாடு'

கிடைக்காத நிலையில் எனது மார்வாரி நண்பரும் நானும் இந்திய உணவுச்சாலை எங்கேனும் இருக்கிறதா என்று தேடும் முயற்சியில் ஈடுபட்டோம். சுமார் ஒரு மணி நேரம் நல்ல வெயிலில் அலைந்த பின்னர் ஒரு மூலையில் 'இந்தியன் கேப்' எனும் பலகையொன்று தொங்குவதைக் கண்டோம். 'இன்று நல்ல அதிர்ஷ்டம். ரொட்டியும் டாலும் (பருப்பும்) திருப்தியாகச் சாப்பிடலாம்' என்று நினைத்துக்கொண்டு 'இந்தியன் கேப்' கதவைத் தட்டினோம். ஐந்து நிமிஷம் வரை பதிலேயில்லை. பின்னர் தைரியமாகக் கதவைத் திறந்தோம். அப்பொழுது பகல் பதினொரு மணியிருக்கலாம். மூன்று சீனர்கள் பெஞ்சுகளின் மேல் படுத்து உறங்கினர். எங்களைக் கண்டதும் அவர்கள் மெதுவாக எழுந்து கண்களைத் துடைத்தனர். 'இந்தியன் கேபி'ல் சீனர்களிருக்கிறார்களே என்ற சந்தேகம் இருந்தபோதிலும் "இந்தியச் சாப்பாடு வேண்டும்" என்று ஆங்கிலத்தில் கூறினோம். "அப்படியா! ஆர்டர் கொடுத்தால் மூன்று மணி நேரத்தில் செய்வோம். 'மட்டன்' வேண்டுமா? 'சிக்கன்' வேண்டுமா?" என்று அரைகுறையான ஆங்கிலத்தில் கேட்டான் ஒரு சீனன். எங்கட்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. நண்பர் என்னைப் பார்த்தார். நான் அவரைப் பார்த்தேன். மறு கணத்தில் அவரும் நானும் அத்தூங்கு மூஞ்சிகளின் பார்வையிலிருந்து விலகி வேகமாய் நடந்தோம்.

ஹாங்காங் நகர் போலீஸாரில் பெரும்

பாலோர் இந்தியர்-பஞ்சாபிகள். சுமார் 800 பஞ்சாபி போலீஸ்காரர்கள் தற்பொழுது இருப்பதாகத் தெரிகிறது. இவர்களிற் பெரும்பாலோர் எப்பொழுதும் ஆயுத பாணிகளாகவே திகழ்கின்றனர். பெரிய பாங்குகளிலும் வியாபார ஸ்தாபனங்களிலும் பஞ்சாபிகளே காவற்காரர்களாய் இருக்கின்றனர். சில சீனப் பிரபுக்கள் வீடுகளிலும் பஞ்சாபிகள்தான் காவற்காரர்கள் என்பதை யறிய வியப்புற்ருேம். சீனர்களைச் சீனர்களே நம்பவில்லையானல், அன்னியர்களாகிய நாம் அவர்களை எப்படி நம்புவது? தெருவில் மூலைக்கு மூலை தாடி மீசையுடனும், பெருந் தலைப்பாகையுடனும் காட்சி யளித்த இந்தியப் போலீஸ்காரர்களை அணுகி 'எங்கேனும் கொஞ்சமாவது இந்திய உணவு கிடைக்குமா?' என்று ஹிந்துஸ்தானி பாஷையில் கேட்டோம். ஒவ்வொருவரும் சுமார் பத்து நிமிஷநேரம் மௌன விரதம் பூண்ட பின்னர் 'கிடைக்காது' என்று பதிலளித்தனர். இனியும் விசாரிப்பதில் பயனில்லை என்று தீர்மானித்து, எனது நண்பரும் நானும் ஒரு 'ரெஸ்டாரண்டுக்'குச் சென்று, உருளைக்கிழங்கு வறுவலும், ஐஸ்கிரீமும் சாப்பிட்டுவிட்டு மீண்டும் ஊர்சுற்ற ஆரம்பித்தோம்.

பகல் ஒரு மணி. நல்ல வெயில். இந்நேரத்தில் மலை ரயிலுக்குச் சென்ருேம். முப்பது செண்டு கட்டணத்தில் 1305 அடி உயரம் சென்ருேம். உயரச் செல்லச் செல்ல, ஹாங்காங் நகரின் தோற்றம் நன்கு தெரிந்தது. இருபுறங்களிலும் அமைந்துள்ள

இயற்கைக் காட்சிகள் கண்களுக்குப் பெருவிருந் தளித்தன. மலைமீது கவர்னரின் மாளிகை முதலி யன அமைக்கப்பட்டுள்ளன. எங்கு பார்த்தாலும் ரஸ்தாக்கள், பசுமையான தோற்றம். முதல் தரமான வாடகை மோட்டார்களும், செடான் நாற்காலி களும் எப்பொழுதும் தயாராயிருக்கின்றன. பொது வாக இங்கு நிறபேதம் காண்பதற்கில்லை. பணத்தை யார் தண்ணீர்போல் வாறி யிறைக்கின்றார்களோ—அவர்கள் எந்நிறத்தவர்களாயிருந்தாலும் சரி—இங்கு சுகமாக இருக்கலாம். மலை உச்சியில் குறிப் பிட்ட ஒரு சிலரே வசிக்கின்றனர். அங்கு வசிப் பவர்களையும் அவர்கள் வேலைக்காரர்களையும் தவிர யாரும் இரவு நேரங்களில் அங்கு தங்கக்கூடாது என்ற கருத்துடைய ஒரு விளம்பரத்தைக் கண் டோம். இயற்கையும் செயற்கையும் கலந்து விளங் கும் ஹாங்காங் மலைச்சிகரம், வசிப்பதற்கு மிகச் சிறந்தவிடம் என்பதில் ஐயமில்லை.

பர்மாவில் நாங்கள் கண்ட சீனர்களுக்கும் ஹாங்காங்கில் நாங்கள் சந்தித்த சீனர்களுக்கும் சில வித்தியாசங்கள் இருந்தன. சீனர்களிற் பலர் இப் பொழுது மேலை நாட்டு நாகரிகத்தில் மூழ்கி வருகின்றனர். பொதுவாக ஐரோப்பிய உடை, சீனர்களிற் பலருக்கு—சிறப்பாகப் பெண்கட்கு அவ்வளவு பொருத்தமானதாகத் தோன்றவில்லை. கையில் ஒரு பவுடர் டப்பியை வைத்துக்கொண்டு முகத்திற்கு வர்ணந் தீட்டும் சீனப்பெண்களை அடிக் கடி காணலாம். சீனர்களின் வியாபார ஸ்தலங்

களில் கூட்டம் எப்பொழுதும் அதிகம். இரங்கூனில் ‘ஐந்தடி’ என்று சொல்கின்றோமல்லவா, அது உண்மையில் ஐந்தடி அகலந்தான் இருக்கிறது. சில வீதிகள் தவிர ஏனைய வெல்லாம் குறுகியதாகவே யிருக்கின்றன.

ஹாங்காங், ஷாங்காய் முதலிய நகரங்களில் ஒவ்வொரு பாங்குகளும் நோட்டுகள் வெளியிடுகின்றன. பத்து செண்டு, இருபது செண்டு முதலியவைகட்கெல்லாம் நோட்டுகள் வழங்கப்படுகின்றன. தபால் தந்தி முதலியவைகளின் கட்டணம் மிக அதிகம். உள் நாட்டில் குறிப்பிட்ட சில விடங்கட்கு ஆகாயத் தபால் வசதி யிருக்கிறது.

‘மொஹூச்சான்’ அல்லது ‘கருப்புப் பேய்கள்’ என இந்தியர்களைச் சில சீனர்கள் அழைப்பதாகக் கேள்விப்பட்டோம். ஆனால் அந்தக் ‘கருப்புப் பேய்’ களுக்குத்தான் சீனர்கள் பயப்படுகின்றார்கள். சீனப் போக்கிரிகளை யடக்குவதற்குத் தக்க முரட்டுத்தனமான முறையிலேயே இந்தியப் போலீசார் நடந்துகொள்ள வேண்டி ஏற்படுகிறது. சீனர்களிற் பலர் இந்தப் போலீசாரைக் கொண்டுதான் இந்தியர்களை மதிக்கின்றனர். இந்தியர்கள் நாகரிக மற்றவர்களென்றும், தாடி மீசையுடைய முரட்டு மனிதர்களென்றும், அதிக அபின் சாப்பிடுபவர்களென்றும் சீனர்கள் எண்ணுகின்றனர். பொதுவாக இந்திய விஷயங்களைக் குறித்துப் படித்த சீனர்கள் என்பவர்களுக்குக் கூட உண்மையான விஷயங்கள் தெரியாது என்றுதான் கூறவேண்டும்.

கோலூன் நகரம், ஹாங்காங்கிற்கு எதிரே யமைந்திருப்பது. சில ஆண்டுகளாக இதுவும் பிரிட்டிஷார் கையில்தான் இருக்கின்றது. இங்கு டிராம், பஸ் முதலியவைகள் ஒழுங்கான முறையில் நன்கு அமைக்கப் பெற்றுள்ளன. இவைகளில் முதலாவது, மூன்றாவது வகுப்பு என இரண்டுண்டு. காண்டன் நகரத்திற்கு இங்கிருந்து ரயில் பாதை செல்லுகின்றது. பெரும்பாலான அன்னியர்கள் இங்குதான் வசிக்கின்றனர். மிகவும் நாகரிகமான சிறிய பங்களாக்களை இங்கு நூற்றுக் கணக்காகக் காணலாம். ஒரே வரிசையில் பத்து அல்லது பன்னிரண்டு பங்களாக்கள் ஒரே மாதிரியாக அமைக்கப் பெற்றிருப்பதைப் பல விடங்களில் காணலாம். அமைதியாகவும் சௌகரியமாகவும் வசிப்பதற்கு இந்நகரம் ஏற்றதொரு இடமாகும். சகல நாகரிக வசதிகளும் இங்கிருக்கின்றன. முப்புறமும் கடல் சூழ்ந்த இந்நகரம் நாளுக்கு நாள் அபிவிருத்தி யடைந்து கொண்டு வருகின்றது.

ஷாங்காய் அநுபவம்

பத்து மணி நேரத்திற்குள்ளாக ஒருவாறு ஹாங் காங் பிரயாணத்தை முடித்துக்கொண்டு கப்பலேறி னோம். யாங்ட்ஸே நதியில் பிரயாணம் செய்த பொழுது, ஐராவதி நதியில் பிரயாணம் செய்த ஞாபகம் வந்தது. பல மைல் தூரம் வரை இரு புறங்களிலுமுள்ள தொழிற்சாலைகளையும், கட்டிடங் களையும், நிலப்பரப்புகளையும் கண்டோம். ஷாங்காய் துறைமுகத்தில் நூற்றுக்கணக்கான கப்பல்களும் ஆயிரக்கணக்கான படகுகளும் நின்றன. கப்பலை விட்டுக் கீழே இறங்கியதும் அருகிலுள்ள வீதியில் நடந்து சென்றோம்.

ஜனத்தொகைக் கணக்குப்படி ஷாங்காய், உல கில் ஐந்தாவது பெரிய நகரமாகக் கருதப்படுகிறது. இப்பட்டணம் மூன்று பிரிவாக வகுக்கப் பெற்றுள் ளது. ஒன்று, இன்டர் நாஷனல் டவுன். இரண்டு, பிரெஞ்சு கன்ஸெஷன். மூன்று, சைனீஸ் டவுன். இதில் முதலாவதுதான் மிகப்பெரியது. வியாபார ஸ்தலமும் இதுவே. இது பல வல்லரசுகளின் ஆதிக் கத்திற்குட்பட்டது. இரண்டாவது பிரெஞ்சு கன் ஸெஷன். இது வியாபார ஸ்தலமன்று; வசிக்கு மிடம். அன்னியர்கள் பலர் இங்குதான் வசிக்கின்ற னர். மூன்றாவது சைனீஸ் டவுன். மிகவும் மோச மான இடம் இதுதான். தனியாகச் செல்லும் அன் னியர்கள் பாடு சிறிது சிரமந்தான்.

ஷாங்காய் அநுபவம்

இருபது அல்லது இருபத்தைந்து மாடியுடைய கட்டிடங்கள் பலவற்றை இங்கு காணலாம். குடித்து விட்டுக் கூத்தாடும் மக்களுக்கு இது ஒரு நல்ல நகரம். ஐரோப்பிய பாஷை பலவற்றிலும், சீன பாஷையிலும் இங்கு தினசரிப் பத்திரிகைகள் வெளியாகின்றன. ஆற்றங்கரை வீதி, நாங்கிங் வீதி முதலியவைகளின் இரவுக் காட்சிகள் கவர்ச்சி யுடையனவாகும். மின்சார விளம்பரமும் ஓரளவு குறிப்பிடத் தக்கதேயாகும்.

பொதுவாக ஷாங்காய் நகரை நாங்கள் விரும்பவில்லை. விரைவில் கப்பலுக்கு வந்து சேர்ந்தோம். மறுநாள் பகல் பன்னிரண்டு மணிக்குக் கப்பல் புறப்பட்டது. பல ஜப்பானியர்கள் புதிதாக எங்கள் கப்பலில் ஏறினார்கள். அவர்களை வழியனுப்ப பல ஜப்பானியர்கள் 'கப்பலடி'க்கு வந்திருந்தனர். பன்னிரண்டடிக்கப் பத்து நிமிஷத்திற்கெல்லாம் நூதனமான ஒரு காட்சியைக் கண்டோம். பல வர்ணங்களில் ஒரு இஞ்சு அகலமும் அதிக நீளமுமுள்ள காகித உருளைகளை (ரோல்) கீழே நின்றவர்கள் வைத்திருந்தனர். கப்பலில் நின்றவர்கள் அதன் தலைப்பைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டனர். கப்பல் நகர, நகர, கீழே நின்றவர்கள் காகிதத்தை உருளையினின்று பிரித்துக்கொண்டே யிருந்தனர். கீழே நின்றவர்கட்கும் கப்பலில் நின்றவர்கட்குமிடையே நூற்றுக்கணக்கான வர்ணக் காகிதங்கள் காட்சியளித்தன. கப்பல் சிறிதுதூரம் நகர்ந்ததும், காகிதங்கள் ஒன்றன்பின் ஒன்றாக அறுந்து விழ ஆரம்பித்

தன. பின்னர் கீழே நின்ற ஜப்பானியர்களும், கப்பலில் நின்ற ஜப்பானியர்களும் தங்கட்கு இயற்கையாய் உள்ள உற்சாகத்துடன் விடைபெற்ற காட்சி மிக உருக்கமாய் இருந்தது.

கோபையின் காட்சி

காலை ஆறு மணிக்குக் கப்பல் கோபை துறை முகத்தை யடைந்தது. மிகவும் குளிர்ந்த காற்று வீசியது. ஆயினும் அது சுதந்தரக் காற்ருயிருந்தமை யால் நாங்கள் குளிரைப் பொருட்படுத்தவில்லை. பனி அதிகமாயிருந்ததால் கோபை நகர் கண்ணுக்குப் புலப்படவில்லை. வர வர ஒரு சில தொழிற்சாலை களின் புகைக்கூண்டுகள் மட்டுமே தெரிந்தன. அவ் வளவு அதிகாலையிலும் கூட ஏராளமான படகுகள் 'சக் சக்' எனும் சப்தத்துடன் அங்கு மிங்கும் சென்று கொண்டிருந்தன. சிறிது நேரத்திற் கெல் லாம் ஒரு ஜப்பானிய டாக்டர் எங்களை ஒரு முறை உற்றுப் பார்த்துவிட்டுத் தமது கடமையை நிறை வேற்றி விட்டதாக எண்ணும் பார்வையோடு மூன்ரு வது வகுப்புக்குச் சென்ருர்.

பின்னர் வந்தவர்கள் சுங்க இலாகா கஸ்டம் ஆபீஸர்கள். பொதுவாக இவர்கள் பிரயாணிகட்குக் கஷ்டம் விளைவிப்பது வழக்கம். ஆனல் ஜப்பானில் எங்கள் அனுபவம் வேறு. புகையிலை—புத்தகம் ஆகிய இரண்டையும் தவிர வேறு விஷயங்களில் இவர்கள் கவனம் செலுத்தவில்லை. புகையிலை ஜப்பா னில் அரசாங்கத்தாரின் யேகபோக உரிமை. அன்னிய நாட்டுப் புகையிலையோ அன்றி சிகரெட், சுருட்டு முதலியவைகளோ ஜப்பானுக்கு வருவதை அரசாங்கத்தார் விரும்பவில்லை. சில சமயங்களில் அன்னிய நாட்டுப் புகையிலை முதலியவைகட்கு

அரசாங்கத்தார் நூற்றுக்கு முன்னூறு வீதம் வரி விதிப்பதாகவும் தெரிகிறது. புத்தகங்களைப்பற்றி அரசாங்கத்தார் பயப்படுவதற்குக் காரணம் போல்ஷ்விக் புத்தகங்கள்தான்.

சுறு சுறுப்புடன் கூடிய இரண்டு ஜப்பானிய அதிகாரிகள் எங்களை யணுகி 'தயை செய்து தங்கள் பெட்டி' என்றனர். சாவியைக் கொடுத்தோம். ஒழுங்காகத் திறந்து பார்த்து மூடினர். சில நிமிஷ நேரந்தான். "சிரமத்திற்குத் தயை செய்து மன்னியுங்கள்" என்று பணிவோடு கூறினர் அவ்வதிகாரிகள். எங்கள் பெட்டியைப் பரிசீலனை செய்ததாகக் கையொப்பமிட்டுச் சென்றனர். பின்னர் கப்பலின் மற்றொரு பகுதிக்குச் சென்று போலீசார் அருகில் நின்றோம்.

மூன்று போலீஸ் அதிகாரிகள் ஆழ்ந்த மனதோடு அமர்ந்திருந்தனர். பிரயாணிகள் ஒருவர் பின் ஒருவராகப் போலீசாருக்கு எதிரிலிருந்த நாற்காலியில் அமர்ந்து தங்கள் பாஸ்போர்ட்டுகளைக் காண்பித்தனர். போலீசார் கொடுத்த பாரங்களைப் பூர்த்திசெய்து கொடுத்தோம். பொதுவாகப் போலீசார் நல்லவர்கள்தான். என்றாலும் அவர்கள் கேட்கின்ற கேள்விகள் மட்டும் பல சமயங்களில் அசம்பாவிதமாகவும், சில சமயங்களில் சம்பந்தமின்றியும் இருக்கும். போலீசார் சாதாரணமாகப் பிரயாணிகளைப் பார்த்து "உங்கள் சொந்த நாடு எது? உங்கள் தந்தையார் உயிருடன் இருக்கின்றாரா? ஜப்பானுக்கு வருவதில் உங்கள் நோக்கமென்ன?

எப்பொழுது எந்தக் கப்பலில் திரும்ப உத்தேசித்திருக்கிறீர்கள்?" என்ற கேள்விகளையும் இன்னும் பல கேள்விகளையும் கேட்டுவிட்டு, தங்கள் கடமை முடிவதாக எண்ணி மகிழ்வார்கள். என்னைப் பொறுத்தவரை இச்சடங்குகள் இரண்டு நிமிஷத்தில் முடிந்தன.

• கப்பல் வேலைக்காரர்களும் நாங்களும் விடை பெற்ற காட்சியைக் இன்னும் என் மனக்கண்களிலே காண்கின்றேன். சாமான்களை யெல்லாம் ஒரு போர்ட்டரிடம் கொடுத்துவிட்டுக் கப்பலில் மேல் தளத்திற்கு வந்தேன். புன்சிரிப்புடன் கூடிய நூற்றுக் கணக்கான ஜப்பானியர்களின் முகங்களைப் பார்த்தேன். தாய் நாட்டைவிட்டு ஐயாயிரம் மைல் தூரம் வந்துள்ள இந்நாட்டில் எல்லாம் எனக்குப் புதுமையாகத் தோன்றியது. கப்பலை விட்டுக் கீழே யிறங்கி சிறிது தூரம் சென்றேன். எனது போர்ட்டர் 'டாக்குஸி டாக்குஸி' என்று கத்தினன். அவன் உச்சரிப்பைக் கேட்டதும் என்னை யறியாமலே சிரித்தேன். எனக்கு எதிராக வெழுட்டு ஜப்பானியப்பெண்கள் மேனுட்டுஉடையணிந்தவராய் வந்து கொண்டிருந்தனர். என்னைக் கண்டதும் அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்சிரிப்புக்கொண்டனர். ஒரு பெண் மற்றொரு பெண்ணின் காதில் 'இந்தோ' என்று கூறியது எனக்குக்கேட்டது. இந்தியர்களை 'இந்தோ' என்றுதான் ஜப்பானியர் அழைக்கின்றனர்.

ஜப்பானில் வாடகை மோட்டார்களைப்பற்றி

எவ்வளவோ படித்தும் கேட்டும் இருக்கின்றேன். நான் கேள்விப்பட்டதும் படித்ததும் முற்றிலும் உண்மையே என்பதை எனது அனுபவத்தில் கண்டேன். ஒரு அழகிய போர்டு செடான் மோட்டார் என்னெதிரே வந்து நின்றது. மிக ஒழுங்காக ஆடையணிந்திருந்த டிரைவர் காரை நிறுத்திவிட்டுக் கீழே இறங்கி நின்று வணங்கி நின்ருன். எனது நண்பருடைய விலாசத்தைக் காண்பித்து 'இங்கு செல்ல வேண்டும்' என்றேன். படித்துப் பார்த்துவிட்டுத் தலையைச் சொரிந்தான். விஷயம் தெரியாவிட்டால் ஜப்பானியர்களிற் பலர் தலையையாவது தலைப்பாகையையாவது சொரிவதைக் கண்டிருக்கிறேன். அடுத்த நிமிஷத்தில் டிரைவர் சிரித்துக்கொண்டு தலையை ஆட்டினுன். சாமான்கள் மோட்டாரில் வைக்கப்பட்டன. மோர்ட்டருக்குப் பணம் கொடுக்க என் கையில் ஜப்பான் நாணயம் கிடையாது. எனவே டிரைவரிடம் 'போர்ட்டருக்கு ஒரு யென் கொடு. வாடகையோடு இதனைச் சேர்த்துத் தருகின்றேன்' என்றேன். டிரைவர் மீண்டும் ஒரு முறை வணங்கி ஒரு யென் கொடுத்தான்.

எனது கார் நேராகப் போலீஸ் ஸ்டேஷன் எதிரே போய் நின்றது. டிரைவர் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்ருன். நானும் சென்றேன். அங்கிருந்த கான்ஸ்டேபிள் என்னை மரியாதையாக வரவேற்று அங்கிருந்த நாற்காலியொன்றில் அமரும்படி வேண்டினுன். டிரைவர் அந்த அதிகாரியைப் பணிந்து விலாசத்தைக் காட்டினுன். அதிகாரியும்

டிரைவரைப் பணிந்து விட்டு அந்த வீதிப்படத்தை எடுத்து வீட்டைக் கண்டு பிடித்து டிரைவருக்குக் கூறினன். பொதுவாக ஜப்பானில் மூலைக்கு மூலை போலீஸ் ஸ்டேஷன் இருக்கின்றது. இந்தப் போலீஸ் ஸ்டேஷன்களில், அந்தந்தப் பகுதியிலுள்ள வீதிகளின் படமும், வீடுகளின் படமும் அவ்வீடுகளில் வசிப்பவர்களின் பெயர்களு மிருக்கின்றன. எவ்வளவு தெளிவாக விலாசத்தைக் கொடுத்தாலும், ஜப்பானிய டாக்ஸி டிரைவர்கள் பெரும்பாலும் தவருன இடத்துக்கே செல்வார்கள்.

வழக்கம்போல தவருன வீட்டினெதிரே மோட்டார் நின்றது. கதவைத் திறந்து உள்ளே சென்றேன். அது ஒரு ஜப்பானியர் வீடு. அந்த வீட்டிலுள்ள ஒரு பெண் வந்து ஜப்பானிய முறைப்படி மண்டியிட்டு வணங்கி வரவேற்ருள். குறிப்பிட்ட இந்தியர் இருக்கின்ருரா என வினவினேன். அவள் விளங்காது சிரித்தாள். நான் பேசியது அவளுக்கு விளங்கவில்லை. அவள் பேசியது எனக்கு விளங்கவில்லை. ஆனுல் நாங்களிருவரும் பேசுவதைமட்டும் நிறுத்தவில்லை.

சரியான இடத்திற்கு வந்து சேர்ந்தது மோட்டார். அன்று ஞாயிற்றுக்கிழமை யாதலால் நான் சென்றிருந்த காரியாலயம் மூடப்பட்டிருந்தது. மற்றவர் உதவியால் குறிப்பிட்ட இந்தியரின் வீட்டு விலாசத்தைத் தெரிந்து கொண்டேன். எட்டு மைல் தூரம் சென்றதும், ஒரு அழகிய ஆற்றின் மேல் கரையிலே திரு. ஷாகேயின் வீட்டைக் கண்டேன்.

திரு. ஷாகே ஜப்பானிய உடையில் தோன்றி புன்சிரிப்போடு வரவேற்ருர். இந்திய விஷயங்களை ஆவலோடு விசாரித்தார். நான் பர்மாவிலிருந்து சென்றதால் விவரமாக இந்திய விஷயங்களைக் கூற முடியவில்லை. திரு. ஷாகேயின் அறையில் இந்திய தேசீயக்கொடியையும் ஜப்பானியக் கொடியையும் கண்டேன். இந்திய தேசாபிமானிகளின் படங்களும் அவ்வறையை அழகு செய்தன. எழு வயதுள்ள ஒரு பெண்—திரு. ஷாகேயின் குமாரி அறைக்குள் ஓடிவந்தாள். என்னைக் கண்டதும் 'வந்தே மாதரம்' என்று கூறி வணங்கிஞள். நானும் வந்தேமாதரம் கூறி எனது வணக்கத்தைத் தெரிவித்தேன். திரு. ஷாகேயின் குமாரத்தி ஸ்டேஷன் வரை வந்து வழி விட, எலக்டிரிக் டிரெயினில் கோபை வந்து, 'இந்தியா லாட்ஜை' அடைந்தேன். லாட்ஜ் மானேஜர் இந்துஸ்தான் பாஷையில் வரவேற்ருர். பூட்ஸைக் கழற்றிவிட்டு மேன் மாடிக்குச் சென்றேன். எல்லாம் எனக்குப் புதுமையாயிருந்தது. மரவீடு. கீழே தரை முழுதும் பாய். ஒருபுறம் கண்ணுடி ஜன்னல்கள்; மறுபுறத்தில் காகிதக் கதவுகள். பூட்டு என்பது கிடையாது. விருப்பத்திற்குத் தக்கபடி கதவுகளைத்தள்ளி வைத்துக்கொள்ள வேண்டியதுதான். அறையின் மத்தியில் ஒரு மெத்தை. கனத்த தலையணை ஒன்று. மெதுவான தலையணை ஒன்று. (ஜப்பானியர் கனத்த தலையணையைத்தான் உபயோகிப்பது வழக்கம்) கனத்த ரஸாய் (போர்வை போன்றது) ஒன்று. கண்ணுடி ஜன்னல்

வழியாகப் பார்த்தால் கோவை துறைமுகமும் தோட்டத்திலுள்ள அழகிய புஷ்பங்களும் கண்ணுக்குப் புலனாகும்.

இப்புதிய வாழ்க்கை எனக்கு மிகவும் மகிழ்ச்சியை யளித்தது. அன்றியும் ரொட்டியும் டாலும் (பருப்பும்) கிடைத்தது எனது மகிழ்ச்சியை அதிகப்படுத்திற்று. முதன் முதலாக லாட்ஜிலிருந்து ஒரு மாணவரையும், திரு. கே. சி. பானர்ஜி (சைகிலில் உலகப்பிரயாணம் செய்பவர்) யையும் சிநேகம் செய்துகொண்டேன். அவர்கள் மூலம் பெப்பு எனும் ஜப்பானியரை அறிந்தேன். மிஸ்டர் பெப்புவும் மிஸஸ் பெப்புவும் அடிக்கடி இந்தியா லாட்ஜுக்கு வருபவர்கள். மிஸ்டர் பெப்பு டன்லப் ரப்பர் கம்பெனியில் வேலை செய்கின்றார். அவர் இயந்திரத்தில் வேலை செய்தபொழுது ஒரு ஆபத்து நேர்ந்தது. அந்த ஆபத்தில் அவருடைய இரு கைகளையும் (முழங்கை வரை) இழந்து விட்டார். இருந்தபோதிலும் அவர் சாப்பிடுவதையும் எழுதுவதையும் பார்த்துப் பெரிதும் ஆச்சரியமடைந்தேன். மிஸ்டர் பெப்புவுக்கு இங்கிலீஷ் சுமாராய்த் தெரியும். மிஸஸ் பெப்புவுக்கு இங்கிலீஷ் தெரியாது.

தினந்தோறும் மிஸ்டர் பெப்பு என்னிடம் வருவார். இவர் உதவிகொண்டு சில ஜப்பானிய வார்த்தைகளை—சுமார் நூறு வார்த்தைகளிருக்கலாம்—கற்றுக்கொண்டேன். ஜப்பானியரின் வாழ்க்கையைக் குறித்த பல விஷயங்களை இவர் அடிக்கடி கூறுவதுண்டு. மிஸஸ் பெப்புவுக்கும் எனக்கும்

'கொம்பான்வா' (இரவு வணக்கம்) 'அரிகாதோ' (வந்தனம்) என்ற வார்த்தைகளைத் தவிர வேறு சம்பாஷணை கிடையாது. நான் பர்மாவிலிருந்து எடுத்துச் சென்ற அப்பளத்தில் இருவருக்கும் பிரிய மதிகம். இந்த அப்பளத்தின் மூலம் எங்கள் சிநேகம் அதிகமாக அபிவிருத்தி யடைந்தது என்று கூறலாம்.

உலகத்தில் எத்தனையோ விதமான பைத்தியங்களுண்டு. அதில் சினிமாப் பைத்தியம் ஒன்று. நான் இப்பைத்தியக்கார கோஷ்டியைச் சேர்ந்தவனென்று ஒருவாறு கூறலாம். நான் கோபையில் இறங்கிய அன்று தினமே சினிமாவுக்குச் செல்ல எண்ணினேன். ஜப்பானில் குறிப்பிட்ட சில நகரங்களில் சினிமாத் தியேட்டர்கள் மிக நல்ல முறையில் அமைக்கப்பட்டுள்ளன. டோக்கியா நகரிலுள்ள 'நிப்பன் கெய்ஜா' எனும் தியேட்டரில் நாலாயிரம் மக்கள் உட்காருவதற்குப் போதிய வசதியிருக்கிறது. சில பெரிய சினிமாக்களிலும் தியேட்டர்களிலும் முதல் வகுப்பு, இரண்டாவது வகுப்பு என்ற பேதம் கிடையாது. சாதாரணமாக நான்கணு அல்லது ஆறணுத்தான் டிக்கட். எல்லோருக்கும் ஒரே மாதிரியான வெல்வெட் 'குஷன்' நாற்காலிகள்தான்.

சினிமாக் காண்பிப்பதில் ஜப்பானுக்கும் இந்தியாவுக்கும் பெருத்த வித்தியாசம் இருக்கிறது. இந்தியாவில் மூன்றரை மணி, ஆறரை மணி, ஒன்பதரை மணி என்று குறிப்பிட்ட காட்சிகள் நடக்கும். ஒரு படமும் சில செய்திகளும் (News) காண்பிப்பார்கள். ஆனல் ஜப்பானில் அப்படியன்று. காலை 11 மணிக்கு

சினிமாத் தொடங்கி விட்டால் இரவு 11 மணிக்குத்தான் நிறுத்துவார்கள். இரண்டு அல்லது மூன்று படங்கள் சாதாரணமாகக் காண்பிப்பார்கள். இப் படங்களை ஒரு முறை பார்ப்பதற்குச் சுமார் நான்கு மணி நேரம் செல்லும். மீண்டும் திருப்பி இப்படத்தையே காண்பிப்பார்கள். ஒவ்வொரு படத்திற்கும் இடையில் பதினைந்து நிமிஷம் இடைக்காலம். ஜனங்கள் தாங்கள் விரும்புகின்ற சமயத்தில் சினிமாவுக்குச் செல்லலாம். ஒரு டிக்கட் வாங்கிவிட்டால் நாள் முழுதும் சினிமா பார்த்துக்கொண்டேயிருக்கலாம்.

சினிமாக்களில் ஜப்பானிய பாஷைப் படங்களும் இங்கிலீஷ், பிரெஞ்ச் முதலிய பாஷைப் படங்களும் காண்பிக்கப்படுகின்றன. பொதுவாக ஜப்பானியர்களுக்கு அன்னிய பாஷைகளில் போதிய பயிற்சியில்லை. எனவே ஒவ்வொரு சினிமாத் தியேட்டரிலும் 'விளக்கிக் கூறுபவர்' (Speaker) ஒருவர் இருக்கின்றார். படம் காண்பித்துக் கொண்டிருக்கும்பொழுது அப்படத்தில் வரும் நடிகர்கள் அன்னிய பாஷையில் பேசுவதை இவர் மொழி பெயர்த்துக் கூறுவார். ஆனால் இம்முறை வெற்றியளிக்கவில்லை யென்றுதான் கூறவேண்டும். அந்நியர்கள் இம்முறையைக் கண்டு அருவருப்படைகின்றார்கள். ஏனெனில், 'டாக்கி'யில் பேசுவதும் கேட்கவில்லை; இவர் கத்துவதும் விளங்கவில்லை. இந்நிலையில் யாருக்குத்தான் வெறுப்பு உண்டாகாது?

நானறிந்தவரை ஜப்பானியர்களிற் பலரை 'சாக்லெட் பிரியர்'கள் என்றுதான் கூறவேண்டும். தியேட்டர்களிலும் மற்ற விடங்களிலும் ஜப்பானியர்கள் ஆண்களும் பெண்களும், வயோதிகர்களும், இளைஞர்களும் சாக்லெட்டைப் பிரியமாகச் சாப்பிடுவதைப் பார்த்துள்ளேன். ஆனால் இந்த சாக்லெட் இந்தியாவிலும் பர்மாவிலும் நாம் காண்கின்ற 'நெஸ்ல்ஸ் சாக்லெட்' அல்லவென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். ஜப்பானிய சாக்லெட்டுகள் உயர்ந்த ரகமாயில்லாத போதிலும் மிக மலிவாய் இருக்கின்றன.

தியேட்டர்களிலும் மற்றப் பொதுவிடங்களிலும் ஜப்பானியர் நடந்துகொள்ளும் முறை மிகவும் போற்றத் தக்கது. மிகவும் அமைதியாக விருப்பார்கள். அநாவசியமாகப் பேசமாட்டார்கள். அப்படிப் பேசச் சந்தர்ப்பம் ஏற்பட்டாலும் மிகவும் மெதுவாகப் பேசுவார்கள். சிரிப்பது, கைதட்டுவது போன்றவைகள் கூட ஓர் அளவுக்கு உட்பட்டன என்பதையறிந்து வியப்புற்றேன். தியேட்டர்களில் லாகிரி வஸ்துக்கள் உபயோகிப்பது கிடையாது. சிகரெட் குடிக்கும் மக்களுக்காக, தியேட்டர்களில் தனியே சில அறைகள் ஒதுக்கி வைத்திருக்கின்றனர்.

காகிதங்களையும் குப்பைகளையும் யாரும் கீழே எறிவதில்லை. அதற்கென வைக்கப்பட்டுள்ள கூடைகளில் தான் குப்பைகளைப் போடுவார்கள். படம் காண்பித்து வரும்பொழுது மத்தியில் தடைப்பட்டுப் போனால் நம் நாட்டைப்போன்று கை தட்டிக் கூப்

பாடு போட்டுப் போர் புரிய மாட்டார்கள். சிறிது உரத்த சிரிப்போடு விஷயம் திருப்தியாக முடிந்து விடும். நம் நாட்டில் நாடகங்கள் முதலியன நடத்தும் பொழுது பாதுகாப்புக்குப் போலீசார் உதவியை நாடுவது சாதாரணம். இங்கு அவ்வழக்கம் அறவே கிடையாது. இருபது அல்லது முப்பது இளம் பெண் கள் தான் தியேட்டர்களில் வேலை செய்கின்றனர். எத்தகைய சண்டை சச்சரவுகளும் பொதுவாக ஏற் படுவதில்லை. டிக்கட் வாங்குவதிலும் கூட நெருக்கடி யில்லை. ஒருவர் பின் ஒருவராகச் செல்வார்கள்.

ஒஸாக்கா நகரில் பாவைக்கூத்து ஒன்றுக்குச் சென்றிருந்தேன். நம் நாடு பாவைக் கூத்திற்குப் பேர் பெற்றது. ஆனால் அக்கலையை ஆதரிப்போர் இப் பொழுது யாருமிலர். பாவைக் கூத்துகள் இப்பொ ழுது நடப்பதைக் காணோம். அப்படி நடந்தாலும் யாரும் அதனைப் பார்க்கப் போவதில்லை. யாராவது பார்க்கச் சென்றாலும் அவர்களுக்குப் பைத்தியக் காரப் பட்டம் கட்ட மற்றவர்கள் முனைந்து நிற்கின் றார்கள். ஜப்பானில் நிலைமை வேறு. பழமையை உண்மையாகப் போற்றுவதில் அவர்கட்கு விருப்ப மதிகம். இந்தப் பாவைக் கூத்து விநோதமானது. ஒரு நல்ல தியேட்டரில் (சில நாற்காலிகள் உண்டு) ஜப்பானிய முறைப்படி கீழே பாய் விரித்து அதன் மீது திண்டு போட்டு, ஜப்பானியர் அமர்ந்திருப்பார் கள். இத் தியேட்டரில் இரண்டு வகுப்புகள் உண்டு. முதலாவது வகுப்புக் கட்டணம் இரண்டரை யென். இரண்டாவது வகுப்புக் கட்டணம் ஒன்றேகால்

யென். குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாக ஏரா ளமான மக்கள் தியேட்டருக்கு வருகின்றனர். இப் பாவைக்கூத்து தினந்தோறும் நடைபெறுகிறது. என்றபோதிலும் சிலதினங்களில் இங்கு டிக்கட். கிடைப்பது கஷ்டமாகி விடுகிறது. இக்கூத்திற்கு விஜயம் செய்கின்றவர்கள் பெரும்பாலும் வயது முதிர்ந்தோர்களே.

சாதாரண மனிதர்களிற் பாதியளவுள்ள பொம் மைகளை இரண்டு அல்லது மூன்று மனிதர்கள் தூக் கிக் கொண்டு வருவார்கள். அதில் ஒருவர் தவிர மற்றவர்கள் உச்சி முதல் உள்ளங்கால் வரை முகத் தையும் மறைத்து கருப்பு உடையணிந்திருப்பார்கள். எல்லாப் பொம்மைகளைக் கொண்டு வருபவர்களும் இம்மாதிரியே. தியேட்டரின் மறுபுறத்தில் இருவர் அமர்ந்திருப்பர். ஒருவர் புத்தகத்தைப் பார்த்து இசை யுடன் பாடுவார். பிறிதொருவர் இசை யிசைப்பார். இவர் பாடுவதற்குத் தக்கபடி பொம்மை ஆட்டப் படும். இது நம் போன்ருர்க்கு அவ்வளவு ஸ்வாரஸ்ய மாகத் தோன்ருது. என்ருலும் வயது முதிர்ந்த ஜப் பானியர்கள் இதனை விரும்பிப் போற்றி ஆதரிக்கின் றனர்.

முக்கியமாகக் குறிப்பிட வேண்டுவது தாக்கர- ஸுக்கா தியேட்டர். தாக்கரஸுக்கா எனும் அழ கிய சிறு நகரம் கோபைக்கும் ஓஸாக்காவுக்கும் மத்தி யில், மலையடிவாரத்தில் ஆற்றங்கரையில் அமைந்துள் ளது. பிரபலமான தாக்கரஸுக்கா தியேட்டர் இங்கு தான் இருக்கிறது. நம் நாட்டு மன்னர்களுடைய

அரண்மனை யொன்றிற்கு இதனை ஒப்பிடலாம். அழகிய நந்தவனத்தின் மத்தியில் அமைந்துள்ள தியேட்டரிலிருந்து நோக்கினல் ஒருபுறம் உயர்ந்த மலையும், மற்ருெருபுறம் அழகிய ஆறும் தென்படும். நூற்றுக் கணக்கான மக்கள் அமர்ந்து சாப்பிடுவதற்கேற்ற உணவுச் சாலைகள் இங்குள. எங்கு நடந்தாலும் வெல்வெட் மீதுதான் நடக்க வேண்டும். தினந்தோறும் இருமுறை (பகல் ஒரு மணியிலிருந்து ஐந்து மணி வரை, மாலை ஆறு மணியிலிருந்து இரவு பதினெரு மணிவரை) நாட்டியங்களும், நவீன டான்சுகளும் நடைபெறுகின்றன. சுமார் இருநூறு இள நடிகர்கள் நடிக்கின்றனர். அனைவரும் பெண்கள்தான். ஐயாயிரம் மக்களுக்கு மேலாக இங்கு அமர இடமுண்டு. கட்டணம் நான்களுதான். எல்லோருக்கும் ஒரேமாதிரியான நாற்காலிதான். கீழ் நாட்டிலுள்ள மிகப் பெரிய தியேட்டர்களில் இதுவும் ஒன்று. சீன்கள் மிகஉயர்ந்த முறையில் இயற்கையைப் போன்றிருக்கின்றன. பலநாட்டு நடனங்களையும் பண்டைய—புதிய ஜப்பானியப் பாடல்களையும் கேட்கலாம். நூற்றுக் கணக்கான அழகிய இளம் ஜப்பானியப் பெண்கள், வித விதமான ஆடையணிந்து, பல விதமான நாட்டியங்கள் ஆடுவது பார்ப்பதற்கு மிக நன்ருக விருக்கும்.

கூட்டம் நிறைந்த தியேட்டர்களை விட்டு விட்டு நந்தவனங்கட்குச் சென்று அமைதியாகக் காலங் கழிப்போம். ஜப்பானை ‘நந்தவனங்களின் நாடு’ என்று கூறினல் மிகையாகாது. டோக்கியோ நகரில்

மட்டும் 128 நந்தவனங்கள் இருக்கின்றன. நந்தவனங்கள் இல்லாத ஊரைப் பார்ப்பது மிகவும் கஷ்டம். நாராபார்க் என்பது 1300 ஏக்கர் நிலப் பரப்புள்ளதாகும். டோக்கியோவிலுள்ள கெபியா பார்க்கும், ஊனே பார்க்கும் மிகப் பெரியது. நிக்கோ-எங்கும் நந்தவனங்கள் தான். மலை மீதும் சரி, ஆற்றங் கரையிலும் சரி, சமவெளியிலும் சரி எங்கும் நந்தவனங்களையும் நறுமண மலர்களையும் காணலாம். ஜப்பானின் தேசீயப் புஷ்பம் 'செரி'யும் 'கிரிஸாந்த'மும் தான். 'உங்கள் நாட்டு தேசீயப் புஷ்பம் எது?' என்று ஒரு ஜப்பானிய நண்பர் என்னைக் கேட்டபொழுது ஒன்றும் கூருது சிரித்துக் கொண்டிருந்தேன். நாம் சுயாட்சி பெற்றவுடன் தேசீயப் புஷ்பத்தை நிர்ணயித்துக் கொள்வோம் என்று எண்ணிக்கொண்டு எனது நண்பருக்குச் சரியான பதில் கூருது எனது சம்பாஷணையை வேறு வழியில் திருப்பினேன்.

கோபைக்கு அருகில் அக்காஸி என்ற விடத்திலுள்ள விவசாயப் பண்ணைக்குச் சென்றேன். அப்பண்ணை ஒரு ஜில்லாவின் (Prefecture) தலைமை ஸ்தாபனமாகும். அங்கு நெல், பழ வர்க்கம், புஷ்பங்கள் முதலியன பயிரிடப் பட்டிருக்கின்றன. சுமார் இருபது மாணவர்கள் அங்கு தங்கிப் பயில்கின்றனர். அப்பண்ணையின் தலைமையதிகாரி மிக அன்புடன் வரவேற்றார். மற்ற அதிகாரிகளுக்கு அறிமுகப் படுத்தினர். சென்ற சில வருடங்கட்கு முன் பர்மாவிலிருந்து ஜப்பானுக்கு அரிசி இறக்குமதியாயிற்றென்

றும் இப்பொழுது ஜப்பான் மற்ற நாடுகளுக்கு ஏற்று மதிக்குச் செய்யக்கூடிய நிலைமையி லிருக்கிறதென் றும் கூறினர். பழங்களை எவ்வாறு பக்குவப்படுத்தி டப்பிகளில் அடைப்பது என்பதை அனுபவபூர்வ மாய்க் காண்பித்தார். பண்ணையில் அடிக்கடி விவ சாயிகளின் கூட்டம் நடைபெறுமென்றும், அப் பொழுது விவசாயத்தை எப்படி அபிவிருத்தி செய் வது என்பது குறித்துப் பிரசங்கங்கள் நடைபெறு மென்றும் கூறினர். சுமார் இரண்டுமணி நேரத்தில் எல்லாவற்றையும் பார்த்த பின்னர் 'விசிட்டர் ஹாலு'க்குச் சென்றோம். கிரேப் ஜூஸ், அருமை யான 'நாஸி' (ஜப்பானிய பியர்ஸ்) மணமுள்ள கிரி சாந்தப் புஷ்பம் முதலியவைகளை அன்புடன் அளித்து வீதிவரை வந்து வணங்கி வழிவிட்டனர் அவ்வதிகாரி கள்.

ஜப்பானில் எந்த விடத்திலும் சரி, டிராம், பஸ், முதலியவைகள் மிகவும் சௌகரியமாக விருக்கின் றன. கண்டக்டர்கள் அனைவரும் பெண்கள்தான். முக்காலணவுக்கு ஒரு டிக்கட் வாங்கிவிட்டால் ஐந்து அல்லது ஆறு மைல் தூரம் டிராம் வண்டியில் பிரயாணம் செய்யலாம். டிராம் வண்டியைவிட பஸ் அதிக சௌகரியமானதென்று எனக்குத் தோற்று கிறது. பஸ் டிக்கட் குறைந்தது ஒன்றேகால் அணா. அதற்குமேல் பிரயாணம் செய்யும் தூரத்திற்குத் தகுந்தாற்போல் கட்டணம் வசூலிக்கின்றனர். டிராம், பஸ் முதலியவைகளில் வகுப்பு வித்தியாசம் கிடையாது. எல்லோரும் ஒரு மாதிரிதான். பெரும்

பாலும் டிராம் வண்டிகளில் கூட்டம் அதிகமிருக்கும். ஏராளமான ஆண்களும், பெண்களும் ஒருவர் மீது ஒருவர் சாய்ந்து கொண்டும் நிற்பார்கள். ஆனால் இதுவரை ஒருவராவது முறைதவறி நடந்ததாக ஒரு புகாரும் இல்லை. ஒவ்வொருவரும் தனது வேலையைத் தான் கவனிக்கின்றனர். மற்றவர் விஷயத்தில் அநாவசியமாகத் தலையிட்டுக் கொள்வதில்லை. குழந்தைகள் விஷயத்தில் ஜப்பானியர் அனைவருமே மிக அன்பாக நடந்துகொள்கின்றனர். டிராம் அல்லது பஸ் முதலியவைகளில் ஒரு குழந்தை நிற்பதைக் கண்டால் உடனே அவர்கள் எழுந்து நின்று குழந்தையை அன்போடு தூக்கித் தாங்கள் இருந்த விடத்தில் உட்காரவைக்கும் காட்சி மிகவும் உருக்கமானதாகும்.

டோக்கியோ—ஜப்பானின் தலைநகர்

கோபையிலிருந்து டோக்கியோவுக்கு எக்ஸ்பிரஸ் டிரெயினில் இரண்டாவது வகுப்பில் பிரயாணம் செய்தேன். 350 மைல் தூரம், பத்துமணி நேரத்தில் எக்ஸ்பிரஸ் டோக்கியோவை அடைந்தது. அப் பிரயாணத்தில் எனக்குக் களைப்போ அன்றிச் சோர்வோ ஏற்படவில்லை. ரயிலில் பிரயாணம் செய்ததாகவே எனக்குத் தோன்றவில்லை. ஏதோ ஊஞ்சலில் இருப்பது போலத் தோன்றிற்று. ரயில் பிரயாணத்தில் இயற்கையாயுள்ள 'கடக் கடக்' என்ற சப்தத்தை நான் கேட்கவேயில்லை. அன்றியும் இந்த ரயில்களில் ஒரு விசேஷம் என்னவென்றால், இவைகள் கத்துவதேயில்லை. குறிப்பிட்ட காலம் தவறுவதுமில்லை. பிரயாணிகள் தங்கள் சாமான்களைத் தங்களுடன் வைத்துக்கொண்டு மற்ற பிரயாணிகட்குத் தொந்தரவு கொடுப்பதில்லை. சாமான்களை—சிறிய தோல் பைகள் அல்லது பெட்டிகள் தவிர—ஸ்டேஷனில் இதற்கெனவுள்ள அதிகாரியிடம் சேர்ப்பிக்கின்றனர். அவர் ஒரு ரசீது கொடுக்கிறார். பிரயாணிகள் தாங்கள் இறங்கியதும், அந்த ஸ்டேஷனில் இதற்குள்ள அதிகாரியிடம் இந்த ரசீதைக் கொடுத்துத் தங்கள் சாமானைப் பெறுகின்றனர். இச் சிறந்த முறையினால் காலதாமதமும், பணச் செலவும் மற்ற பிரயாணிகட்கு நேரும் கஷ்டங்களும் குறைகின்றன.

ரயில், ஸ்டேஷன்களில் நின்றதும் 'கார்டு' பிரயாணிகளின் சாமான்களை ரயிலினின்று கீழே எடுத்து வைத்துப் பணிந்து நிற்கும் காட்சியைக் கண்டேன். இந்தக் கார்டுகள் குழந்தைகளை அன்போடு தூக்கிச்சென்று ரயிலைவிட்டுக் கீழிறக்கி தாய்மார்களிடம் கொடுப்பது மிகவும் சர்வசாதாரணம். இவைகளைப் பார்த்தபொழுது எனக்கு 'இந்தோ—சிலோன் போட்மெயில்' ஞாபகம் வந்தது. நமது 'கார்டு'கள் பிரயாணிகளை அவர்களின் கையைப் பிடித்து இழுத்து ரயிலினின்று வெளியேற்றுவதையோ அல்லது புளி மூட்டை போல ரயில் வண்டிக்குள் தள்ளுவதையோ பலமுறை பார்த்திருக்கின்றேன். நல்லவேளையாக அத்தகைய 'கார்டு'கள் இங்கில்லை. இங்குள்ள அதிகாரிகள் தங்களைப் பொது மக்களின் வேலைக்காரர்களாகக் கருதுகின்றார்களே தவிர, தாங்கள் பொது மக்களைவிட உயர்ந்தவர்களென்று கருதுவதில்லை.

உலகத்தில் மிகச்சிறந்த ரயில்வேக்களில் ஜப்பான் ரயில்வேயும் ஒன்று. பர்மா ரயில்களில் யாராவது ஒரு பிரயாணி முதலில் வந்து மெத்தையை விரித்து விட்டால் அந்தவிடம் அவருக்கு 'ரிசர்வ்' ஆகிவிடும். இங்கு ஒவ்வொருவரும் தங்களுக்கு நியாயமாக உள்ள இடத்தில் தான் அமருவார்கள். எதிரேயுள்ள ஆசனங்களில் காலைத் தூக்கி வைத்துக் கொண்டிருக்கும் மக்களையோ அன்றித் தங்கள் இடத்தில் படுத்துக் கொண்டிருக்கும் மக்களையோ பார்க்க முடியாது. சிகரெட், சுருட்டு முதலியன ரயில் வண்டிகளில் உபயோகிக்கக் கூடாது. எனவே புகை

நாற்றத்தைப் பற்றிய கவலையில்லை. ரயில் வண்டிகள் புறப்படும் சப்தமோ அல்லது நிற்கும் சப்தமோ பல சமயங்களில் கேட்காது. ஒரு முறை இந்த ரயில் என்னை ஏமாற்றி விட்டது. கோயைமிலிருந்து கியோத்தோவுக்கு மூன்ருவது வகுப்பில் பிரயாணம் செய்தேன். மூன்ருவது வகுப்பு வண்டிக்குச் சென்று அமர்ந்தேன். நமது நாட்டு முதலாவது, வகுப்பு வண்டிகளை விட இவைகள் மிக உயர்ந்த முறையிலிருந்தன. இது மூன்ருவது வகுப்புத் தாஞ என்ற சந்தேகத்துடன் ரயிலை விட்டுக் கீழிறங்கி, வண்டியின் வெளிப்புறத்தில் குறிக்கப் பெற்றுள்ள நம்பரை இருமுறை உற்று நோக்கினேன். மூன்று என்று தான் குறிப்பிடப் பட்டிருந்தது. பின்னர் 'தைரியமாக' எனது இடத்தில் அமர்ந்தேன்.

டோக்கியோப் பிரயாணத்தைச் சிறிது கூறு வோம். இரண்டாவது வகுப்பில் பிரயாணம் செய்த மக்கள் மிகவும் சொற்பம். ஒரு ஆங்கிலேயரும் எனக்கு அடுத்தாற் போலிருந்த இடத்தில் அமர்ந் திருந்தார். அவர் தூங்காத நேரம் தவிர ஏனைய நேரங்களில் சில ஜப்பானியர்களோடு பேசினேன். எனக்கு ஜப்பானிய பாஷையில் எவ்வளவு 'பாண் டித்யமோ' அவ்வளவு 'பாண்டித்யம்' தான் அவர் களுக்கு ஆங்கில பாஷையில் இருந்தது. ஆனல் ஒரு ஜப்பானியப் பெண் மட்டும் நன்ருக ஆங்கிலம் பேசி ஞள். வழி நெடுக நாங்கள் கண்ட காட்சிகளின் தன்மையை விளக்கிக் கூறிஞள். பின்னர் 'ஜப்பா னைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?'

என்ருள். இம்மாதிரியான கேள்விகள் கேட்பது ஜப்பானியர்கட்கு வழக்கமாகிவிட்டது. உயர்ந்த அதிகாரி முதல் காபி கிளப்பில் வேலை செய்யும் பெண் வரை இம்மாதிரியான கேள்விகளைக் கேட்கின்றனர்.

சில மணி நேரம் சென்றதும் ஒரு ஸ்டேஷனில் ஜப்பானியப் பெரியார் ஒருவர் நானிருந்த வண்டிக்குள் வந்து என்னருகில் அமர்ந்தார். உடனே ஜப்பானியப் பெண்மணி என்னை நோக்கி 'இவர் தான் கான் கிக்குச்சி. ஜப்பானில் முதல் தரமான நாவலாசிரியர். பல பத்திரிகைகளின் ஆசிரியர்' என்று கூறி அறிமுகப் படுத்திஞள். அப்பெரியார் ஜப்பானிய முறைப்படி வணங்கித் தமது பெயர் பொறித்த சீட்டை என்னிடம் கொடுத்தார். நானும் வணங்கி எனது பெயர் பொறித்த சீட்டை அவரிடம் கொடுத்தேன். அவர் அதனைப் படித்து விட்டு 'நாமிருவரும் ஓரினத்தைச் சேர்ந்தவர்கள் தான்' என்று கூறி கை குலுக்கிஞர். "இந்தியாவின் நிலைமை எப்படியிருக்கிறது? திரு. காந்தி சௌக்கியமா? திரு. தாகூர் சுகமாய் இருக்கின்ருரா?" என்று கேட்டார். பின்னும் அவர் கூறிஞர்:—'காந்தியடிகளை ஜப்பானியர் பெரிதும் போற்றுகின்றனர். அப்பெரியாரை உலகம் முழுவதும் போற்றுவதில் வியப்பொன்றுமில்லை. கவி தாகூரை ஜப்பானியர் நன்கறிவர். அவர் கதைகளில் ஜப்பானியருக்கு மோகமதிகம். ஜப்பானிய பாஷைகளில் அவருடைய நூல்கள் மொழிபெயர்க்கப் பெற்றுள்ளன.'

சிறிது மௌனத்திற்குப் பின் 'இத்தாலி-எதியோப்பியாவைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?' என்று கேட்டார் நாவலாசிரியர். "பலமுள்ளவன் எது வேண்டுமானாலும் செய்யலாம். மற்ற வல்லரசுகள் முன்னே என்ன செய்தனவோ அதைத்தான் இத்தாலி இப்பொழுது செய்கின்றது. ஜப்பான் தனது பலத்தால் மஞ்சூரியாவை எடுத்துக் கொண்டது. இத்தாலி தனது பலத்தால் எதியோப்பியாவை எடுத்துக்கொள்ள முயற்சிக்கிறது. தவறென்ன இதில்?" என்று பதில் கூறினேன். "நீங்கள் கூறுவது உண்மைதான். என்றாலும் ஜப்பான் மஞ்சூரியாவை நாகரிகப் படுத்த முயற்சிக்கிறது" என்றார். "இம்மாதிரிதான் இத்தாலியும் எதியோப்பியாவை நாகரிகப்படுத்த முயற்சிக்கிறது" என்றேன். எங்கள் சம்பாஷணை ஒருவாறு முடிந்ததும் அவர் யோகஹாமா ஸ்டேஷனில் இறங்கினார். இறங்கும் பொழுது டிராமா டிக்கட் ஒன்றை என்னிடம் கொடுத்து 'அவசியம் இந்நாடகத்திற்கு வாருங்கள்' என்று கூறி அன்புடன் விடைபெற்றுச் சென்றார். அந்தக் குறிப்பிட்ட நாடகம் இவரால் எழுதப் பெற்றதெனப் பின்னர் அறிந்து கொண்டேன்.

ரயில் டோக்கியோ ஸ்டேஷனை அடைந்தது. டோக்கியோ ஸ்டேஷனின் முகப்புத் தோற்றம் ரங்கூன் ஸ்டேஷனின் தோற்றம் போலவே இருந்தது. ரயிலை விட்டுக் கீழிறங்கியதும், என்னைவிட உயரமான ஒரு இந்திய நண்பர் என்னை மகிழ்ச்சி

யுடன் வரவேற்ருர். இவர்தான் திரு. வி. சொக்க லிங்கம். திரு. கண. உல. வெ. வெள்ளையப்ப செட்டியாரின் குமாரர். சென்ற சில வருட காலமாக டோக்கியோ டெக்னிகல் யூனிவர்சிடியில் எலக்ட்ரிக் என்ஜினீரிங் பயின்று வருகின்ருர். அங்குள்ள இந்திய மாணவர் சங்கத்திற்கும் இவர் தான் காரியதரிசி. இவரைக் கண்டதும் மிகவும் ஆர்வத்தோடு தமிழில் பேசினேன். அப்பொழுது நானடைந்த மகிழ்ச்சி எல்லையற்றதாகும். அன்னிய நாட்டுக்குச் செல்லும்போது தான் தாய்மொழியின் இனிமையும் அதன் பெருமையும் நன்கு புலனுகின்றது.

டோக்கியோ மிகவும் பெரிய நகரம். ஜனத்தொகை 60 லட்சம். உலகத்தில் மூன்ருவது ஸ்தானம் வகிக்கிறது. பிரயாண வசதிகள் மிக அதிகம். ரிக்ஷாக்களை இப்பொழுது ஜப்பானில் காண்பது மிகவும் அபூர்வம். வெளிநாட்டு யாத்ரீகர்களை முன்னிட்டு சில ஹோட்டல்களில் மட்டும் ரிக்ஷாக்கள் வைத்திருக்கின்ருர்கள். ரிக்ஷாக்களை ஜனங்கள் ஆதரிக்கவில்லை. பறக்கும் உலகத்தில் ரிக்ஷாக்களுக்கு இடமேது? வாடகை மோட்டார்கள் ஆயிரக்கணக்காய் இருக்கின்றன. நான்கணுவுக்கு இரண்டு மைல் தூரம் சாதாரணமாகப் பிரயாணம் செய்யலாம். ஆறு அல்லது எழு அணுவுக்கு நாலைந்து மைல் பிரயாணம் செய்யலாம். ஜப்பான் டாக்ஸிகள் மிகவும் வேகமாகச் செல்லுகின்றன. டோக்கியோவில் டிராம், பஸ் முதலிய

வைகளில் கூட்டம் எப்பொழுதும் அதிகம். டோக்கியோ, ஒஸாக்கா, கோபை முதலிய விடங்களில் பூமிக்குக் கீழ் எலெக்ட்ரிக் டிரெயின்கள் ஓடுகின்றன. மிகமிகச் சொற்ப கட்டணத்தில், இவைகளில் விரைவாகப் பிரயாணம் செய்யலாம். ஜப்பானில் சைகில் வண்டிகளை அபரிமிதமாக உபயோகிக்கின்றார்கள்.

"நிக்கோவைப் பார்ப்பதற்கு முன் எதையும் அழகுடையதென்று சொல்லாதே" என்பது ஜப்பானியப் பழமொழி. இது முற்றிலும் உண்மையாகும். ஜப்பானின் அழகெல்லாம் நிக்கோவில் ஒருங்கே திரண்டிருக்கிறது என்று கூறினும் பொருந்தும். டோக்கியோவிலிருந்து புறப்படும் எலக்ட்ரிக் ரயில் மூன்று மணி நேரத்தில் நிக்கோ ஸ்டேஷனை அடைகிறது. சிறிது தூரத்திலுள்ள பண்டைய ஆலயங்களைப் பார்வையிடக் குறைந்தது இரண்டு மணி நேரமாவது செல்லும். இரண்டு மணி நேரப் பிரயாணத்தில் மலை யுச்சியை அடையலாம். வழி முழுதும் இயற்கைக் காட்சிகள் கண்கட்கு விருந்தளிக்கின்றன என்று கூறவேண்டும். மோட்டார் பல மலைகளைப் பாலங்கள் மூலம் கடந்து செல்லும் காட்சி உண்மையிலேயே இன்பம் பயப்பதாகும். மலை யுச்சியில் பெரியதொரு நீர்வீழ்ச்சி. நானூறு அடி உயரமிருக்கலாம். மலையைக் குடைந்து முன்னூறு அடி (Lift) கீழே சென்று நீர் வீழ்ச்சியை நன்கு காணலாம். பல மலைகள் மத்தியில் அமைந்துள்ள ஏரியும் பார்க்கத்தக்க வொன்றே. வருட முழுதும்

இம்மலையில் ஏராளமான மக்களைக் காணலாம். ஜப்பானியர்கள் பொதுவாக இயற்கையை நேசிப்பதிலும் பூசிப்பதிலும் சிறந்து விளங்குகின்றனர்.

ஜப்பான் இலக்கியச் சபைக்குச் சென்றிருந்தேன். இதன் தலைவர் திரு. வுஜீ சாவா. இது அரசாங்க ஆதரவு பெற்ற ஸ்தாபனம். வாரத்திற்கு ஐந்து முறை இங்கு கூட்டங்கள் நடைபெறும். வியாழக்கிழமை தோறும் மேலைநாட்டினருக்கு. வெள்ளிக்கிழமை தோறும் ஆசியாக்காரர்களுக்கு. பிரசங்கங்கள் ஆங்கிலத்தில் நடைபெறுகின்றன. வெள்ளிக்கிழமைப் பிரசங்கமொன்றுக்குச் சென்றேன். டோக்கியோவிலுள்ள இந்திய மாணவர்கள் பலர் வந்திருந்தனர். அன்று பிரசங்கியார் வுஜீசாவா தான். அவருடைய பிரசங்கத்தை அரைமணி நேரம் கேட்ட பின்னர் சில வார்த்தைகள் புரிந்து கொண்டேன். "ஆபிரிக்காவில் வெடிகுண்டுச் சப்தம் கேட்கின்றது. கடைசியாகப் போர் மூண்டுவிட்டது. இப்போருக்கு முக்கிய காரணம் நிறபேதம். வெள்ளை நிறமென்றால் என்ன? எந்த விதத்தில் உயர்வானது? இப்போர் இத்தாலியையும் எதியோப்பியாவையும் பொறுத்ததன்று. மேலை நாட்டையும் கீழை நாட்டையும் பொறுத்ததாகும். இப்போர் வெள்ளையர்க ளல்லாதவரையும் பொறுத்ததாகும்."

பிரசங்கத்திற்குப் பின்னர் எனக்குப் பலர் அறிமுகம் செய்து வைக்கப்பெற்றனர். ஜப்பானிய நண்பர்கள் பலர் என்னை யணுகி "இந்தியாவின் அரசியல் நிலை எவ்வாறிருக்கிறது; காந்தியடிகள் சௌக்

கியமா ?" என வினவினர். எனக்கும் ஒரு மாத காலமாய் இந்திய விஷயம் தெரியாததால் நான் அவர்கட்கு திருப்தியாகப் பதில் கூற முடியவில்லை. ஜப்பானியர்கட்கு இந்தியாவின உண்மையான நிலைமை தெரியவில்லை. என்றாலும் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவல்மட்டும் நிறைய விருக்கிறது.

டோக்கியோவில் நான் தங்கி யிருந்தபொழுது 120 சண்டைக் கப்பல்கள் டோக்கியோ கடலை யடைந்தன. அவைகளை வரவேற்க மூன்று தினங்கள் வரை தேசீயக் கொடியைப் பறக்கவிட வேண்டு மென்று அரசாங்கத்தார் உத்தரவிட்டனர். அந்த மூன்று தினங்களிலும் வீடுகளிலும் சரி, வியாபார ஸ்தலங்களிலும் சரி, வீதிகளிலும் சரி ஜப்பானியக் கொடிகள் பறந்து கொண்டிருந்தன. சண்டைக் கப்பலைச் சேர்ந்த இருபதினாயிரம் போர் வீரர்கள் அணிவகுத்து அரண்மனையைச் சுற்றிவந்து சக்ரவர்த்தி தம்பதிகட்குத் தங்கள் மரியாதையைச் செலுத்தினர். அன்று சுமார் நூறு ஆகாயக்கப்பல்கள் பவனி வந்தன.

டோக்கியோ பழமையும் புதுமையும் கலந்ததொரு பட்டணம். சக்ரவர்த்தி தம்பதிகளின் அரண்மனை நகரின் மத்தியில் அழகுற அமைந்துளது. அரண்மனையைச் சுற்றிலும் அகழ் ஒன்று. அதைச் சுற்றி அகலமான பாதைகள். சாலைகளில் ஏராளமான மரங்களையும், மின்சார விளக்குகளையும் காணலாம். உலகத்தில் அதிக மின்சாரம் உபயோகிக்கும் நகரங்களில் டோக்கியோ மூன்றாவது ஸ்தானம்

வகிக்கிறது. ஏழை முதல் பணக்காரர் வரை சமைப்பதற்கு Gas உபயோகப்படுத்துகின்றனர். ஜின்ஸா, மருனேச்சி முதலிய விடங்களில் லட்சக்கணக்கான மின்சார விளக்குகளைக் காணலாம். பதினுயிரம் அறைகளுள்ள கட்டிடங்கள் சிலவும் இப்பொழுது டோக்கியோவில் கட்டப் பெற்றுள்ளன. எவ்வகையிலும், மேலை நாட்டு நகரங்களின் அழகுக்கு எள்ளளவும் குறையாதவாறு, டோக்கியோ சிறந்த நகரமாகக் காட்சி யளிக்கின்றது.

டோக்கியோவிலுள்ள சயன்ஸ் மியூசியம் எல்லாவற்றிலும் குறிப்பிடத் தக்கதாகும். இயந்திரங்கள் செய்யும் விதமும், இயந்திரங்களை இயக்கும் விதமும் இங்கு நிதரிசனமாகக் காண்பிக்கப்படுகின்றன. இந்த இயந்திரங்களைக் கண்டு பிடித்த அறிஞர்களின் உருவப் படங்கள் இம் மியூசியத்தின் பல பகுதிகளை அலங்கரிக்கின்றன. டெலிபோன் எப்படி அமைக்கப் பெற்றுளது? காமிரா செய்வது எப்படி? மோட்டார் இயந்திரம் எவ்வாறு இணைக்கப் பெற்றுளது? எலக்ட்ரிக் பல்புகள் எப்படிச் செய்யப்படுகின்றன? என்பது போன்ற நூற்றுக்கணக்கான விஷயங்களை இங்கு காணலாம். காலை மாலை இரு வேளைகளிலும் ஆயிரக்கணக்கான மக்கள் இங்கு வந்து இவைகளைப் பார்வை யிடுகின்றனர். இதனைச் சாதாரணமாகச் சுற்றிப் பார்க்கக் குறைந்தது மூன்றுமணி நேரம் செல்லும்.

'பழமையில் பிரேமை' ஜப்பானியர்கட்கு அதிகம். பண்டைக்கால மன்னர்களும் மக்களும் உப

யோகித்த சாமான்களைப் பல பகுதிகளாகப் பிரித்துப் பல பொருட்காட்சி சாலைகளை அமைத்துள்ளனர். சித்திரப் பொருட்காட்சி சாலையில் பண்டையச் சித்திரங்கள் பலவற்றைக் காணலாம். பண்டை மக்கள் உபயோகித்த ஆடைகளும், ஆபரணங்களும், ஆயுதங்களும் பல பொருட்காட்சி சாலைகளில் சேர்த்து வைக்கப்பெற்றுள்ளன. சென்ற பல பரம் பரைகளாக ஜப்பானியச் சக்ரவர்த்திகள் உபயோ கித்த சாமான்கள் பலவற்றைப் பல பொருட்காட்சி சாலைகளில் காணலாம். இவைகள் எல்லாம் தேசீயச் செல்வமாகக் கருதப்படுகின்றன. ஜப்பானியர்கள் கட்டணம் செலுத்தி இப்பொருள்களைப் பார்வை யிடுகின்றனர். இவைகளைக் கண்டு பெருமை யடை கின்றனர்.

பல முக்கிய பட்டணங்களில் வியாபாரப் பொருட்காட்சி சாலைகள் அமைக்கப் பெற்றுள்ளன. ஆங்காங்குள்ள வியாபாரச் சபையினர் இவைகளை நிர்வகிக்கின்றனர். ஜப்பானில் செய்யப்படும் அத் துணை சாமான்களையும் இங்குக் காணலாம். இக் காட்சி சாலையிலுள்ள பொருள்களைக்கொண்டு ஜப்பானியர் எவ்வளவு தூரம் முன்னேற்ற மடைந் துள்ளார்கள் என்பதைச் சுலபமாக அறியலாம். குண்டூசி முதல் 'டாட்ஸன்' மோட்டார் வரை அழகாக வைக்கப்பெற்றுள்ளன. இவைகளை உற் பத்தி செய்யும் கம்பெனியாரின் விலாசமும் அச் சாமான்களின் விலையும் ஜப்பானிய பாஷையில் குறிக்கப் பெற்றுள்ளன. இங்குள்ள அதிகாரிகள்

ஜப்பான்

இப்பொருட்காட்சி சம்பந்தப்பட்ட கேள்விகட்கு, சீக்கிரமாகவும் திருப்திகரமாகவும் மரியாதையுடன் பதில் கூறுகின்றனர்.

பத்திரிகாலயம்—ஒரு தனி உலகம்

ஒருநாள் காலையில் ஒஸாக்கா மைனிச்சி காரியாலயத்தின் முன்னர் நின்றேன். எட்டு மாடிகளுடைய அக் கட்டிடம் கம்பீரமான காட்சியளித்து நின்றது. நூற்றுக்கணக்கான மக்கள் உள்ளே போவதும் வருவதுமாயிருந்தனர். வாசலிலிருந்த இரண்டு ஜப்பானியச் சிறுவர்கள் என்னிடம் ஓடி வந்து ஜப்பானிய முறைப்படி வணக்கம் செலுத்தி உள்ளே விஸிட்டர்கள் ஹாலுக்கு அழைத்துச் சென்றனர். மிகச் சிறந்த முறையில் அந்த ஹால் அமைக்கப்பட்டிருந்தது. வசதியான ஆசனங்கள் காணப்பட்டன. நான் உட்கார்ந்த மறு நிமிடத்தில் ஒரு ஜப்பானியப் பெண் தேத்தண்ணீர் கொண்டு வந்து என்னைச் சாப்பிடுமாறு வேண்டினாள். பிறகு ஒரு பெண் அரைகுறையான ஆங்கிலத்தில் நான் வந்த காரியம் என்னவென்று வினவினாள். நான் இந்தியாவிலிருந்து வந்திருப்பதாகவும் ஆசிரியரைப் பார்க்க வேண்டுமெனவும் கூறி எனது விசிட்டிங் கார்டைக் கொடுத்தேன். உடனே அப்பெண் எனது வருகையை டெலிபோன் மூலமாக ஆசிரியர்கட்கு அறிவித்தாள். இரண்டு நிமிஷத்தில் நன்கு உடையணிந்த சுறுசுறுப்புள்ள இரு வாலிபர்கள் என்னை ஏழாவது மாடியிலுள்ள ஓர் அறைக்கு அழைத்துச் சென்றனர். சில நிமிஷ நேரங்களில்

மூன்று பேர் அங்கு வந்தனர். அவர்களில் ஒருவர் என்னை நோக்கி "பிரதம ஆசிரியர் டோக்கியோ சென்றுள்ளார். உதவி ஆசிரியர் வெளியே சென்றுள்ளார். ஓஸாக்கா மைனிச்சி ஆங்கிலத் தினசரியின் வெளிநாட்டு ஆசிரியர் பதவியை நான் வகிக்கின்றேன். பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டுள்ள உங்களைச் சந்திக்க மகிழ்ச்சி யடைகின்றேன்" என்று கூறி கை குலுக்கினர். மற்றவர்கட்கு என்னை அறிமுகப்படுத்தினர். பின்னர் விசிட்டிங் கார்டுகளை மாற்றிக் கொண்டோம். இந்நிலையில் எங்களனைவரையும் இருமுறை புகைப்படம் பிடித்தனர்.

இரண்டு நிமிஷம் மௌனம். பின்னர் வெளிநாட்டு ஆசிரியருக்கும் எனக்கும் பின்வரும் சம்பாஷணை நடைபெற்றது.

நீங்கள் எங்கிருந்து வருகின்றீர்கள் ?

இரங்கூனிலிருந்து.

இரங்கூன். சயாமின் தலைநகரா ?

இல்லை. பர்மாவின் தலைநகர்.

நீங்கள் இந்துவா ? முஸ்லீமா ?

நான் ஒரு இந்தியன்.

இந்துவா ? முஸ்லீமா ? என்பதைச் சொல்லலாமா ?

நான் ஒரு இந்து.

இந்தியாவில் இந்து முஸ்லீம் கலகம் அதிகமென்கிறார்களே. இப்பொழுது நிலைமை எப்படியிருக்கிறது ?

இந்தியா முப்பத்தைந்து கோடி மக்கள் கொண்ட நாடு. பல சமூகங்கள் இருக்கின்றன. சிறு சச்சரவுகள் நேருவது இயற்கை. இவைகளை எங்கள் எதிரிகள் பிரமாதப்படுத்திக் காட்டுகின்றார்கள். நீங்கள் நினைக்கின்ற அளவு எங்கள் நாட்டில் இந்து முஸ்லீம் கலகமில்லை.

காந்தியும் தாகூரும் சௌக்கியமா யிருக்கின்றார்களா?

ஆம். காந்தியடிகள் அரசியலிலிருந்து விலகி விட்டார்கள். இப்பொழுது கிராமப் புனருத்தாரண இயக்கத்தை ஆரம்பித்துள்ளார்கள்.

அதிருக்கட்டும். தீண்டப்படாத ஜாதியார் என ஒரு பகுதியார் இருக்கின்றார்களே; அவர்கள் இன்னும் உயிருடன் இருக்கின்றார்களா?

இக்கேள்வியைக் கேட்டதும் என் உள்ளத்தில் ஏதோ ஒரு உணர்ச்சி உண்டாயிற்று. தீண்டாமைக் கொடுமை ஐயாயிரம் மைல்கட் கப்பாலும் நம்மை விடவில்லை. இருந்தாலும் அவர்களை நோக்கி 'மனிதனை மனிதனாக மதிக்கவேண்டும், மனிதனாக நடத்தவேண்டும் என்ற உணர்ச்சி இப்பொழுது இந்தியர்கட்கு உண்டாகி யிருக்கிறது. காந்தியடிகளின் உண்ணுவிரதத்தினாலும் பொதுநல ஊழியர்கள் பேருழைப்பினாலும் தீண்டாமைக் கொடுமை மறைந்து வருகின்றது. இன்னும் பத்தாண்டுகளிலே உங்கள் காரியாலயத்திற்கு நான் மீண்டும் வரக்கூடிய சந்தர்ப்பம் கிடைக்குமானால், எங்கள் நாட்டில் தீண்டாமை இல்லையென்று தலை நிமிர்ந்து

சொல்லக்கூடிய பாக்கியம் கிடைக்குமென நம்பு கின்றேன்" என்று கூறினேன்.

இன்னும் பல கேள்விகள் கேட்டனர். அனைத் திற்கும் இயன்றவரை பதில் கூறினேன். பின்னர் தான் எனது நிலையை உணர்ந்தேன். அவர்களைக் கேள்விகள் கேட்டு அவர்களிடமிருந்து விஷயங் களைத் தெரிந்துகொள்ளத்தான் நான் அங்கு சென் றேன். ஆனால் நிலைமை மாறிவிட்டது. அவர்கள் என்னைக் கேள்விகள் கேட்க ஆரம்பித்தனர்.

அவர்களை நோக்கி 'உங்கள் பத்திரிகை எவ் வளவு பிரதிகள் அச்சிடப்படுகின்றன' என்றேன்.

'இருபத்தைந்து லட்சம்' எனசாதாரணமாகப் பதில் கூறினார். உடனே 'உங்கள் பத்திரிகை எவ்வளவு அச்சிடப்படுகிறது' என்றார். என் நிலை மிகக் கஷ்ட மாகிவிட்டது. உள்ளதைக் கூறினால் மிகக் குறைவு. சாதாரணமாகப் பத்திரிகைக்காரர்கள் கூறுவது போன்று பொய்யைக் கூறுவதற்கும் மனம் துணிய வில்லை. சிறிது நேரம் யோசித்த பின்னர் 'போது மான அளவு பத்திரிகை வெளியிடுகிறோம்' என் றேன். மீண்டும் அவர் வற்புறுத்திக் கேட்டார். நான் எனது சம்பாஷணையை வேறு விதத்தில் திருப்பி 'உங்கள் பத்திரிகையின் கொள்கை யென்ன?' என்றேன்.

'தேச முன்னேற்றமே எங்கள் பத்திரிகையின் லட்சியம். நாங்கள் எந்த அரசியல் கட்சிகளையும் ஆதரிப்பதில்லை. எங்கள் அபிப்பிராயங்களை நடு நிலைமையுடன் பட்சபாதமின்றி வெளியிடுவோம்.

உண்மையான விஷயங்களை உண்மையாக விரைவில் வெளியிடுவதே எங்கள் பத்திரிகையின் கொள்கை" என்றார்.

'உங்கள் பத்திரிகை இவ்வளவு அபிவிருத்தி யடையக் காரணமென்ன?' என்றேன்.

"எங்கள் பத்திரிகை 1876-ல் தொடங்கப் பெற்றது. இடையில் பல கஷ்ட நஷ்டங்கள் நேர்ந்தன. இப்பத்திரிகை சொந்தக்காரர்கள் பல தியாகங்கள் செய்திருக்கின்றனர். உண்மையான விஷயங்களைத் தைரியமாக வெளியிட இப்பத்திரிகை என்றும் பின் வாங்கியதில்லை. பொதுமக்களின் அன்பிற்கும் நம்பிக்கைக்கும் இப்பத்திரிகை பாத்திரமா யிருக்கிறது. ஜப்பானிலுள்ள மிகப் பிரபல எழுத்தாளர்கள் இப் பத்திரிகையில் தினம் எழுதுகின்றார்கள். தனிப் பட்ட மனிதர்களைத் தாக்கும் கேவல முறையை நாங்கள் அனுஷ்டிப்பதில்லை. செய்திகளை மிக விரைவில் வெளியிடுவதற்கு எங்களுக்கு அதிக வசதிகள் இருக்கின்றன. உலக முழுவதிலும் எங்களுக்கு 1200க்கு மேற்பட்ட நிருபர்களிருக்கின்றார்கள். கற்றவர்கள் அனுப்பும் செய்திகட்கும் கட்டுரைகட்கும் நிறையப் பணம் கொடுக்கின்றோம். பொதுமக்கட்கு விருப்பமான விஷயங்களை வெளியிடுவதில் நாங்கள் பணச்செலவைச் சிறிதும் பொருட்படுத்துவதில்லை. இத்தகைய காரணங்களினால்தான் எங்கள் பத்திரிகை முன்னேற்ற மடைந்துளது. இன்னும் முன்னேற்ற மடையுமென்று எதிர் பார்க்கிறோம்" என்று கூறினார்.

பின்னர் அக்காரியாலயத்தார் வெளியிடும் பத்திரிகைகளில் ஒவ்வொரு பிரதிகள் அன்பளிப்பாகக் கொடுத்தனர். மூன்று மணி நேரத்திற்கதிகமாக அந் நிலேயத்தைப் பார்வையிட்டேன்.

அங்கும்—இங்கும்

எலக்ட்ரிக் பல்ப் செய்யும் தொழிற்சாலை ஒன்றுக்குச் சென்றிருந்தேன். ஒரு சிறிய வீட்டில் இருபது பெண்களும் ஐந்து ஆண்களும் வேலை செய்தனர். தினந்தோறும் மூவாயிரத்துக்கு மேற்பட்ட பல்புகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. மிகவும் சுத்தமான உடையில், மலர்ந்த முகத்துடன் இப் பெண்கள் சுறுசுறுப்பாக வேலை செய்கின்றனர். ஆணைவிடப் பெண் செய்யும் வேலை அதிகம் என்று கூறினல் மிகையாகாது. ஒரு பெண் ஒரே சமயத்தில் இரு கைகளால் இரு வேலைகளைச் செய்துகொண்டிருப்பதைக் கண்டேன். சில பெண்கள் சந்தோஷமாகப் பாட்டுப் பாடிக்கொண்டே வேலை செய்கின்றனர். இவர்களைக் கண்காணிக்க ஒரு மேஸ்திரியாவது கிடையாது. இவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் கருமத்திலேயே கண்ணுயிருக்கின்றனர். சுருங்கக் கூறினல் மின்சாரத்தால் இயக்கப் பெறும் ஒரு இயந்திரத்தைவிடச் சுறுசுறுப்பாகவே இப் பெண்கள் வேலை செய்கின்ருர்கள் என்று கூறவேண்டும்.

பல தொழில்களிலும் ஜப்பான் முன்னேற்றமடைந்திருப்பது போல 'யாத்திரைத் தொழிலி'லும் முன்னேற்ற மடைந்திருக்கிறது. ஜப்பான் டூரிஸ்ட் பீரோ, ஜப்பான் டூரிஸ்ட் போர்டு இண்டஸ்ட்ரி

போன்ற அரசாங்கத்தாரால் நடத்தப்பெறும் ஸ்தாபனங்கள் நல்ல வேலைகளைச் செய்கின்றன. சென்ற ஆண்டில் 21 ஆயிரம் யாத்ரீகர்கள் ஜப்பானுக்கு விஜயம் செய்தன ரென்றும், அவர்கள் ஜப்பானில் செலவு செய்த பணம் சுமார் 35 லட்சம் ரூபாய் இருக்கலா மென்றும் ஒரு அறிக்கை கூறுகிறது. இந்த ஸ்தாபனங்கள் யாத்ரீகர்கட்கு வேண்டிய உதவிகளை இலவசமாக மனமுவந்து செய்கின்றன. அன்றியும் யாத்ரீகர்கட்குப் பயனுள்ள பல சிறு புத்தகங்களையும் இலவசமாக வழங்குகின்றன.

ஒரு நாள் காலையில் ஜப்பான் டூரிஸ்ட் போர்டு மானேஜிங் டைரக்டர் திரு. டென் அவர்களைக் கண்டு பேசினேன். இவர் மிகவும் சுவாரஸ்யமான ஒரு மனிதர். சாதாரண ஜப்பானியர்களைப் போலின்றி வெகு நன்ருகவும் சுத்தமாகவும் ஆங்கிலம் பேசினுர். தமது அறையில் மிக அன்புடன் வரவேற்ருர். 'இரங்கூனில் உஷ்ணம் அதிகமல்லவா' என்ற அவருடைய கேள்வியோடு எங்கள் சம்பாஷணை ஆரம்பமாயிற்று. இரண்டு மணி நேரத்திற்கதிகமாக உரையாடினேம். நான் கேட்ட கேள்விகட்கெல்லாம் விளக்கமாகவும் திருப்திகரமாகவும் பதிலளித்தார். மிக உயர்ந்த நிலைமையிலுள்ள ஒரு உத்தியோகஸ்தர் இவ்வளவு பணிவாகவும் அன்பாகவும் நடந்துகொண்டதைக் கண்டு நான் ஆச்சரியமுற்றேன். எங்கள் சம்பாஷணை முடிந்ததும் ஏராளமான புத்தகங்களை என்னிடம் கொடுத்து "இவைகளைப் படிப்பதால் ஜப்பானைப் பற்றி நீங்கள் அதிகம் தெரிந்து கொள்ளலாம்"

என்ருர். "பத்திரிகைகளில் பிரசுரிக்க நல்ல புகைப் படங்கள் எங்கு கிடைக்கும்?" என்றேன். கேட்டதுதான் தாமதம். அடுத்த நிமிஷம் வேருெரு பெரிய அறைக்குச் சென்ருேம். சுமார் மூவாயிரம் போட்டோ படங்கள் உள்ள "ஆல்பங்"களை என்னிடம் கொடுத்து "வேண்டிய படங்களைத் தயவு செய்து எடுத்துக் கொள்க" என்ருர். மிகக் குறைந்த நாற்பது படங்களோடு நான் திருப்தியடைந்தேன். தங்கள் நாட்டைப் பற்றி ஜப்பானிய அரசாங்கத்தார் எத்தகைய பிரசாரம் செய்கின்றனர்!

டோக்கியோவிலிருந்து ஒஸாக்கா ஆகாய வழியில் இருநூறு மைல். தினந்தோறும் ஆகாயக்கப்பல் போக்குவரத்து உண்டு. ரயிலில் பத்து மணி நேரம் பிரயாணம் செய்வதற்குப் பதிலாக இரண்டரை மணி நேரத்தில் டோக்கியோவிலிருந்து ஒஸாக்கா வந்து சேர்ந்தேன். இதற்குரிய கட்டணம் 30 யென். அதாவது சுமார் 24 ரூபாய். எனது பிரயாணம் மிகவும் சந்தோஷமாக விருந்தது. வுஜி மலையின் தோற்றம், உள்நாட்டுக் கடலின் காட்சி, ஹாக்கோன் ஏரியின் அமைப்பு முதலியவைகளைக் கண்டு இன்புற்றேன். ஆகாயக் கப்பலில் பிரயாணம் செய்தவர் அறுவர். அதில் ஒரு வியாபாரியையும் என்னையும் தவிர மற்ற நான்குபேரும் தூங்கிக்கொண்டிருந்தனர். நெப்போலியனும் வெல்லிங்டனும் கண்டவிடத்தில் நினைத்த நேரத்தில் தூங்குவார்களென்று படித்திருக்கின்றேன். அதைப்போன்று ரயில், பஸ், டிராம்

முதலிய விடங்களில் தூங்கிக்கொண்டிருக்கும் ஜப்பானியர்களை எப்பொழுதும் பார்க்கலாம்.

கியோத்தோ நகரம் ஜப்பானிய அரசாங்கத்தின் பழைய தலைநகர். பண்டைய கோட்டை கொத்தளங்களும் அரண்மனைகளும் இங்குள. தொழில் விஷயத்தில் கியோத்தோ முன்னணியில் நிற்கின்றது. இந்நகரம் விளையாட்டுப் பொம்மைகள் செய்வதில் மிகவும் பேர்பெற்றது. பீவா ஏரியும், ஹேற மலையும் காணவேண்டிய முக்கிய விடங்களாகும். இவ்விடங் கட்குச் செல்ல மலை ரயில்களும் ஆகாய ரயில்களும் அமைந்திருக்கின்றன. மிக நல்ல ஹோட்டல்கள் பல இங்குள்ளன. தற்செயலாக வீதியில் சந்தித்த ஒரு ஜப்பானிய மாணவர் என்னுடன் ஆறு மணி நேரம் தங்கி முக்கியமான விடங்களைச் சுற்றிக் காண்பித்தார். கடைசியாக அவர் என்னிடம் விடை பெறும் பொழுது கேட்ட கேள்வி இதுதான்: "ஜப்பானைப்பற்றி உங்களுடைய அபிப்பிராய மென்ன? கியோத்தோவை நீங்கள் விரும்புகின்றீர்களா?"

கியோத்தோவிலிருந்து 40 நிமிஷத்தில் ஒரு மின்சார ரயில்வண்டி நம்மை நாரா நகரில் சேர்த்து விடும். நாரா நகருக்கும் சரித்திரப் பெருமையில்லாமலில்லை. 74 வருடங்கள் இப்பட்டணம் தலைநகராயிருந்ததாம். இங்குள்ள 'பார்க்' ஜப்பானிலேயே பெரிது. 1300 ஏக்கர் விஸ்தீரணம். இங்குள்ள 'பெருமை'களை ஒரு ரிக்ஷாக்காரன் இரண்டு மணி நேரத்தில் எனக்குக் காண்பித்தான். புத்தரின்

பெரிய உருவம், பெரிய மணி, ஆயிரம் வருடத்திற்கு மேற்பட்ட பைன் மரம், முக்தியளிக்கும் தீர்த்தம், ஷிண்டோ ஷ்ரைன் முதலியவைகளைப் பார்வையிட்டேன். சுமார் ஆயிரம் மான்கள் அங்கு பயமின்றித் திரிகின்றன. அங்கு செல்வோர் அருகில் அவை வந்து விளையாடுகின்றன. அவர்கள் கொடுக்கும் ரொட்டித் துண்டுகளைத் தின்று விளையாடுகின்றன. இவைகளெல்லாம் எனக்கு ஆச்சரியமாகத் தோன்றவில்லை. அந்த ரிக்ஷாக்காரக் கிழவன் சுத்தமான ஆங்கிலத்தில் சுறுசுறுப்பாய் பேசினானே, அதுதான் எனக்கு ஆச்சரியமா யிருக்கிறது.

டிபார்ட்மெண்ட் ஸ்டோர்கள் ஜப்பானில் மிக அதிகம். ஒவ்வொரு ஸ்டோர்களும் ஒன்பது அல்லது பத்து மாடிகளுள்ள கட்டிடங்கள். மாட்சூயா, மிட்சுகோஸி, டைமாரு போன்ற ஸ்டோர்கள் மிகவும் பிரபலமானதாகும். ஸ்டோர்களிலே எல்லாச் சாமான்களையும் வாங்கலாம். சாமான்கள் மிகவும் அழகான முறையிலும், காண்போர் மனதைக் கவரத் தக்க வகையிலும் அடுக்கி வைக்கப்பட் டிருக்கின்றன. ஸ்டோர்களின் உச்சி மாடியில் பெரும்பாலும் ரெஸ்டாரண்டுகள் உள்ளன. இவைகளில் ஏக காலத்தில் நானூறு அல்லது ஐந்நூறு மக்கள் சாப்பிடலாம். இந்த ரெஸ்டாரண்டுகளில் மேலைநாட்டு முறையிலேயே உணவுகள் பரிமாறப்படுகின்றன. குச்சிகளின் உதவிகொண்டு சாப்பிடும் பழக்கமுடைய ஜப்பானியர்கள் இந்த ரெஸ்டாரண்டுகளிலே கத்தி, போர்க் முதலியவைகளை உபயோகித்

துச் சாப்பிடுகின்றனர். ஸ்டோர்களில் பூமிக்குக் கீழுள்ள கட்டிடத்தில் பெரும்பாலும் உணவுச் சாமான்களே விற்கப் படுகின்றன.

சாதாரணமாக ஒரு ஸ்டோரில் ஆயிரம் பேர் வேலை செய்தால் அவர்களில் எண்ணூறுபேர் பெண்கள். இவர்கள் கவர்ச்சிமிக்க நாகரிக உடையணிந்து என்றும் தவழும் புன்சிரிப்புடன் தங்கள் கடமைகளைச் செய்கின்றனர். ஒவ்வொரு ஸ்டோர்களிலும் மேன்மாடிக்குச் செல்வதற்கு ஏழெட்டு 'லிப்ட்'கள் இருக்கின்றன. இவைகளில் வேலை செய்பவர்கள் எல்லாம் பெண்கள். பொதுவாக வியாபார ஸ்தலங்களிலே 'பேரம்' கிடையாது. கறார் விலைதான். சாமான்கள் வாங்குவதில் பிரியமில்லாத மக்களும் கூட இந்த ஸ்டோர்களுக்குச் சென்றால் பெரும்பாலும் ஏதாவது ஒரு சாமானையாவது வாங்கி வருவார்கள். அவ்வளவு கவர்ச்சியான முறையிலே அமைக்கப் பெற்றிருக்கின்றன இந்த டிபார்ட்மென்ட் ஸ்டோர்கள்.

விளையாட்டு முதலியவைகளிலே ஜப்பானியருக்கு விருப்பமதிகம். 'கோல்ப்' 'பேஸ்பால்' முதலிய விளையாட்டுகள் இங்கு அதிக ஆதிக்கம் பெற்றுள்ளன. குத்துச் சண்டை, குஸ்தி, நீச்சல், வில் வித்தை, உறைபனி மீது சறுக்கி விளையாடுதல், காற்பந்து போன்ற விளையாட்டுக்களும் சர்வசாதாரணமாக விருக்கின்றன. கிரிக்கெட், ஹாக்கி முதலியவைகளும் இல்லாமலில்லை. ஏராளமான, பந்தயங்கள் இங்கு அடிக்கடி நடைபெறும். இந்தப் பந்தயங்கட்கு

லட்சக் கணக்கான மக்கள் கட்டணம் செலுத்தி வேடிக்கை பார்ப்பது வழக்கம். விளையாட்டுச் செய்திகட்கென்றே பல பத்திரிகைகள் ஜப்பானில் இருக்கின்றன. பள்ளிக்கூடங்களுக்கிடையே நடை பெறும் போட்டிப் பந்தயங்கள் மிகவும் விசேஷமானதாகும். கெய்யோ யூனிவர்சிட்டிக்கும் வாசடா யூனிவர்சிட்டிக்கும் நடக்கும் பந்தயங்கள் திருவிழாக்கள் போலவே தான் இருக்கும். ஆண்களும் சரி, பெண்களும் சரி, இளைஞராயினும் முதியராயினும் விளையாட்டுக்களைப் பார்ப்பதிலே அதிக ஆர்வமுள்ளவர்களா யிருக்கின்றார்கள்.

இந்தியாவை விட ஜப்பானிலே கிராமபோன் தொல்லை மிக அதிகம். நான்கு அல்லது ஐந்து "யென்" னுக்குக் கூட ஒரு கிராமபோன் பெட்டி வாங்கி விடலாம். ஏராளமான கிராமபோன் ரிகார்டுகள் வருடந்தோறும் வெளியிடப் படுகின்றன. மேலை நாட்டுச் சங்கீத முறையிலேயுள்ள ஜப்பானிய பாட்டுக்களைத் தான் பெரும்பாலும் ஜப்பானியர்கள் விரும்புகின்றார்கள். பள்ளிக்கூடத்து மாணவர்கட்கென பதினாயிரக் கணக்கில் ரிக்கார்டுகள் வெளிவருகின்றன. இவைகளின் விலை சாதாரணமாக நான்கணு ஆகும். கிராமபோன்களை ஆதரிப்போர் தொகையும் அங்கு நாளுக்கு நாள் பெருகி வருகிறது. பலவிதமான தேசீயப் பாட்டுகளைக் கிராமபோன் மூலம் கேட்டேன். சில ஜப்பானிய நண்பர்கள் அப்பாட்டுக்களின் உயரிய கருத்துக்களை அரைகுறையான ஆங்கிலத்தில் ஒருவாறு கூறினார்கள்.

ரேடியோக்கள், ஜப்பானின் தேசீய வாழ்க்கையை உயர்த்த ஒரு வகையில் உதவி செய்கின்றன என்றுதான் கூறவேண்டும். ஜப்பானிலே இன்று தினம் ஏழு லட்சத்திற்கு மேற்பட்ட ரேடியோக்களைக் காணலாம். வியாபார ஸ்தலங்களிலும் தனிப்பட்டவர்கள் வீடுகளிலும், ரயில்வே ஸ்டேஷன்களுள் முதலிய இடங்களிலும் ரேடியோக்கள் அமைக்கப் பெற்றுள்ளன. அரசியல்நிலை, தினசரிச் செய்திகள், மார்க்கெட் நிலவரம் போன்ற விஷயங்கள் ரேடியோ மூலம் அறிவிக்கப் படுகின்றன. அன்றியும் வாழ்க்கையின் பல துறைகளைப்பற்றி சிறந்த பிரசங்கங்களையும், இனிய சங்கீதக் கச்சேரிகளையும் இந்த ரேடியோக்களில் கேட்கலாம். வியாபார சம்பந்தமான விளம்பரங்கள் ரேடியோவில் இடம் பெருதவாறு கண்டிப்பான முறையில் தடுக்கப் பெற்றிருக்கின்றன. முக்கியமான அரசாங்க உத்தரவுகளும் ரேடியோவில் கூறப்படுகின்றன. ஒரு மாதத்திற்கு ஒரு ரேடியோவை உபயோகிப்பதற்குச் செலுத்த வேண்டிய கட்டணம் ஆறணுத்தான். ரேடியோக்களின் விலையும் மிகச் சொற்பம்.

தபால், தந்தி, டெலிபோன் வசதிகளும் நன்கு அமைந்துள்ளன. உள் நாட்டில் ஒரு போஸ்ட் கார்டுக்கு ஒன்றரை சென் ஸ்டாம்பும், கவருக்கு மூன்று சென் ஸ்டாம்பும் கட்டணமாகும். வெளி நாட்டுக்கு போஸ்ட் கார்டுக்கு ஆறு சென்னும் கவருக்குப் பத்து சென்னும் கட்டணமாகும். ஜப்பான் பாஷையில் தந்தி வார்த்தை ஒன்றுக்கு இரண்டு சென்

அதாவது காலணாத்தான். ஐரோப்பிய பாஷைகளில் ஏதாவதொன்றில் தந்தி எழுதினால் வார்த்தைக்கு ஐந்து சென் கட்டணம் வசூலிக்கின்றார்கள். சமாச்சாரப் பத்திரிகைகட்குத் தபால் கட்டணம் மிக மிகக் குறைவு. ஜப்பான் முழுதும் டெலிபோன் வசதியுண்டு. ஒரு கோடியிலிருந்து மற்றோர் கோடியிலுள்ள சிறு கிராமத்திற்கும் டெலிபோன் பேசலாம். சாதாரணமாக நம் நாட்டில் டெலிபோனை எடுத்து "ஹலோ" என்று கூப்பிடுவது போல ஜப்பானிய பாஷையில் "மோஷி, மோஷி" என்று கூப்பிடுகின்றார்கள். டெலிபோன் நம்பர்களை ஆங்கிலத்தில் கூறினால் தெரியாது. ஜப்பானிய பாஷையில்தான் கூற வேண்டும். இப்பொழுது லட்சக்கணக்கான மக்கள் டெலிபோனை உபயோகிக்கின்றனர். ஏழைகளும் உபயோகிக்கத் தக்க முறையில் டெலிபோன் கட்டணங்கள் மிகச் சொற்பமாக விருக்கின்றன.

உலகத்தில் அதிகமாக மின்சாரம் உபயோகிக்கின்ற நாடுகளில் ஜப்பானும் ஒன்று. காகித விளக்குகளைக் கையில் தூக்கித் திரிந்த ஜப்பானியர்கள் இன்று மின்சார ஜோதியில் மிளிர்கின்றனர். சமைப்பதற்கு விறகையோ அன்றிக் கரியையோ ஜப்பானியர்கள் உபயோகிப்பதில்லை. Gas உதவிகொண்டே ஏழை முதல் பணக்காரர் வரை சமையல் செய்வதாக ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன். வியாபாரிகள் தங்கள் விளம்பரங்கட்கு மின்சாரத்தை அதிகமாக உபயோகிக்கின்றனர். டோக்கியோ நகரில் ஜின்ஸா வீதியின் இரவுத் தோற்றம் மிகவும் கவர்ச்சியுடையது. அன்

னிய நாட்டு பாண வேடிக்கைகள் போல விருக்கும் மின்சார விளக்குகளின்காட்சி. இரவா அல்லது பகலா என்று சந்தேகிக்கக்கூடிய விதத்தில் அவ்வளவு ஜோதி மயமாகப் பிரகாசிக்கின்றன. ஜப்பானிலுள்ள தொழிற்சாலைகளெல்லாம் அதிகப்படியான மின்சாரத்தை உபயோகிக்கின்றன. ஏராளமான மின்சார ரயில்களும் டிராம் வண்டிகளும் தினந்தோறும் ஓடுகின்றன. ஏழைகளும் சாதாரணமாகக் கொடுக்கக் கூடிய அவ்வளவு குறைவாகவே மின்சாரக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

தீப்பெட்டிகள் ஜப்பானிலே ஏராளம். யாரும் இதனை விலைகொடுத்து வாங்குவதில்லை. சாதாரணமாகக் கடைத்தெருவுக்குச் சென்று திரும்பினுல் கையில் ஐந்தாறு தீப்பெட்டிகளுடன் வீடுவந்து சேரலாம். நம் நாட்டில் வீதிகளிலே வியாபார சம்பந்தமான துண்டுப் பிரசுரங்கள் கொடுக்கின்ருர்கள் அல்லவா? ஜப்பானில் துண்டுப் பிரசுரங்கட்குப் பதிலாகத் தீப்பெட்டிகளைக் கொடுக்கின்றனர். தீப்பெட்டிகளின் மேலே ஒட்டியுள்ள காகிதங்களில் அந்த வியாபாரிகளின் பெயர்கள் பொறிக்கப்பெற்றிருக்கும். சாதாரணமாக ஒரு காபி ஹோட்டலுக்கோ அல்லது ஒருவியாபார ஸ்தலத்துக்கோ சென்ருல் அங்கு தீப்பெட்டிகளை இனமாக வழங்குவது வழக்கம்.

நாகரிகமான முறைகளிலே அமைக்கப்பட்ட பல ஹோட்டல்களை ஜப்பானிலே காணலாம். ஐந்நூறுக்கு மேற்பட்ட அறைகளுள்ள 'சில ஹோட்டல்

களும் நூற்றுக் கணக்கான அறைகளுள்ள சில ஹோட்டல்களும் இருக்கின்றன. இங்கு இங்கிலீஷ் ஸ்டைல், அமெரிக்கன் ஸ்டைல் என இரு பிரிவாகப் பிரித்திருக்கிறார்கள். ஒரு ஹோட்டலில் சாதாரணமாக இங்கிலீஷ் முறையில் அமைக்கப் பெற்றுள்ள அறையில் தங்குவதற்கு மூன்று முதல் எட்டு 'யென்' வரையிலும், அமெரிக்க முறையில் அமைக்கப் பெற்றுள்ள அறைகட்கு எட்டு முதல் பதினாறு 'யென்' வரையிலும் கட்டணம் வசூலிக்கப் படுகின்றது. பெரும்பாலான ஹோட்டல்களில் ஒவ்வொரு அறைக்கும் டெலிபோன் அமைக்கப் பட்டிருக்கிறது. சில ஹோட்டல்கள் ரயில்வே கம்பெனியார் நிர்வாகத்திலிருக்கின்றன. மற்ற ஹோட்டல்களெல்லாம் ஜப்பானியர்களால் தனிப்பட்ட முறையிலோ அன்றிக் கூட்டுக் கம்பெனி முறையிலோ நடத்தப் பெறுகின்றன. உணவுச்சாலைகளும் மிக அதிகம். பொதுவாக உணவுச் சாலைகளிலே பெண்கள் தான் வேலை பார்க்கின்றார்கள்.

டீ ரூம்கள் ஜப்பானிலே மிகவும் முக்கியமான ஒரு ஸ்தானத்தை வகிக்கின்றன. பெரும்பாலும் எல்லாக் கிராமங்களிலேயும் இவைகளின் தொகை ஆயிரக்கணக்காகும். இந்த டீ ரூம்களில் இளம் பெண்கள் வேலைக்கமர்த்தப் பட்டுள்ளார்கள். அங்கு வரும் ஆடவர்களின் எதிரே இப் பெண்கள் உட்கார்ந்து வேடிக்கையாகப் பேசி மகிழ்விப்பார்கள். சாதாரணமாக ஒரு கப் காபியின் விலை ஐந்து சென் என்று வைத்துக் கொண்டால், அதே காபிக்கு டீ ரூம்

களில் பதினைந்து சென் வசூலிப்பார்கள். ஜப்பானியர்கள் பிரியமாக விரும்பும் அசாஹி பீரின் விலை இந்த டீ ரூம்களில் இரண்டு மடங்காகும். இந்த இடங்களிலே விபசாரம் நடைபெறா விட்டாலுங்கூட ஒழுக்கத்தவறு உண்டாவதற்கு ஒரு முக்கிய இடமாக விருக்கிறது. மேலை நாட்டு நாகரிகம் ஜப்பானுக்குச் செய்த தீமைகளில் இதுவும் ஒன்றாகும். போலீசார் இந்த டீ ரூம்களை அதிகமாகக் கண்காணித்து வருகின்றனர். என்றாலும் கட்டுக்கடங்காத காளையர்களின் விபரீதச் செயல்கள் ஒழிந்தபாடில்லை. சமீபத்தில் ஒரு ஜப்பானியப் பெரியார் தாம் எழுதியுள்ள ஒரு புத்தகத்தில் டீ ரூம்களில் நடக்கும் நிகழ்ச்சிகளை உண்மையாகவும் தெளிவாகவும் எழுதியுள்ளார். மறைமுகமாக விபசாரத்தை அபிவிருத்தி செய்யும் முறையிலேயே இவைகள் அமைந்திருக்கின்றன வென்று கூறுவது மிகையாகாது.

டான்ஸ் ஆடுவதில் ஜப்பானியர்கட்கு வரவர விருப்பம் அதிகரிக்கின்றது. ஹோட்டல்களிலும் டீ ரூம்களிலும் டான்ஸ் அதிகமாகிவிட்டது. ஆடவரும் பெண்டிரும் மேலை நாட்டு உடையணிந்து நடனமாடுகின்றனர். சாதாரணமாக டான்ஸ் ஆடத் தெரியாதவர்களை நாகரிகமற்ற கர்நாடக மானவர்களென்று பெரும்பாலான ஜப்பானியர்கள் கருதுகின்றார்கள். மேலை நாட்டினரைப் பின் பற்றியே நடனமாடுகின்றார்கள். சங்கீதமும் மேலை நாட்டுச் சங்கீதமே.

ஆண்களிற் பெரும்பாலோர் அன்னிய நாட்டு

உடைகளையே அணிகின்றனர். ஒவ்வொரு காலங்கட்கும் ஒவ்வொரு விதமான ஆடைகளை யுடுத்துகின்றனர். மேலைநாட்டு உடையணிந்த போதிலும் உணர்ச்சியில் இவர்கள் ஜப்பானியர்களாகவே இருக்கின்றனர். வீடுகளில் இருக்கும்பொழுது அனைவரும் தங்களின் நாட்டுடையாகிய "கிமோனு" வைத்தான் அணிகின்றார்கள். முதன் முதலாக ஜப்பானியர்கள் மேலைநாட்டுடையை அணிந்த சமயத்தில் அரசாங்கத்தார் ஒவ்வொரு முக்கிய இடங்களிலும் உத்தியோகஸ்தர்களை நியமித்து ஆடை யணியும் முறையை ஜனங்களுக்குக் கற்பித்ததாகக் கூறுகிறார்கள். ஜப்பானியப் பெண்களில் பெரும்பாலோர் தங்கள் மயிரை நாகரிகம் என அவர்கள் கருதும் முறையில் கத்தரித்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆங்கில நாகரிகத்தைவிட அமெரிக்க நாகரிகத்துக்குத் தான் ஜப்பானில் ஆதிக்கம் அதிகம். அமெரிக்க நாகரிக முறைப்படி ஒரு கோட் தைப்பதற்கு ஜப்பானியர்கள் 17 யென் கூலி கொடுப்பார்கள் யென்றால் அது ஆச்சரியப்படத்தக்க ஒரு விஷயமல்ல.

நகைப் பைத்தியம் ஜப்பானியப் பெண்களுக்கு அறவே கிடையாது என்று சொல்லலாம். ஆனாலும் ஜப்பானிய ஆண் பெண் அனைவரும் எப்பொழுதும் நகை முகத்துடன் தான் தோன்றுகின்றார்கள். விலையுயர்ந்த அழகிய ஆடைகள் அணிவதிலே ஜப்பானியப் பெண்கட்கு ஓரளவு விருப்பம் இருக்கிறது. என்றாலும் தனது குடும்ப நிலை தெரியாது தனது கணவனைக் கட்டாயப் படுத்தும் நிலையில் ஜப்பானியப்

பெண்கள் இல்லையென்றுதான் கூற வேண்டும். பவுடர், சோப் முதலியன பொதுவாகப் பெண்களின் கவனத்தை இப்பொழுது ஈர்த்திருக்கின்றன. டீ ரூம்களில் உள்ள பெண்களும் டான்ஸ் ஹாலில் உள்ள பெண்களும் தங்களை 'மேக் அப்' (Make up) செய்து கொள்ளத் தினமொன்றுக்குப் பல மணி நேரங்கள் செலவழிப்பார்கள். குழந்தைகளை முதுகிலே தூக்கிக்கொண்டு செல்வதை அநாகரிகமென்று கருதி இப்பொழுது கையிலே தூக்கிச் செல்ல ஜப்பானியப் பெண்கள் முன் வந்திருக்கின்றனர். அவர்கள் எத்தகைய ஆடைகள் அணிந்த போதிலும் அவைகள் எப்பொழுதும் சுத்தமாகவே யிருக்கும்.

சோறும் மீனுந்தான் ஜப்பானியர்களின் முக்கிய ஆகாரம். பார்லியையும் உபயோகப்படுத்துகின்றார்கள். சர்க்கரை வள்ளிக் கிழங்கு மிக மலிவு. பழவகைகளை ஒரு சிலர் தான் விரும்புகின்றார்கள். சில முறை ஜப்பானியர்கள் வீட்டுக்கு விருந்துக்குச் சென்றுள்ளேன். அவர்களுடைய உணவின் சுவை எனக்குப் பிடிக்காத நிலையில் கையில் ரொட்டிகளுடன் செல்வது வழக்கம். அப்பளத்தைச் சுட்டுத் தரும்படி கூறுவேன். நமது நாட்டில் 'தடுக்கு' உபயோகிப்பது போல ஜப்பானிலும் 'தடுக்கு' உபயோகிக்கின்றார்கள். ஒரு சிறிய மேஜை மத்தியில் யிருக்கும். அதில் ஒவ்வொருவருக்கும் கோப்பைகளும் தட்டுகளும் வைக்கப் பெற்றிருக்கும். வீட்டிலுள்ள முக்கியமான பெண் பறிமாறுவாள். சந்தோஷமாகப் பல விஷயங்களைப் பேசிக்கொண்டு

உணவருந்துவது வழக்கம். உணவுக்குப் பின் பழங்கள். இவைகளையும் கையால் எடுத்துச் சாப்பிடுவதில்லை. ஒரு சிறு குச்சியால் பழத் துண்டுகளைச் சாப்பிட வேண்டும். "ரோமாபுரியில் ரோமர்களைப் போல் நடந்து கொள்" எனும் பழமொழிக் கிணங்க, விருந்துகளிலே ஜப்பானியர்களைப்போலவே நானும் மண்டியிட்டுக் கொண்டு சாப்பிட்டேன்.

இயற்கையாகவே ஜப்பானியர்கள் மற்றவர்களிடத்தில் அன்பு காட்டுகின்றனர். விருந்தினர்களை நன்கு உபசரிப்பதில் அவர்களுக்கு ஆர்வம் அதிகம். நாகரிகமான ஒரு ஜப்பானிய இளைஞன் தனது நண்பனை டான்ஸ் ஹாலுக்குக் கூட்டிக் கொண்டு செல்லவும் அசாஹி பீர் வாங்கிக் கொடுத்து அவனைத் திருப்தி செய்யவுமே தான் முயல்கின்முன். கோபை நகரில் எனது ஜப்பானிய நண்பரொருவரைத் தேடிச் சென்றிருந்தேன். நண்பர் வீட்டிலில்லை. நாற்பது வயதுக்கு மேற்பட்ட ஒரு பெண்மணி—எனது நண்பரின் அத்தை—என்னை அன்புடன் வரவேற்ருர். ஆங்கில ஜப்பான் அகராதிப் புத்தகத்தின் உதவிகொண்டு எனது நண்பரைப் பார்க்க வேண்டுமென அரை குறையான ஜப்பான் பாஷையில் கூறினேன். உடனே அந்த அம்மையார் என்னை மேன்மாடிக்கு அழைத்துச் சென்ருர். தேயிலை, ரொட்டி முதலியவற்றை எனக்குக் கொடுத்து விட்டு, கீழே சென்று டெலிபோன் மூலம் எனது நண்பரை யழைத்து எனது வருகையைக் கூறிஞள். அரை மணி நேரத்திற்குள்ளாக என் நண்பர் வந்து விட்டார். "இந்த

எளிய குடிசைக்கு வந்தமைக்கு மிகவும் வந்தனம்" என அம்மையார் கூற, என் நண்பர் மொழி பெயர்த்தார்.

சில குணங்கள்

வீதியிற் செல்லுகின்ற ஒரு ஜப்பானியனைப் பார்த்துக் குறிப்பிட்ட இடத்திற்குச் செல்லக்கூடிய வழி எது? என்று கேட்டால் உடனே அவன் ஒரு காகிதத்தை எடுத்து 'பிளான்' போட்டு நாம் போக வேண்டிய இடத்தைக் குறிப்பான். அது நமக்கு விளங்காவிட்டால் கை கால் முதலியவைகளைக் காட்டி சைகை செய்வான். அதுவும் பயனில்லை யானுல் நம்முடன் கூட வந்து உதவி செய்வான். ஒரு நாள் யோகஹாமாவில் கிராண்ட் ஹோட்டலுக்குச் செல்லவேண்டிய திருந்தது. ஜப்பானியர் ஒருவர் ஹோட்டலுக்குப் பதிலாக அரசாங்க மாளிகை யொன்றைத் தவறுதலாகக் காட்டிவிட்டார். மிக வும் சந்தேகத்துடனேயே அரசாங்க மாளிகைக்குச் சென்றேன். இரண்டாவது மாடிக்குச் சென்றதும் ஒரு அதிகாரி என்னை அன்புடன் நோக்கி 'என்ன வேண்டும்' என்ருர். எனது நிலையைக் கூறியதும் அவர் நகைத்துவிட்டு 'என்னுடன் வாருங்கள், காண்பிக்கிறேன்' என்று கூறினுர். அவரைப் பின் தொடர்ந்தேன். இரண்டு பர்லாங்கு தூரம் சென்ற பின்னர் கிராண்ட் ஹோட்டலின் எதிரே என்னை நிறுத்திவிட்டு 'வந்தனம், விடைபெறுகின்றேன்' என்று பணிவோடு கூறிவிட்டுத் திரும்பினுர். அவரு டைய செய்கை எனக்கு அதிக ஆச்சரியத்தைக் கொடுத்தது. கிராமங்களிலும், நகரங்களிலும் எத்

தனையோ ஜப்பானியர் எனக்கு அன்புடன் வழி காட்டியதை நான் மறக்க முடியாது.

ஜப்பானியர்கள் நாணயமுள்ளவர்கள். பண விஷயத்தில் விட்டுக்கொடுக்கமாட்டார்கள். தகப்பனும் மகனுமா யிருந்தபோதிலும் பண விஷயத்தில் சிறிது கடுமையாகவே நடந்து கொள்வார்கள். திருடுதல் மிகச் சொற்பம். இன்றுதினம் கூட, நகரங்களில் சில வீடுகளுக்கும், கிராமங்களில் பல வீடுகளுக்கும் பூட்டு, தாழ்ப்பாள் முதலியன இல்லையென்று கூறலாம். ஜப்பானியரின் வியாபார நாணயம் போற்றப்படுகின்றது. நான் அங்கிருந்த பொழுது ஓஸாக்கா நகரில் ஒரு சிறு சம்பவம் நேரிட்டது. ஒரு பணக்காரர் வாடகை மோட்டாரில் பிரயாணம் செய்தார். மறதியாக 1400 யென் நோட்டை மோட்டாரில் வைத்துவிட்டுச் சென்று விட்டார். மோட்டார் டிரைவர் இதனைக் கண்டதும் ஒரு போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று விஷயத்தைக் கூறிப் பணத்தைக் கொடுத்து ஒரு ரசீது வாங்கிக்கொண்டு சென்றுவிட்டான். இந்த டிரைவர் அறிவித்ததற்கு இரண்டு மணி நேரத்திற்கு முன்னதாக இந்தப் பிரபு ஓஸாக்கா நகரில் வேறொரு போலீஸ் ஸ்டேஷனில் தமது பணம் காணமற் போனது குறித்து அறிவித்தார். டெலிபோன் மூலம் போலீஸ் ஸ்டேஷன்களுக்கு விஷயம் தெரிந்ததும் இருவரையும் அழைத்து விசாரித்துப் பணத்தை உரியவரிடம் கொடுத்துவிட்டார்கள். இதே சம்பவம் நமது நாட்டில் நடந்திருந்தால் எப்படியிருக்கும்?

என்று நீங்கள் கருதுகிறீர்கள்? மறுநாள் பத்திரிகையில் கீழ்க்கண்டவாறு வெளியாகலாம்.

"ஓஸாக்காவில் பெருந் திருட்டு!

1400 யென் மறைந்து விட்டது!!

போலீஸார் புலன் விசாரிக்கின்றனர்"

ஆனால் இம்மாதிரி ஜப்பான் பத்திரிகைகள் வெளியிடவில்லை. நான்கு வரிகள் இந்த விஷயத்தைப் பற்றி எழுதப்பெற்றன. இச்சிறிய சம்பவம் இரண்டு மணி நேரத்திற்குள்ளாக சாதாரண முறையில் ஒழுங்கு படுத்தப்பட்டது.

எனக்கு நேர்ந்த சிறிய அனுபவமும் ஒன்றுண்டு. கோவை நகரிலிருந்து டோக்கியோ செல்லும்போது எனது பெட்டியை ரயில்வே அதிகாரிகளிடம் கொடுத்தேன். எனது பெட்டிக்கு இரண்டு சாவிகளுண்டு. ஒன்று எனது சட்டைப் பையிலும் மற்றொன்று பெட்டிக்குள்ளும் இருந்தது. பிரயாண அவசரத்தில் எனது சாமான்களை பெட்டிக்குள் அள்ளித் திணித்திருந்தேன். பெட்டியைத் திறந்ததும் உடனே தெரிகின்ற நிலையில் நோட்டுகளையும் சில நாணயங்களையும் போட்டு வைத்திருந்தேன். அவசரத்தில் பெட்டியையும் பூட்ட மறந்துவிட்டதாகத்தான் எனக்கு ஞாபகம். டோக்கியோ சென்றதும் ரயில்வே அதிகாரிகள் எனது பெட்டியையும் அதன் சாவியையும் என்னிடம் கொடுத்தார்கள்.

சாவியைக் கண்டதும் ஆச்சரியமுற்றேன். வீட்டிற்குப்போய் பெட்டியைத் திறந்து பார்த்தேன். சாமான்கள் ஒழுங்காக அடுக்கப்பெற்றிருந்தன. பணத்தில் ஒரு சென்கூடக் குறையவில்லை.

ஜப்பானில் கல்வி பயிலும் ஒரு இந்திய மாணவர் தமது அனுபவமொன்றை என்னிடம் கூறினர். அவர் ஒரு நாள் ரயிலில் பிரயாணம் செய்தபொழுது தம்முடைய சிறிய சாமான் ஒன்றை மறதியாக ரயிலில் வைத்துவிட்டாராம். நல்ல வேளையாக அந்தச் சாமான் சுற்றப்பட்டிருந்த காகிதத்தின்பேரில் அவருடைய பெயரும் விலாசமும் குறிக்கப்பட்டிருந்ததாம். இரண்டு தினங்களிலே இவர் மறதியாக வைத்துவிட்டுச் சென்ற சாமான் இவருக்குத் தபால் மூலம் கிடைத்தது. ரயில்வே கம்பெனியார் தங்கள் சொந்தச் செலவில் சாமானை அனுப்பினர்கள். இதற்காக எத்தகைய கட்டணத்தையும் கம்பெனியார் இவரிடமிருந்து வசூலிக்கவில்லை. இந்திய மாணவர் தமது சாமான் கிடைத்ததைக் கண்டு பெருமகிழ்வெய்தி தமது நன்றியறிதலைக் கடித மூலம் ரயில்வே கம்பெனியாருக்குத் தெரிவித்தார்.

சட்டத்திற்குக் கீழ்ப்படியும் தன்மை ஜப்பானியர்களிடம் அதிகம். எதிரிகள் ஆகாய விமானங்களிற் பறந்து தங்கள் நாட்டுக்குச் சண்டை செய்யவந்தால், ஜப்பானியர்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பதைப் பயிற்றுவிப்பதற்காக ஒரு தமாஷ் சண்டை நடைபெற்றது. கோபை, ஒஸாக்கா ஆகிய

இரு பெரிய நகரங்களும் பரீட்சார்த்தமாக எடுத்துக் கொள்ளப் பெற்றன. குறிப்பிட்ட இரு தினங்களில் இரவு நேரங்களில் விளக்கு வெளிச்சமே இருக்கக் கூடாதென்று உத்தரவு போடப்பட்டது. இரு நகரங்களும் இருளில் மூழ்கியிருந்தன. ஆனாலும் டிராம், பஸ், டாக்ஸி, டிரெயின் முதலியவைகள் விளக்கின்றி ஓடிக்கொண்டிருந்தன. ஹோட்டல்களில் வெளிப் புறங்களில் கருப்புத் துணியைக் கட்டிவிட்டு கையில் பாட்ரி விளக்குடன் பெண்கள் வேலை செய்தனர். வியாபாரம் நடந்து கொண்டிருந்தது. மக்கள் விரை விலே உணவருந்தி விட்டு கூட்டம் கூட்டமாக வீதி களிலே உற்சாகத்தோடு நின்று கொண்டிருந்தனர். ஜப்பான் ஆகாயவிமானப் படைகள் இரு பிரிவாகப் பிரிந்து சண்டையிட்டன. இந்த இரண்டு இரவுகளி லும் அசம்பாவிதமான நிகழ்ச்சிகள் எதுவும் நடக்கவில்லை.

பணிந்துசெல்வது ஜப்பானியர்கட்கு இயற்கை. பொது மக்களும் போலீசாரும் மற்ற அரசாங்க உத்தியோகஸ்தர்களும் மாணவர்களும் மிகப்பணி வாக நடந்து கொள்கின்றனர். பணிப் பெண்களின் பணிவு மிக மிக அதிகம். ஹோட்டல்களுக்கோ அல் லது வியாபார ஸ்தங்களுக்கோ சென்றால் அங்குள்ள பெண்கள் இயற்கையான புன்சிரிப்புடன் பணிந்து இன்னுரைகள் கூறுவார்கள். நாம் வெளியில் வரும் பொழுதும் வந்தனம் கூறிப் பணிவார்கள். ஒரு வீட் டிற்குச் சென்றோமானால் அவ் வீட்டிலுள்ளோர் காட்டும் மரியாதை முதலில் பிரமிக்கத்தக்கதாக

விருக்கும். போலீசார்கள் சாதாரண வேலைக்காரர்கள்போல் நடந்துகொள்கின்றனர். ஒரு வாடகை மோட்டார் வேண்டுமெனப் போலீஸ்காரனிடம் கூறியபொழுது அவன் ஒரு மோட்டாரைக் கொண்டுவந்து கதவைத் திறந்தான். நான் உள்ளே ஏறி உட்கார்ந்ததும் கதவைச் சாத்திவிட்டு போலீஸ் முறைப்படி வந்தனம் செய்து நின்றான். ஜப்பான் போலீசார் எனக்குப் பலமுறை உதவி செய்துள்ளார்கள். எதிரே வரும் வண்டிகளைக் கவனியாது நான் வீதியிற் சென்றபோது ஒரு போலீஸ்காரன் வண்டிகளை உடனே நிறுத்தி என் கையைப் பிடித்து மரியாதையாக அழைத்துச்சென்று 'இனிமேல் இம்மாதிரி ஆபத்துக்களில் சிக்கிக்கொள்ளாதீர்கள்; ஜாக்கிரதையாக இருங்கள்' என்று மிக அன்புடனும் பணிவுடனும் கூறியது எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது. வீதிகள் சந்திக்குமிடங்களிலே டிராம், பஸ் முதலியவைகளை நிறுத்திவிட்டு போலீஸ்காரர்கள் கிழவிகளையும் சிறு குழந்தைகளையும் கையைப் பிடித்துச் செல்லும் காட்சியை அடிக்கடி காணலாம்.

மோட்டார் டிரைவர்கள் அதிக சுறு சுறுப்புள்ளவர்களாகவும், யோக்கியமானவர்களாகவும், பணிவுள்ளவர்க ளாகவும் இளைஞர்களாகவும் இருக்கின்றார்கள். இருபது வாடகை மோட்டார்கள் வரிசையாக நிற்குமானால் முதலாவதாகவுள்ள டிரைவர் தான் நம்மிடம் வந்து பேசுவான். மத்தியிலுள்ள மோட்டாரை வாடகைக்குப் பேச விரும்பினாலும் அந்த டிரைவர் இணங்க மாட்டான். டிரைவர்க

ளெல்லாம் கூட்டங் கூடிக்கொண்டு பிரயாணிகளுக்குத் தொந்தரவு கொடுப்பதையோ அல்லது பிரயாணிகளின் சாமான்களை ஆளுக்கொன்ருக எடுத்துச் சென்று தங்கள் மோட்டாரில் வைப்பதையோ ஜப்பானில் நாம் பார்க்க முடியாது.

ஜப்பானில் இந்தியர்கள்

என்றும் புன்முறுவலுடன் திகழும் ஜப்பானியர்களின் நாட்டிலே சுமார் ஐந்நூறு இந்தியர்கள் இருக்கின்றார்களெனத் தெரிகிறது. (இப்பொழுது 50 பேர்கள் தான் இருக்கிறார்களாம்.) இவர்களிலே நூற்றுக்குத் தொண்ணூறு பேர் ஏற்றுமதி செய்பவர்கள். மீதியுள்ளோர் கல்வி பயிலும் மாணவர்கள். நாடு கடத்தப்பட்ட சிலரும் இருக்கின்றார்கள்.

வியாபாரிகளிலே, ஒரு சிலர் தவிர ஏனையோர் வட இந்தியாவைச் சேர்ந்தவர்கள். குஜராத்தி, பெங்காலி, சிந்தியர் முதலியோர் அதிகம். ஏறக்குறைய பாதி இந்துக்களும், மற்றொரு பாதித் தொகை முஸ்லிம்களும் இருக்கின்றனர். இவர்களிற் பலர் குடும்பத்துடன் வாழ்க்கை நடத்துகின்றனர். ஆடவர்கள் மேலைநாட்டு உடையிலும், பெண்கள் இந்திய உடையிலும் விளங்குகின்றனர்.

வியாபாரிகளில் நூற்றுக்கு எண்பது பேர் கோபை துறைமுகத்திலும், சிலர் யோகஹாமாவிலும். இரண்டொருவர் டோக்கியோ ஓஸாக்கா, கியாத்தோ முதலிய விடங்களிலும் இருக்கின்றார்கள். இந்த வியாபாரிகளில் பெரும்பாலோரிடத்தில் எனக்கு மதிப்புக் கிடையாது. இவர்கள் ஏற்றுமதி வியாபாரிகள்; எல்லாவற்றையும் ஏற்றுமதி செய்துவிட்டார்கள் என்றுதான் கருதுகின்றேன். முதன் முதலாக கோபையில் ஒரு இந்தியரைச் சந்தித்து

குறிப்பிட்ட இடம் எங்கே என்று கேட்டபொழுது அப்பெரிய மனிதர் ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டே சென்றார். மற்றொரு இந்தியரைச் சந்தித்த பொழுது அவர் அலட்சியமாகப் பதில் கூறினர். ஆம், அன்னியநாட்டுச் சாமான்களை தாய்நாட்டுக்கு ஏற்றுமதி செய்து 'தொண்டு' புரியும் இத் 'தேச பக்தர்' களை நாம் எப்படி மதிக்க முடியும்?

வியாபாரிகளிற் பலருக்கு நல்லெண்ணமில்லை. பெரும்பாலோர் பேசக்கூட மாட்டார்கள். தொழிற் கல்விக்குச் செல்லும் மாணவர்களை உற்சாகப்படுத்த வேண்டுவது இவர்கள் கடமை. ஆனால் இதற்கு மாருக அவர்களை அதைரியப் படுத்துவார்கள். மாணவர்கள் தொழிற் கல்வி கற்று இந்தியாவில் தொழிற்சாலைகளை ஆரம்பித்தால் எங்கு தங்கள் பிழைப்பில் 'மண்' விழுந்து விடுமோ என்று அஞ்சுகிருர்கள். இவர்கள் ஜப்பானியர்களோடு நெருங்கிப் பழகுவதில்லை. கீழ்த்தரமான 'புரோக்கர்'களோடு வியாபாரம் செய்கின்றுர்கள். ஒரு 'சென்' வித்தியாசத்திற்குப் பெரும் சண்டை போடுவார்கள் இத்தகைய வியாபாரிகளினுல் இந்தியாவுக்கோ அல்லது இந்தியர்களுக்கோ எவ்விதப் பெருமையும் இல்லை என்பதுதான் எனது அபிப்பிராயம்.

அகில இந்திய தேசீய மகா சபையின் கிளை ஸ்தாபனம் ஜப்பானில் கோபை நகரில் இருக்கிறது. திரு வ. எம். ஷாகே இதன் தலைவர். இவரை ஆசிரியராகக்கொண்டு காங்கிரஸ் சபையின் சார்பாக "வாய்ஸ் ஆப் இந்தியா" எனும் ஆங்கில ஜப்பான்

மாதப் பத்திரிகை வெளிவருகிறது. திரு. ஷாகே சிறந்த காங்கிரஸ் தலைவர். மாணவர்கட்கு உதவிகள் புரிகின்றார். இந்தியர்களின் ஜீவநாடியாகத் திகழ்கின்றார் என்று கூறினால் மிகையாகாது. இவருடைய மனைவியார் திருமதி ஷாகே சிறந்த தேச பக்தர். இவர்களுடைய இரு குழந்தைகள் ஜப்பான் பள்ளிக்கூட மொன்றிலே பயில் கின்றனர்.

கோவை நகரில், மலையடிவாரத்தில் காமிட்ஸுட்ஸி எனுமிடத்தில் இரண்டாவது வீதியில் இரண்டாவது கட்டிடமாகத் திகழ்வது இந்தியா லாட்ஜ். ஜப்பானிலுள்ள இந்தியர்கள் அளித்த பத்தாயிரம் யென் நன்கொடையில் இக்கட்டிடம் வாங்கப் பெற்றது. இக்கட்டிடம் அழகிய சிறிய தோட்டத்தினிடையே ஜப்பானிய முறைப்படி அமைக்கப் பெற்றுள்ளது. பதினாறு அறைகள் இருக்கின்றன. ரொட்டி, சாதம், பருப்பு முதலிய இந்திய உணவுகள் அளிக்கப்படுகின்றன. மாணவர்கள் தங்கிச் சாப்பிடுவதற்கு மாத மொன்றுக்கு முப்பது யென். யாத்திரை வாசிகட்கு மாத மொன்றுக்கு நாற்பத்தைந்து யென். இதைவிடக் குறைந்த செலவில் ஜப்பானில் இவ்வளவு வசதிகள் கிடைக்காது. இந்தியா லாட்ஜை ஒரு அழகிய பெரிய கட்டிடமாகக் கட்ட எண்ணியுள்ளார்கள். தற்பொழுது இந்தியா லாட்ஜின் நிர்வாகம் காங்கிரஸ் சபையாரின் கையிலிருக்கிறது.

கோவையிலுள்ள இந்தியா லாட்ஜைப் போலவே டோக்கியோவில் ஏஷியா லாட்ஜ் அமைக்கப் பெற்று

ளது. கீழை நாட்டு மாணவர்கள் யார் வேண்டு மானலும் இதில் சேரலாம். மாதமொன்றுக்கு சாப் பாடு உள்பட கட்டணம் முப்பது யென்தான். திரு. ராஷ் பிகாரி போஸ் இதனை நடத்தி வருகிறார்.

திரு. ராஷ் பிகாரி போஸ் இருபது ஆண்டுகட்கு முன்னர் இந்தியாவிலிருந்து நாடு கடத்தப்பட்டவர். ஜப்பானில் அதிக செல்வாக்குடன் திகழ்கின்றார். சில ஆண்டுகட்கு முன் ஜப்பானியப் பெண்ணை மணந் தார். அவ்வம்மையார் சமீபகாலத்தில் காலமானர். இவருக்கு ஒரு ஆண் மகவும் பெண் மகவும் உண்டு. ஒரு பெரிய ஹோட்டலைச் சொந்தமாக நடத்தி வரு கின்றார். 'ஏஷியா' எனும் சங்கத்துக்குத் தலைவர். அதன் சார்பில் வெளிவரும் 'ஏஷியா' ஆங்கில ஜப் பான் மாதப் பத்திரிகைக்கும் இவரே ஆசிரியர். ஜப் பானிய பாஷையை நன்கு படித்துள்ளார். சமீபத் தில் ராமாயண, மகாபாரதக் கதைகள் சிலவற்றை ஜப்பான் பஷையில் புத்தக ரூபமாய் வெளியிட்டுள் ளார்.

கோபை நகரில் நமது முஸ்லீம் சகோதரர்கள் எழுபதாயிரம் யென் செலவில் புதிய அழகிய மசூதி ஒன்றைக் கட்டியுள்ளார்கள். ஜப்பானிலே முதலா வது மசூதி இதுதான். இதன் திறப்பு விழா மிக ஆடம்பரமாக நடைபெற்றது. டார் ஹோட்டலில் பல வகுப்பைச் சேர்ந்த அறுநூறு பிரமுகர்கட்கு அளிக்கப் பெற்ற விருந்திலே கலந்து கொள்ள எனக் கும் சந்தர்ப்பம் கிடைத்தது. பல பாஷைகளில் பிர சங்கங்கள் நிகழ்ந்தப் பெற்றன.

கோவை இந்திய வியாபாரிகள் சங்கம், இந்திய ஜப்பானிய வாலிபர் சங்கம், இந்தியப் பெண்கள் சங்கம், யோகஹாமா இந்திய வியாபாரிகள் சங்கம், டோக்கியோ இந்தோ-ஜப்பானிய சங்கம் முதலிய வைகளும் குறிப்பிட்ட சில லட்சியங்களோடு உழைத்து வருகின்றன.

ஜப்பானிலிருந்து கப்பலேறும் பொழுது மிக வருத்தமாகத்தானிருந்தது. ஜப்பானியர்களின் ராஜ தந்திரமும் வியாபார தந்திரமும் என் கருத்துக்கு முற்றிலும் மாறுபட்டிருப்பது உண்மையே. ஆனுலும் அழகிய நாட்டையும் அன்புள்ள மக்களையும் விட்டு விட்டு விரைவில் கப்பலேறுகின்ருமே என்ற எண்ணம் என் மனதில் எழாமலில்லை.

நான் ஒரு கவியாக விருந்தால் ஜப்பானைப்பற்றிக் கவி பாடியிருப்பேன். ஒரு சித்திரக்காரனுக விருந்தால் ஜப்பானை எனது சித்திரக் கண்ணுடியில் பிடித்திருப்பேன். ஆனுல் இரண்டிலும் நான் சேர்ந்தவனில்லையே! என் செய்வது?

II

ஜப்பான் ஒரு தனி நாடு

சரித்திர வரலாறு

சுமார் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே மத்திய ஆசியாவிலிருந்தும் தெற்குத் தீவுகளி லிருந்தும் பலர் ஜப்பானில் குடியேறினர். மத்திய ஆசியாவிலிருந்து வந்தவர்கள் மஞ்சள் நிறத்தவர்கள். தெற்குத் தீவுகளிலிருந்து வந்தவர்கள் வெள்ளை நிறத்தவர்கள். இவர்கள் கரையோரங்களில் குடியேறினர். ஜப்பானின் சீதோஷ்ண நிலை அவர்களுக்கு ஏற்றதாயிருந்தது. எனவே, அங்கேயே தங்கியிருக்க ஆரம்பித்தார்கள்.

இவர்கள் குகைகளிலே வசித்தார்கள். கல்லினுற் செய்த ஆயுதங்களையே உபயோகித்தார்கள். மீன் முதலியவைகளைச் சாப்பிட்டார்கள். சில காலத்திற்குப் பின்னுல் இந்தோ-சைனுவிலிருந்து இங்கு குடியேறிய சிலர் பயிரிடும் விதத்தை இந்த ஆதிக் குடிகளுக்குக் கற்பித்தனர்.

பிற்காலத்தில் இவர்கள் பலவிதமான ஆடை அணிய ஆரம்பித்தார்கள். சிலர் ஆடையின்றியும் திரிந்தார்கள். இவர்கள் பூஜித்த பழைய விக்கிரகங்களைக்கொண்டு பார்க்கும்பொழுது இவர்களில் ஆண்கள் இடையிலும் மேலிலும் ஆடையணிந்திருந்ததாகத் தெரிகிறது. பெண்கள் இடையில் மட்டும்

ஆடை அணிந்திருந்தார்களென்று ஊகிக்க வேண்டியிருக்கிறது.

வரவர மஞ்சள் நிறத்தவருக்கும் வெள்ளை நிறத்தவருக்கும் சம்பந்தங்கள் உண்டாயின. இவர்களுக்குப் பிறந்தவர்கள்தான் ஜப்பானியர்கள். இவர்கள் ஆரம்பத்தில் நூற்றுக்கணக்கான குடும்பங்களாகச் சேர்ந்து சேர்ந்து வாழ்ந்தார்கள். இவர்களிடையே அடிக்கடி சண்டை சச்சரவுகள் நேர்ந்தன. சட்டரீதியான அரசியல் ஸ்தாபனம் அக்காலத்தில் கிடையாது. இவர்கள் நாளடைவில் ஜப்பானின் வடமேற்கிலும், தென் கிழக்கிலும் குடியேறத் தொடங்கினார்கள்.

பரம்பரை ஆரம்பம்

முதலாவது ஜப்பானியச் சக்ரவர்த்தி ஜிம்மு. அவருடைய ஆட்சி முறையிலும் அதற்குப் பின் சிலருடைய ஆட்சி காலம் வரையிலும் ஜப்பான் அதிகமான முன்னேற்ற மடையவில்லை. ஜிம்மு சக்ரவர்த்தி தேவதைகளைப் பூஜித்தார். பொதுஜனங்கள் தங்கள் முன்னோர்களை வீட்டுத் தெய்வங்களாக நினைத்து பூஜிக்கத் தொடங்கினர். இதுதான் ஷிண்டோமதத்தின் ஆரம்ப மாகும்.

கி. மு. 512-ம் ஆண்டில் கிம்மே சக்ரவர்த்தி பௌத்த மதத்தைப் பரப்பினர். சீனா, இந்தியா முதலிய நாடுகளிலுள்ள மக்கள் ஜப்பானுக்கு விஜயம் செய்தனர். இதன் பயனாகப் பொது மக்களின் நாகரிகம் சிறிது வளர்ச்சியடைந்தது. வீரர்களுடைய

கதைகளை ஜனங்கள் விரும்பினார்கள். பாமர மக்கள் உணர்ச்சி மிகுந்த நாட்டுப் பாடல்களைப் பாடுவதில் ஊக்கம் கொண்டனர். ஜனத்தொகை அதிகரித்தது. நிலங்கள் பொதுச் சொத்துக்களாயின. நிலமில்லாத வர்கள் பலமில்லாதவர்களைத் துன்புறுத்தி அவர்களிட மிருந்து நிலங்களைப் பறித்தனர். வலிமையுள்ளவர் கள் செல்வாக்கடைந்தனர். ஏனையோர் அவர்க ளிடம் வேலை செய்ய ஆரம்பித்தார்கள்.

கி. பி. 532—708

ஆறாவது நூற்றாண்டில் வர்ணந் தீட்டுதல், நல்ல வீடு கட்டுதல் முதலிய கலைகள் பெருக ஆரம்பித்தன. பௌத்த மதத்தைத் தேசீய மதமாகச் செய்வதில் மோனோனை என்ற குடும்பத்தாருக்கும், சோகா என்ற குடும்பத்தாருக்கும் பெரும் சச்சரவுகள் ஏற் பட்டன. நாட்டினுடைய நிலமெல்லாம் அரச குடும்பம், ஜமீன்தார்கள் குடும்பம், கோயில் முதலிய வைகளுக்கே சொந்தமாயிருந்தன. ஜமீன்தார்கள் தாங்கள் செய்த சேவைகளுக்காக அரசாங்கத்தாரிட மிருந்து நன்கொடையாகச் சில நிலங்களைப் பெற்ற னர். ஜமீன்தார்களின் நிலங்கள் சிறு சிறு ராஜ்யங் கள் போலப் பெருக ஆரம்பித்தன. ஜமீன்தார்களின் அதிகாரமும் அதிகமாயிற்று. இந் நிலையில் தேசீய ஒற்றுமை குறைய ஆரம்பித்தது. ஜமீன்தார்கள் அதிக பணக்காரார்கள் ஆனார்கள். அவர்களுடைய எல்லைக்குள் அவர்களே சர்வாதிகாரிகள். உயர்ந்த அதிகார பதவிக •ளெல்லாம் பரம்பரைப் பாத்தியங்க

ளாயின. சக்ரவர்த்திக்குச் செல்வாக்கில்லாத நிலை ஏற்பட்டது. பொது மக்கள் இதனைக் கண்டு அதிருப்தி அடைந்தனர்.

சீர்திருத்தம்

சோகா ஜமீன் குடும்பத்தின் செல்வாக்கு கி. பி. 645-ம் வருஷத்தோடு முடிந்தது. சோகா இறந்த ஏழாவது தினத்தில் கோடகு சக்ரவர்த்தி சில சீர்திருத்தங்களைச் செய்தார். முதலில் மந்திராலோசனை சபை ஏற்படுத்தி, அதற்கு இளவரசரைத் தலைவராக நியமித்தார். அதற்கு அக்காலத்திலிருந்த சிறந்த அறிஞர்களை அங்கத்தினர்களாக நியமித்தார். இச் சபையின் தலைவரான இளவரசர் தமது சொந்த நிலத்தைப் பொது மக்களுக் களித்த பொழுது பின் வருமாறு கூறினர் :—

"ஆகாயத்தில் இரண்டு சூரியர்கள் இல்லை. அதைப்போல ஒரு நாட்டை இரண்டு மன்னர்கள் ஆளமுடியாது. ஒரு நாட்டை ஒரு சக்ரவர்த்தி தான் ஆள வேண்டும்."

கோடகு சக்ரவர்த்தி கீழ்க்கண்ட மூன்று முக்கியமான சீர்திருத்தங்களைச் செய்தார்.

1. ஜமீன்தார்களின் நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.
2. மேற்கண்ட நிலங்கள் பொதுமக்களுக்கு வீதாசாரம் பங்கிட்டுக் கொடுக்கப்பட்டன.

3. ஜப்பான், சில பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ராஜப் பிரதிநிதிகளால் ஆளப்பட்டு வந்தது.

இப்பெரிய மாற்றங்கள் ஜமீன்தார்களின் ஆட்சி முறையைக் கவிழ்த்ததோடு புதிய சகாப்தத்தையும் உண்டாக்கின.

கி. பி. 710—793

ஜப்பானியர் சீனர்களைப் பின்பற்றி தங்கள் தலை நகரை அழகு படுத்தினர். நாரா நகரம் சுமார் எழு பது வருடங்களுக்கு மேல் ஜப்பானின் தலைநகராக இருந்தது. இக்காலத்தில் பௌத்த மதம் நன்கு பர விற்று. தேசம் நல்ல நிலையிலிருந்தது. மக்கள் சந் தோஷமாகவும் அமைதியாகவும் வாழ்ந்தனர்.

கி. பி. 794—1192

காமு சக்ரவர்த்தி 794-ல் ஜப்பான் தலைமை ஸ்தா னத்தை நாரா நகரிலிருந்து கியோத்தோ நகரத்திற்கு மாற்றினர். ஒன்பதாவது நூற்றுண்டின் மத்தியி லிருந்து வுஜிவாரா என்ற பிரபல குடும்பத்தார் அரச குடும்பத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டனர். அவர்களே அரசப் பிரதிநிதிகளாக ஆட்சி செலுத்தி னர். தங்களைப் பற்றியும் தங்கள் உறவினர்களைப் பற்றியுமே அவர்கள் அதிகக் கவலை கொண்டனர்.

இங்நிலையில் மீண்டும் ஜமீன்தார்களின் ஆட்சி ஆரம்பமாயிற்று. சாதாரணக் குடியானவர்கள் ஜமீன்தார்களிடம் கடன்பட்டதால் அவர்களின் அடிமைகளாயினர். இந்த ஜமீன்தார்களின் அதி

காரம் அதிகமாயிற்று. அரசாங்க உத்தரவுகளையும் அவமதிக்கத் தொடங்கினர்.

நாட்டிலே குழப்பம் அதிகரித்தது. திருடர் களும் போக்கிரிகளும் அதிகமாயினர். செல்வவந்தர் கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள விரும்பினர். இந்நிலையில் வாலிபர்களான விவசாயிகள் கூட்டம் கூட்டமாகச் சேர்ந்து திருடர்களை முறியடித்தனர். இவ்வாலிபக் கூட்டத்தினருக்கு " சாமுராய் " என்று பெயர். சண்டை செய்வதே இவர்களின் தொழில். பணக்காரர்கள் பலர் இவர்களுக்குப் பணவுதவி செய்து தங்கள் பாதுகாப்பாளர்களாக ஏற்படுத்திக் கொண்டனர். இந்தச் சாமுராய்களின் ஆதிக்கம் நாளுக்கு நாள் அதிகப்பட்டது. நாளடைவில் இவர் கள் முக்கிய அரசாங்க பதவிகளையும் வகிக்க ஆரம் பித்தனர்.

பதினோராம் நூற்றாண்டில் சக்ரவர்த்தி வுஜிவா ராக்குடும்பத்தின் தனியாட்சியை நிறுத்தி விட்டார்.

கி. பி. 1192—1337

ஜப்பான் சக்ரவர்த்தி தனது நாட்டின் பல பாகங்களிலும் சிறந்த யுத்த வீரர்களைக் கவர்னர்க ளாக நியமித்து அவர்களுக்கு அதிகப்படியான அதி காரங்களைக் கொடுத்தார். இவர்களின் தலைவரான யாரிதோமா ஆட்சி செலுத்தினர். அவர் எளிய வாழ்க்கை நடத்தினர். அதைப்போலவே மற்றவர் களையும் நடக்கும்படிகூறினர். வியாபாரமும் விவசா

யமும் விருத்தி யடைந்தது. கல்வி பரவிற்று. வரிகள் குறைக்கப் பெற்றன. யாரிதோமா தன்னலத் தியாகி யாய் வாழ்ந்தார். ஜப்பானியர்கள் அவரைப் போற்றிப் புகழ்ந்தனர்.

கி. பி. 1338—1602

கியோத்தோவைச் சேர்ந்த மாருமோச்சி என்பவர் இக்காலத்தில் அரசருக்குப் பதிலாய் ஆட்சி செலுத்தினர். 1368-ல் ஜப்பானுக்கும் கொரியாவுக்கும் வியாபார சம்பந்தம் உண்டாயிற்று. ஷிண்டோ மதத்தைச் சேர்ந்தவர்களுக்கும் பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இக்காலத்தில் சண்டை சச்சரவுகள் உண்டாயின. ஒரு செல்வவந்தரிடம் வேலை பார்த்த ஓடா என்பவர் சுதந்தரப் புருஷராகத் தோன்றி, பலத்த பிரசாரம் செய்து மாருமோச்சி ஆட்சி முறையை அடியோடு நிறுத்தினர். சக்ரவர்த்தியே தேசத்தை நேரில் ஆளவேண்டுமென்று வற்புறுத்தினர்.

கி. பி. 1602—1867

ஐயே யாஸு சக்ரவர்த்தி டோக்கியோவி லிருந்து கொண்டு தமது அதிகாரத்துக் குட்பட்ட இருநூறு பிரபுக்களையும் பொது மக்களையும் ஆண்டு வந்தார். இவர் ஆட்சியில் பிரபுக்கள் தங்களின் செல்வாக்கை முழுதும் இழந்தனர்.

மெஜி அரசரின் காலம் 1868

1868ல் மெஜி அரசர் பட்டத்திற்கு வந்தார். முத

வில் இவர் தனது விருப்பத்தைப் பின்வருமாறு தெரிவித்தார் :—

1. சபைகள் கூட்டப்பெற்று, பொது மக்கள் அபிப்பிராயத்திற்கிணங்க தேசம் அரசாளப்படவேண்டும்.
2. மேல் வகுப்பு மனிதர்களும் கீழ் வகுப்பு மனிதர்களும் வித்தியாசமில்லாமல் ஒன்று சேர்ந்து எல்லாத் துறைகளிலும் முன்னேற்ற மடைய வேண்டும்.
3. அரசாங்க அதிகாரிகளும் பொது மக்களும் ஒரே மாதிரியாகவே நடத்தப் படவேண்டும்.
4. தேவையற்ற பழைய வழக்கங்கள் ஒழிய வேண்டும். மக்கள் ஒவ்வொரு துறைகளிலும் முன்னேறிச் செல்ல வேண்டும்.
5. உலகத்தில் முன்னேற்ற மடைந்த தேசங்கள் கற்பிக்கும் பாடத்தை ஜப்பான் கற்றுக்கொண்டு அதன்படி நடக்கவேண்டும்.

மெஜி அரசரின் காலத்தில் டோக்கியோ, ஜப்பானின் தலைநகராயிற்று. ஜப்பான் 26 ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு ஜில்லாவுக்கும் கவர்னர் நியமிக்கப்பெற்றார்.

1871ல் கலப்பு மணம் அனுமதிக்கப்பட்டது. வெளி நாடுகளுக்குச் சென்ற ஜப்பானியர்கள் திரும்பி வந்து மேலை நாட்டு நாகரிகத்தை ஜப்பானில் புகுத்த ஆரம்பித்தனர்.

அரசாங்கத்தின் அதி தீவிரமான முற்போக்கைக் கண்டு பிற்போக்காளர் திகைத்தனர். பெருங்கிளர்ச்சி

செய்தனர். பல அரசாங்க அதிகாரிகள் கொல்லப்பட்டனர். சைகோ என்பவன் 15000 கொண்ட சேனையுடன் அரசாங்கச் சேனையை எதிர்த்தான். முடிவில் பெருந் தோல்வி யடைந்தான்.

1880ல் பல சங்கங்களைச் சேர்ந்த 114 பிரதிநிதிகள் ஒஸாக்கா நகரில் மகாசபை கூட்டினர். தேசீய பார்லிமெண்டு திறக்கப்படவேண்டிய அவசியத்தைக் குறித்து வலியுறுத்தினர்.

1889-ல் மெஜி சக்ரவர்த்தி, சக்ரவர்த்தினியாருடன் முதன் முதலாக மந்திராலோசனை சபைக்கு விஜயம் செய்து புதிய ஜப்பானின் அரசியல் அமைப்பை விஸ்தரித்துக் கூறினார்.

ரஷ்ய-ஜப்பான் யுத்தம்

ரஷ்யா, சீனாவுக்கு மஞ்சூரியாவைத் திருப்பிக் கொடுக்கும் விஷயத்தில் உதவி செய்வதாக உறுதி கூறியது. ஆனால் அதற்கு மாறாக 1903-ல் ஒரு பெரிய சேனையை மஞ்சூரியாவுக்கு அனுப்பியது. ரஷ்யச் சேனை போர்ட் ஆர்தர் என்னு மிடத்தைத் தங்கள் தலைமை ஸ்தாபனமாகக் கொண்டது. அலக்ஸிவ் என்பவர் மஞ்சூரியாவில் கவர்னர் ஜெனரலாக ரஷ்யா அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டார். ரஷ்யாகள் மஞ்சூரியாவை உண்மையில் ஆளத் தொடங்கினர். அதே வருடத்தில் கொரியாவின் வட பாகத்தையும் ஆக்ரமித்தார்கள். ரஷ்யர்களின் செய்கை ஜப்பானியர்கட்குப் பிடிக்கவில்லை. ஜப்பான் சில நிபந்தனைகள் கூறியது. ரஷ்யா அதனையும் ஏற்றுக்

கொள்ளவில்லை. எனவே 1904 பிப்ரவரி பத்தாந் தேதியில் ஜப்பான் ரஷ்யாவுடன் போர் தொடங்கிற்று.

ஜப்பானியரான தளபதி டோகோ, போர்ட் ஆர்தர் என்றவிடத்தில் ரஷ்யர்களின் கப்பற் படையைத் தாக்கினார். மற்றும் மூன்று சேனாதிபதிகள் தரைமார்க்கமாகச் சென்று ரஷ்யர்களுடன் போர் புரிந்தனர். 1905 பிப்ரவரியில் ரஷ்யச் சேனை, ஜப்பானியச் சேனையை முக்டன் நகரில் முறியடித்தது.

ரஷ்யக் கப்பல்கள் ஜப்பானைத் தாக்குவதற்காக வந்துகொண்டிருந்தன. தளபதி டோகோ தமது கப்பல்களுடன் மறைவாக விருந்து ரஷ்யக் கப்பல்களை முறியடித்து வெற்றி கொண்டார்.

அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ரூஸ்வெல்ட் இவ்விரு நாடுகளையும் சமாதானப்படுத்தும் முயற்சியிலீடுபட்டார். இவ்விரு நாட்டின் பிரதிநிதிகளும் அமெரிக்காவில் சந்தித்துப் பேசினர். ஜப்பானுடைய உரிமைகளை ரஷ்யா அனுமதித்தது. ரஷ்யா ஜப்பானுக்குச் சில ரயில் பாதைகளையும் சில நிலக்கரிச் சுரங்கங்களையும் விட்டுக் கொடுத்தது.

1912-ல் மெஜி சக்ரவர்த்தி காலமானார். அவருடைய மரணத்திற்குத் தேச மக்கள் பெரிதும் வருந்தினர். தங்கள் அன்பின் அறிகுறியாக அவருக்கு ஒரு கோயில் அமைத்தனர். அது தான் 'மெஜி ஷ்ரைன், என்பது.

மெஜி சக்ரவர்த்திக்குப் பின் அவருடைய குமாரரான டெய்ஸோ 1912-ம் வருஷத்தில் பட்டத்திற்கு

வந்தார். தமது தந்தையைப் போலவே இவரும் அரசாண்டார். தமது தந்தையின் திட்டங்களை நிறைவேற்றுவதில் பெரு முயற்சி எடுத்துக் கொண்டார். 1926-ல் இவர் காலமானார்.

பின்னர் இவருடைய புதல்வரான ஹிரோ ஹிடோ ஜப்பான் சக்ரவர்த்தியானார். இப்பொழுது நடைபெறுவது இவரது ஆட்சியே யாகும்.

அரசியல் அமைப்பு

ஜப்பான் ஒரு சக்ரவர்த்தியின் ஆளுகைக்குட்பட்ட நாடாகும். ஜப்பானின் அரசியல் சட்டப்படி 2599 வருடங்களாக அரசாண்டு வரும் இதே அரச குடும்பத்தினர்தான் இனியும் ஆண்டு வருவார்கள். சக்ரவர்த்தியின் பெயராலேதான் எல்லாக் காரியங்களும் நடைபெற்று வரும்.

தேச நன்மையை முன்னிட்டு மேற்சபை கீழ்ச் சபை என இரண்டு சபைகளிருக்கும். (இதனைத்தான் இம்பீரியல் டயட் Imperial Diet என்று கூறுவது) மேற்சபை அங்கத்தவர்களில் பெரும்பாலோர் சக்ரவர்த்தியால் நியமிக்கப் படுபவர்கள். கீழ்ச்சபையிலுள்ள வர்களில் பெரும்பாலோர் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப் படுபவர்கள். தற்பொழுது மேற்சபையில் 502 அங்கத்தவர்களும் கீழ்ச்சபையில் 426 அங்கத்தவர்களும் இருப்பதாகத் தெரிகிறது. 30 வயதுக்குக் குறைந்தவர்கள் இச் சபைகளில் அங்கம் பெற முடியாது.

இச் சபைகளுக்குச் சக்ரவர்த்தியை நீக்கவோ, அல்லது சக்ரவர்த்தி குடும்பத்தாருக்குக் கொடுக்கப் பெற்றுவரும் படித்தரத்தைக் குறைக்கவோ அதி காரம் கிடையாது. சக்ரவர்த்தி "புனித" மானவ ராதலால் இவர் எத்தகைய குறையுமில்லாதவர் என்று கருதப்படவேண்டும். இவர்மீது குற்றம் சுமத்த யாருக்கும் உரிமையில்லை. மொத்தம் பதின் மூன்று மந்திரிகள் இருப்பார்கள். இதில் பிரதம மந்திரி ஒரு வர். பன்னிருவர் மற்ற மந்திரிகள். மந்திரிகள் தங்கள் தங்கள் இலாகாகளுக்குத் தலைவராக இருப்பதோடு சக்ரவர்த்திக்குப் பொறுப்பாளர்களாகவும் இருப் பார்கள்.

இருபத்து நான்கு அங்கத்தினர்கள் கொண்ட 'பிரிவி கவுன்சில்' ஒன்றிருக்கிறது. பிரதம மந்திரி யைக் கலந்துகொண்டு சக்ரவர்த்தி இந்த அங்கத்தி னர்களை நியமிப்பார். அரச குடும்பத்தைச் சேர்ந்த வர்களும் உயர்ந்த அதிகாரிகளும் சில மந்திரிகளுமே இச் சபையில் பதவி வகிக்கத் தகுதியுடையவர்கள். இவர்கள் சக்ரவர்த்திக்கு யோசனை கூறுவார்கள்.

சக்ரவர்த்திக்குச் சில தனி அதிகாரங்கள் உண்டு. தேசத்தின் நெருக்கடியான நிலையில் சபைகள் கூட் டப்பட முடியாமலிருக்கும் பொழுது சில உத்தரவு கள் பிறப்பிக்கலாம். பின்னல் இச்சபைகள் சக்ர வர்த்தியின் உத்தரவுகளை ஆதரிக்காவிட்டால் அவ் வுத்தரவுகள் ரத்துசெய்யப்பெறும். யுத்தங்களைத் தொடங்குவதற்கோ அல்லது நிறுத்துவதற்கோ அல்லது உடன்படிக்கை செய்து கொள்வதற்கோ

சக்ரவர்த்திக்குத்தான் உரிமையுண்டு. (மற்ற நாடு களிலுள்ள சக்ரவர்த்திகளின் அதிகாரங்களைக் காட்டிலும் ஜப்பானிய சக்ரவர்த்திக்குள்ள அதி காரம் அதிகமென்றுதான் கூறப்படுகிறது.)

ஜனங்களுக்கு எழுத்து சுதந்தரம் பேச்சுச் சுதந்தரம் முதலியன உண்டு. அரசாங்கங்களில் உத்தியோகம் வகிக்கவும அவர்களுக்கு உரிமை உண்டு. ஜப்பானியப் பிரஜைகள் எந்த விதத்திலும் கேவலமாகவோ அல்லது அலட்சியமாகவோ நடத் தப்பட மாட்டார்கள். மிக விசேஷமான காரணங்க ளிருந்தாலன்றி ஜப்பானியப் பிரஜைகள் கைது செய்யப்பட மாட்டார்கள். அவர்களின் சொத் துக்கள் பறிமுதல் செய்யப்பட மாட்டா. எப் பொழுதுமே விசாரணையின்றிச் சிறையிலடைத்து வைக்கப்பட மாட்டார்கள். பிரஜா சுதந்தரத்தை அனுபவிக்க அவர்களுக்குப் பூரண உரிமையுண்டு.

கல்வி முறை

இன்று தினம் 100-க்கு 99·57 பேர் ஜப்பானில் கல்வி கற்றவர்கள். செவிடர்களும், குருடர்களும் கூடப் படித்தவர்கள். கட்டாயக் கல்விமுறை அமுலிலிருந்து வருகிறது. குழந்தைகளைப் பள்ளிக் கூடத்திற்கு அனுப்பாத பெற்றோர்கள் தண்டிக்கப் படுகின்றனர்.

சீன எழுத்துக்கள்தான் ஜப்பானின் உயிர். காட்டகனு, ஹீராகனு என்ற 48 எழுத்துக்களும் ஜப்பான் பாஷையைச் சேர்ந்தனவேயாகும்.

ஜப்பான்

கி. பி. மூன்ருவது நூற்றுண்டிலேயே ஜப்பானியர்கள் கல்வியறிவு பெற்றனர். என்ருலும் கி. பி. 607-ல் நாரா நகரிலுள்ள கோவிலில் ஷோடோகூ டெய்ஷி என்ற இளவரசர் முதலாவது பள்ளிக்கூடத்தைத் தொடங்கிஞர். 1872-ல் மெஜி அரசர் ஆட்சிக்கு வந்த ஐந்தாவதாண்டில்தான் கட்டாயக் கல்வி சட்டமாக்கப் பட்டது.

1933-ல் ஜப்பானில் 45 ஆயிரத்துக்கு மேற்பட்ட பள்ளிக்கூடங்கள் இருந்தன. அதில் சுமார் ஒரு கோடியே முப்பத்தைந்து லட்சம் மாணுக்கர்கள் படித்தனர். ஜப்பானில் 47 சர்வ கலாசாலைகளும் 116 காலேஜ்களும் பெண்களுக்கென 963 உயர்தரப் பள்ளிக்கூடங்களும் இருக்கின்றன. சுமார் 26 ஆயிரம் ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. ஊமையர்களுக்கு 59 பள்ளிக்கூடங்களும் குருடர்களுக்கு 78 பள்ளிக்கூடங்களும் இருக்கின்றன. தொழிற் கல்வி போதிக்கும் பள்ளிக்கூடங்கள் 15 ஆயிரத்துக்கு மேற்பட்டனவாகும்.

6 வயது முதல் 14 வயதுவரை, படிக்கும் பருவம். குறைந்தது ஆறு வருடகாலம் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் கல்வி பயிலவேண்டும். அதற்கு மேல் இஷ்டப்பட்டால் கல்வி கற்கலாம். ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் மாணவர்களும் மாணவிகளும் கலந்து படிக்கின்றனர். பின்னர் உயர்தரப் படிப்பிற்குத் தனித்தனிப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன.

மாணவர்கள் ஒரே மாதிரி உடையணிகின்

றனர். மாணவிகளும் ஒரே மாதிரி உடையணிகின் றனர். ஆடம்பரமில்லாத எளிய முறையிலேயே இவ்வுடைகள் தயாரிக்கப் படுகின்றன.

பள்ளிப் பிள்ளைகளுக்கும் ஆசிரியர்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. மாணவர்களின் எதிர்கால வாழ்க்கையில் ஆசிரியர்கள் போதிய கவனம் செலுத்துகின்றனர். வாழ்க்கையில் நடந்து கொள்ளும் விதங்களைப் போதிக்கின்றனர்.

"நாம் ஜப்பானியர். நமது நாடு ஜப்பான். நமது நாட்டின் முன்னேற்றத்திற்கு நாம் பாடுபட வேண்டும்" என்பது போன்றவைகள் தான் பாலர் பாடத்தில் முதன் முதலில் ஆரம்பிக்கப் படுகின்றன.

சாதாரணமாக ஆசிரியர்கள் மாணவர்களைக் கூட்டம் கூட்டமாக அழைத்துக்கொண்டு, ஒவ்வொரு விடுமுறையிலும் ஜப்பானின் பல பகுதிகளுக்குச் செல்வது வழக்கம்.

மனிதர்கள் செல்வதற்கு அஞ்சக்கூடிய இடங்கட்கு மாணவர்களை அழைத்துச் சென்று அவர்களின் அச்சத்தைப் போக்க விரும்புகின்றார்கள் ஆசிரியர்கள். சில சமயங்களில் ஒரு ஆசிரியர் பத்துப் பதினைந்து மாணவர்களை அழைத்து மயானத்திற்குச் சென்று ஓரிரவைப் போக்கிவிட்டு மறுநாள் திரும்பி வருவதைப் பார்க்கலாம்.

தேகப்பயிற்சி மாணவர்களுக்குக் கட்டாயமான பாடம். சரித்திரம், பூகோளம், விஞ்ஞானம் முதலியவைகளும் கற்பிக்கப்படுகின்றன. எல்லாப் பாடங்களும் ஜப்பான் பாஷையிலேயே கற்பிக்கப்

படுகின்றன. சினிமா மூலம் பாடம் கற்பிக்கும் முறை சர்வ சாதாரணமாகிவிட்டது. முக்கிய பள்ளிக்கூடங்களில் நல்ல அழகிய சினிமாத் தியேட்டர்கள் இருப்பதைக் காணலாம்.

சாதாரணமாக ஆரம்பப் பள்ளிக்கூடத்திலுள்ள ஜப்பானிய மாணவன் மாதமொன்றுக்குச் சுமார் இரண்டரை யணாத்தான் சம்பளம் செலுத்துகின்றான். ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் வேலை பார்க்கும் உபாத்தியாயர்கட்குச் சராசரி 50 ரூபாயும் உபாத்தியாயினிக்குச் சராசரி 40 ரூபாயும் சம்பளம் கிடைக்கின்றது.

கல்வி மந்திரிக்கு, அதிகமான அதிகாரம் அளிக்கப் பட்டிருக்கிறது. மாகாண கவர்னர்களையும், போலீஸ் மேலதிகாரிகளையும் சில சமயங்களில் உத்தரவிடும் அதிகாரமும்கூட கல்வி மந்திரிக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது.

ஜப்பானில் பத்திரிகைகள்

சென்ற 60 வருடத்திற்குள்ளாக ஜப்பான் பத்திரிகைத் துறையிலே பிரமிக்கத்தக்க அபிவிருத்தியடைந்திருக்கிறது. சமாச்சாரங்களை உடனுக்குடன் வெளியிடுவதிலே ஜப்பானியப் பத்திரிகைகள் இணையற்று விளங்குகின்றன. சமீப கால அறிக்கைப்படி ஜப்பானில் வெளியாகும் தினசரிப் பத்திரிகைகள் 1179 ஆகும். 461 பத்திரிகைகள் வாரந்தோறும் வெளியாகின்றன. மாத மும்முறையோ அல்லது அதற்குக் குறைவாகவோ வெளிவரும் பத்திரிகைள்

5038. மொத்தத்தில் 6678 பத்திரிகைகள். பத்துக் கோடி மக்களுள்ள நாட்டிலே, இவ்வளவு பத்திரிகை கள் நடைபெறுகின்றன. 4000 பிரதியிலிருந்து 2500000 பிரதிகள் வரை பத்திரிகைகள் அச்சிடப் பெறுகின்றன. ஜப்பானில் சுமார் ஒரு கோடியே எழுபத்தைந்து லட்சம் வீடுகள் இருக்கின்றன. ஜப் பானிலுள்ள தினசரிகள் தினமொன்றுக்கு இரண்டு கோடி பிரதிகள் வெளியிடுகின்றன. இதிலிருந்து ஜப்பானியர்கட்குப் பத்திரிகை படிப்பதிலுள்ள ஆர்வத்தை நன்கு தெரிந்து கொள்ளலாம். உண்பதும், உறங்குவதும் எவ்வாறு நமது கடமையென எண்ணு கிறோமோ, அதைப் போலவே ஜப்பானியர் பத்திரிகை படிப்பது தங்கள் கடமை என எண்ணுகின்றனர்.

டோக்கியோ ஜப்பானின் தலை நகர். இங்கு மட்டும் 208 தினசரிப் பத்திரிகைகள் வெளியாகின்றன. ஓஸாக்கா ஜப்பானிலுள்ள இரண்டாவது பெரிய பட்டணம். இங்கு 90 தினசரிகள் வெளியாகின்றன. நிச்சி நிச்சி, ஓஸக்கா மைனிச்சி, டோக்கியோ அசாஹி, ஓஸாக்கா அசாஹி, யோமுரி ஷிம்பன், ஹோச்சி ஷிம்பன், ஜிஜிஷிம்பன், கோகு மின் ஷிம்பன், சுகை ஷோக்யோ ஷிம்பன் முதலியவைகள் பிரபல தினசரிகளாகும். முதலில் கூறப்பட்ட நான்கு பத்திரிகைகளில் டோக்கியோ நிச்சி நிச்சியும் ஓஸாக்கா மைனிச்சியும் ஒரு ஸ்தாபனத்தைச் சேர்ந்த சகோதரப் பத்திரிகைகளாகும். இப் பத்திரிகைகள் ஒரே காலத்தில் டோக்கியோவிலும் ஓஸாக்காவிலும் வெளியிடப்படுகின்றன. நிச்சிநிச்சி என்றால் நாளுக்கு

நாள் என்பது பொருள். மைனிச்சி, என்பது இன்றைக்கு எனப் பொருள்படும். டோக்கியோ அசாஹியும் ஒஸாக்கா அசாஹியும் ஒரே ஸ்தாபனத்தைச் சேர்ந்த இரு சகோதரப் பத்திரிகைகள். மைனிக்சி, நிச்சி நிச்சி போலவே இவைகள் டோக்கியோவிலும் ஒஸாக்காவிலும் ஏக காலத்தில் வெளியாகின்றன. அசாஹி என்றால் உதய சூரியன் என்பது பொருள். மேற் குறிப்பிட்ட இந்த இரு ஸ்தாபனங்களும் ஜப்பான் பத்திரிகை உலகின் ஜீவ நாடியாக விளங்குகின்றன.

ஒஸாக்கா மைனிச்சி காரியாலயத்தில் 2523 பேர் வேலை செய்கின்றார்கள். இதனைச் சேர்ந்த டோக்கியோ நிச்சி நிச்சி ஆபீஸில் 3608 பேர் வேலை செய்கின்றார்கள். எனவே இந்த ஸ்தாபனத்தில் வேலை பார்ப்பவர்களின் தொகை 6131 ஆகும்.

குருடர்களுக்காக "பிரைலி மைனிச்சி" என்ற வாரப்பத்திரிகை நடக்கின்றது. இதன் ஆசிரியர் திரு. கே. நாகமூரா. இவரும் ஒரு குருடர். பத்திரிகையைத் தடவிப் படிக்கத் தகுந்த முறையில் இது அச்சிடப் பெறுகின்றது. இப்பத்திரிகை அச்சிடும் இயந்திரங்கள் அதிக விலையுயர்ந்தனவாகும். குருட்டுப் பத்திரிகைப் பிரதி ஒன்றின் விலை 10 சென் அதாவது ஒன்றேகால் அணா.

டோக்கியோவும் ஒஸாக்காவும் சுமார் ஐந்நூறு கிலோமீத்தர் தூரத்திலிருக்கின்றன. இவ்விரண்டிடங்களிலுமுள்ள இக்காரியாலயத்தார் தங்கட்கெனச் சொந்தமாக டெலிபோன் அமைத்துள்ளார்

கள். இவ்வசதியை ஏற்படுத்துவதற்கு மூன்று லட்சம் யென்களுக்கு மேல் செலவாகி யிருக்கின்றது. மிகவும் தேர்ச்சி பெற்ற வேலைக்காரர்கள் இரண்டு ஆபீஸ்களிலும் மூன்று நிமிஷ நேரத்தில் ஆயிரம் வார்த்தைகள் வீதம் செய்திகளை வாங்கியும் அனுப்பி யும் வருகின்றார்கள்.

தந்தி மூலம் படம் அனுப்பும் வசதியும் இப்பொழுது அமைக்கப் பட்டிருக்கிறது. இவ்வியந்திரம் டாக்டர் யாசுஜிரோ நிவா என்ற ஜப்பானியருடைய முறைப்படி செய்யப் பெற்றது. ஒரு புகைப் படத்தை டோக்கியோவிலிருந்து ஒஸாக்காவுக்கு இவ்வியந்திரத்தின் மூலமாக ஐந்து நிமிஷ நேரத்தில் அனுப்பி விடலாம்.

ஒஸாக்கா மைனிச்சியில் மட்டும் 11 நிப்பன் உல்ட்ரா லைட்னிங் பிரஸ்கள் இருக்கின்றன. பெரிய பத்திரிகையின் நான்கு பக்கங்கள், ஒரு முறையில் அடிக்கப்படுகின்றன. இதில் ஒவ்வொரு மிஷினும் மணி ஒன்றுக்கு ஒன்றரை லட்சம் பிரதிகள் அடிக்கும் சக்தி யுடையனவாக இருக்கின்றன. இதைத் தவிர 12 **High Speed** மெஷின்களும் மற்றும் நூற்றுக் கணக்கான சிறு இயந்திரங்களும் இருக்கின்றன. **High Speed** மெஷின்கள் மணி மூன்றுக்கு நான்கு பக்கங்கள் கொண்ட 90,000 பிரதிகள் அச்சிடும் சக்தி யுடையவைகள். 16 பக்கங்களை ஒன்றாக அடித்து, மடித்து ஐம்பது ஐம்பது பிரதிகளாக வெளியிடும் இயந்திரங்கள் பலவும் இங்குள்ளன.

இப்பத்திரிகையின் இருபத்தைந்து லட்சத்திற்கு

மேற்பட்ட பிரதிகள் சில மணி நேரங்களிலே ஜப்பானிலும் வெளி நாடுகளிலுமுள்ள நாலாயிரம் ஏஜண்டுகட்கு சைகிளிலும் ஆகாய விமானத்திலும் அனுப்பப்படுகின்றன. அன்றியும் ஒவ்வொரு ஜில்லா சம்பந்தமான அனுபந்தங்கள் பதின் மூன்று ஜில்லாக்களுக்கு அனுப்பப்படுகின்றன. இவ்வனுபந்தங்களும் நாளுக்கு மூன்று முறை அச்சிடப்படுகின்றன. இவ்வாறு ஜில்லாச் செய்திகள் நிறைந்த அனுபந்தங்களை; அந்தந்த ஜில்லாக்கட்கு இலவசமாய் அனுப்புவதினால் அந்தந்த ஜில்லாவிலுள்ள உள் நாட்டுப் பத்திரிகைகளின் மதிப்புக் குறைந்து விடுகின்றது. மைனிச்சி பத்திரிகை தினந்தோறும் எட்டு முறை வெளியிடப்படுகின்றது. இதில் ஒரு பக்கம் முழுதும் படங்கள் தான். தினந்தோறும் 200 முழுப் பிளேட்டுகளில் பிளாக்குகள் செய்யப்படுகின்றன. தினந்தோறும் செய்திகள் மட்டும் 50 பக்கங்களுக்கு மேலாக அச்சிடப்படுகின்றன. கால நிலையைத்தான் ஜனங்கள் முதலில் பார்க்கின்றனர். பத்திரிகைப் பெயருக்கு அடுத்தாற்போல் அன்றையக் கால நிலையைப்பற்றிக் குறிப்புகள் காணப்படும். கால நிலை அறிவதற்கென மைனிச்சி காரியாலயத்தில் அப்சர்வேட்ரி அமைக்கப் பெற்றிருக்கிறது.

மைனிச்சி காரியாலயத்தார் தங்கள் பத்திரிகை வசதிக்கென பதினொரு ஆகாய விமானங்கள் வைத்துள்ளார்கள். விஷயங்களை விரைவிலே கொண்டு வரவும், பத்திரிகைகளை விரைவிலே சேர்ப்பிக்கவும் இவ்விமானங்கள் உபயோகிக்கப் படுகின்றன.

சென்ற மஞ்சூரியா யுத்தத்தில் இவ்விமானங்கள் மிகவும் பயனுடையவைகளாக இருந்திருக்கின்றன.

இந்த வசதியோடு மட்டும் ஜப்பானியப் பத்திரிகைக்காரர்கள் திருப்தியடையவில்லை. இதைவிடத் துரிதமாக விஷயங்கள் சேகரிப்பதில் ஜப்பானியர் கவனம் செலுத்துகின்றனர். சாதாரணமாக ஆகாய விமானத்தில் விஷயம் கொண்டு வருவதாக வைத்துக் கொள்வோம். அந்த விமானம் இறங்குவதற்குத் தக்க இடம் இருக்க வேண்டும். விமானம் இறங்கியதும் செய்தியை மோட்டாரில் உடனே அனுப்ப வசதி யிருக்க வேண்டும். இந்த வசதிகள் எப்பொழுதும் இருப்பது கஷ்டம். எனவே இதற்காகத் தான் புறுக்கள் வளர்க்கின்றார்கள். பத்திரிகாலயத்தின் உச்சி மாடியிலே புறுக்களுக்கெனத் தனியிடம் அமைக்கப்பட்டிருக்கிறது. சமாச்சாரம் கொண்டு வரும் விதத்தில் புறுக்களைப் பயிற்றுவிக்கின்றார்கள். புறுக்களை எந்த விடத்தில் விட்டபோதிலும் அவைகள் நேராகப் பத்திரிகாலயத்திற்கு வந்து விடுகின்றன. புறுக்களின் இறகிலே அல்லது கழுத்திலே கடிதங்களையும் புகைப் படங்களையும் கட்டிவிடுகின்றார்கள்.

சில ஆண்டுகட்கு முன் அமெரிக்கப் பெரியார் ஒருவர் ஜப்பானுக்குச் சென்றிருந்தார். மைனிச்சி நிருபர் ஒரு புறுவுடன் கப்பலுக்குச் சென்று அப்பெரியாரைப் பேட்டி கண்டார். பேட்டி கண்ட விபரத்தை சுருக்கெழுத்தில் எழுதி புறுவின் மூலம் அனுப்பிவிட்டார். அமெரிக்கப் பெரியார் கப்பலை விட்டுக் கீழே இறங்குகையில் அவர் கையில்

மைனிச்சி பத்திரிகை கொடுக்கப்பட்டதாம். அவர் அப்பத்திரிகையில் தான் சில நிமிஷங்கட்கு முன் கூறியவைகள் பிரசுரமா யிருக்கக்கண்டு ஆச்சரியப் பட்டாராம். இவ்வளவு சுறு சுறுப்பான முறையிலே அங்கு செய்திகள் வெளியிடப்படுகின்றன.

இப்பத்திரிகாலயத்தார் பலவிதமான பத்திரிகை களை வெளியிடுகின்றார்கள். சினிமா சம்பந்தமாகவும், இலக்கிய சம்பந்தமாகவும், குடும்ப சம்பந்தமாகவும், விஞ்ஞானம், சித்திரம், புகைப்படம், கல்வி முதலிய வைகள் சம்பந்தமாகவும் பல பல பத்திரிகைகளை வெளியிடுகின்றார்கள். நாட்டு நிகழ்ச்சிகளை சினிமாப் படம் பிடிக்கின்றார்கள். இவ்வாறு பிடிக்கப்பட்ட படங்கள் 4000 ரீல்களுக்கு அதிகமா யிருக்கின்றன. இவைகளை மாதமிரு முறை பத்திரிகாலயத்தில் காண் பிக்கின்றார்கள். பேசும்படக் காட்சி காட்டுவதற் கெனத் தனித் தியேட்டர்களும் இந்தக் காரியாலயத் திலேயே அமைக்கப்பட்டிருக்கிறது. சினிமா ரீல் களைப் பள்ளிக்கூடங்களுக்கு இலவசமாகவும், வாடகையாகவும் கொடுக்கின்றார்கள்.

தர்மங்கட்காகப் பத்திரிகாலயத்தார் பல லட்சக் கணக்கான யென்கள் கொடுத்திருக்கின்றார்கள். அரசர் பெருமானின் மண விழாவின்போது ஓஸாக்கா மைனிச்சி காரியாலயத்தார் இம்பீரியல் அக்காடமிக்கு லட்சம் யென் நன்கொடை யளித்த னர். ஓஸாக்கா அசாஹி கம்பெனியார் லட்சத்து இருபத்தாறுயிரம் யென் நன்கொடை யளித்தனர். பூகம்பத்தின்போதும் மற்ற சமயங்களிலும் பத்திரி

காலயத்தார்கள் லட்சக் கணக்கான யென் நன் கொடை யளித்துள்ளார்கள். ஓஸாக்கா அசாஹியும் மைனிச்சியைப் போல எல்லா வசதிகளுடனும் பெருமைகளுடனும் மிளிர்கின்றது. இவர்கள் பள்ளிக்கூட மாணவர்கள் பலரைத் தங்கள் சொந்தச் செலவில் வெளிநாடுகளைச் சுற்றிப் பார்ப்பதற்கு அனுப்புகின்றார்கள். மற்றும் பல விளையாட்டுப் போட்டிகள் நடத்தி அதிக வெற்றி பெற்றவர்கட்குத் தக்க பரிசளிக்கின்றார்கள். நாட்டின் பொதுவாழ்க் கையில் பத்திரிகைக்காரர்கள் எடுத்துக் கொள்ளும் பங்கு குறிப்பிடத் தக்கதும் பாராட்டத் தக்கது மாகும்.

யோகஹாமாவில் செஜி நோமா என்பவர் ஒன் பது மாதப் பத்திரிகைகளை வைத்து நடத்துகின்றார். இவர் பத்திரிகைத் தொழிலில் சிறந்த அனுபவமுள்ள வர். கீழ் நாட்டு மாதப் பத்திரிகைகளின் அரசர் என இவரைப் புகழ்கின்றார்கள். இவர் வெளியிடும் பத் திரிகைகளில் ஒரு பக்கமாவது படிப்பதற்குச் சுவை யில்லாத விஷயங்கள் காணப்பட மாட்டாதாம். ஜப் பானில் **Fuji yama** ஃபுஜி யாமா (மலை) பிரபல மடைந் துள்ளது போல செஜி நோமாவும் பிரபல மடைந் துள்ளார். கட்டுரையாளர்கட்குத் தாராளமாகப் பொருள் வழங்கும் வள்ளல்களில் இவர் ஒருவர். இவருடைய எளிய வாழ்க்கை, அடக்கம், பணிவு முதலியவை இவரது பெருமையை இன்னும் அதிகப் படுத்துகின்றன.

ஜப்பானில், ஓஸாக்கா மைனிச்சி, ஜப்பான்

டைம்ஸ், ஜப்பான் அட்வர்டைஸர், ஜப்பான் கிரானிகல், முதலிய ஆங்கிலத் தினசரிகள் நடைபெறுகின்றன.

ஷிம்பன் ரெங்கோ என்பது அசோஸியேடட் பிரஸ் போன்ற ஒரு ஸ்தாபனம்—இந்த ஸ்தாபனத்தார் உண்மையான செய்திகளை ஒழுங்காக அனுப்புவதில் மிகவும் பேர் பெற்றவர்கள். பெரும்பாலான தினசரிப் பத்திரிகையைச் சேர்ந்தவர்கள் இந்தக் கம்பெனியில் டைரக்டர்களாக விருக்கின்றனர்.

சாதாரணமாக ஒரு ஜப்பானிய தினசரியின் விலை மூன்று சென். (நாலரைத் தம்பிடி) சில சமயங்களில் பதினாறு பக்கங்களுடனும் ஒவ்வொரு பதிப்புகள் தோன்றும். மாதச் சந்தா ஒன்பது அல்லது பத்து அணுவுக்குள் ஆகும்.

ரயில்களிலும், மோட்டார்களிலும் பலர் பத்திரிகை படிப்பதைக் காணலாம். ஒருவர் பத்திரிகையை மற்றொருவர் பார்க்கவும் மாட்டார்கள். படிக்கவும் மாட்டார்கள். ஒருவர் வைத்துள்ள பத்திரிகையை இரவல் வாங்கிப் படிப்பது அவமானம் என்றும் கேவலம் என்றும் கருதுகின்றார்கள். ரயிலில் பத்திரிகை படிக்கும் ஒருவர், தாம் இறங்கும் பொழுது பத்திரிகையை ரயிலிலேயே போட்டு விட்டுச் செல்வது சர்வ சாதாரணம். அப்பத்திரிகையை யாரும் எடுக்கவோ அன்றிப் படிக்கவோ மாட்டார்கள். ரயில் குறிப்பிட்ட இடத்தைச் சேர்ந்ததும், ரயில் வண்டியைச் சுத்தம் செய்பவர்கள் தான் இப்பத்திரிகைகளை அப்புறப்படுத்துவார்கள்.

பத்திரிகைக் காரர்கள், தங்கள் தினப் பத்திரிகையைப் பக்கம் பக்கமாகக் கண்ணாடிபோட்டுத் தெருவில் மாட்டி விடுவார்கள். பணம் கொடுத்துப் பத்திரிகை வாங்க முடியாத ஏழைகளும், விஷயங்களை விரைவில் தெரிந்துகொள்ள விரும்பும் மக்களும் கூட்டமாகக் கூடி நின்று இவைகளைப் படிப்பதைக் காணலாம்.

பத்திரிகையின் பெருமையை ஜப்பானியர் நன்கு உணர்ந்து விட்டனர். அதனைப் பூரணமாகப் பயன் படுத்திக் கொள்கின்றனர். பத்திரிகைக்காரர்கள் நல்ல செல்வாக்குடன் திகழ்கின்றனர். அவர்களின் செல்வாக்கு நாட்டின் முன்னேற்றத்துக்கே பயன் படுத்தப்படுகிறது.

ஜப்பானியர்

ஜப்பானில் முக்கியமாகவுள்ள மதங்கள் மூன்று. பௌத்த மதத்தை சுமார் நான்கு கோடி ஜனங்கள் தழுவுகின்றார்கள். ஷிண்டோ மதத்தை மதமென்று கூறுவதற்கில்லை. மத நூல்களும் கோட்பாடுகளும் இதற்குக் கிடையா. இயற்கையையும் முன்னோர்களையும் பூசிப்பதே இம்மதமாகும். சுமார் இரண்டு கோடி ஜனங்கள் இம்மதத்தைச் சேர்ந்தவர். மற்றவர் கிறிஸ்துவர்.

ஜப்பான் முழுதும் லட்சத்திற்கு மேற்பட்ட புத்த கோயில்களும், அதைப்போன்று ஷிண்டோ ஆலயங்களும், இருக்கின்றன. ஷிண்டோ மதத்தைச் சேர்ந்தவர்கட்கு ஏராளமான கடவுள்களும்,

அடியார்களும் உண்டு. இவர்கள் சோறு, பழம், காய்கறி, அரிசிச் சாராயம் முதலியவைகளைச் சாமிக்குப் படைக்கின்றார்கள். மும்முறை கைதட்டி சிறிய நாணயமொன்றை உண்டியல் பெட்டியில் போட்டபின்னர் மண்டியிட்டு வணங்குகின்றனர்.

பெரும்பாலான கோயில்கள் மலைகள்மீதும், நதிக் கரைகள் மீதும் அமைந்திருக்கின்றன. மலைகளிலுள்ள கோயில்கள் மன அமைதி பெறுவதற்குத் தக்க விடமாகும். பொதுவாகக் கோயில்கள் சிறந்த முறையிலே அமைக்கப்பெற்றுள்ளன. ஜப்பானியர்கட்குள் மதத் துவேஷம் கிடையாது. சாதாரணமாக ஷிண்டோ மதத்தைச் சேர்ந்த ஒருவர் புத்தர் கோயிலின் முன் செல்லும்பொழுது தனது தொப்பியை எடுத்து வணங்குவதைக் காணலாம். ஜப்பானிலே திருவிழாக்கள் அதிகம். அதற்காகக் குறிப்பிடத்தக்க பெருந்தொகை செலவிடப் படுகின்றன.

பழக்க வழக்கங்கள்

ஜப்பானிலே குடும்பத்தலைவர் தான் அக்குடும்பத்தின் சர்வாதிகாரி. ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒவ்வொரு முத்திரை யிருக்கும். குடும்பத்தில் மூத்த மகனுக்குத்தான் சொத்துரிமை யுண்டு. அதோடு மற்றவர்களைக் காப்பாற்ற வேண்டிய கடமையும் அவனைச் சார்கின்றது. சில பெற்றோர்கள் தங்கள் மூத்த பிள்ளை குடும்பத்தை நிர்வகிக்கத்தகுதியுடையவன் அல்ல என்று கருதினால் மற்ற பிள்ளைகளில் ஒருவரைப் பொறுக்கி எடுப்பார்கள். யாருமே தகுதி

யில்லை என்று கருதினால் ஒரு பையனை சுவீகாரம் செய்து கொள்வார்கள். பெண்களைச் சுவீகாரம் செய்து கொள்ளும் வழக்கம் ஜப்பானில் இருக்கிறது. கல்யாணமான தம்பதிகளையும் சுவீகாரம் செய்து கொள்வது வழக்கம். சுவீகாரம் செய்யப்பட்ட பையனுக்குத் தங்கள் பெண்ணை மணமுடிக்கும் பெற்றோர்களும் உண்டு.

ஒரு குழந்தை பிறந்ததும் ஏழாவது தினத்தில் அதற்குப் பெயரிடுவார்கள். இரட்டைக் குழந்தைகள் பிறக்குமானால் இரண்டாவது பிறந்த குழந்தையே மூத்த பிள்ளையாகும். குழந்தையின் தலையைச் சிரைத்து விடுவார்கள். இதற்கு உற்றார் உறவினர் முதலியோர் வருவது வழக்கம். ஒரு மாதத்திற்குப் பின்னர் இக்குழந்தையின் பாட்டி இக்குழந்தையை ஆலயத்திற்குத் தூக்கிச் செல்வாள். நான்காவது மாதத்தில் பல் முளைத்ததும் குழந்தைக்கு உணவு ஊட்டுவதற்காகச் சில சடங்குகள் செய்வார்கள். முதல் வருடக் கொண்டாட்டம் சிறப்பாக நடைபெறும்.

ஜப்பானிய நாணயம் :—நூறு சென் கொண்டது ஒரு யென். ஒரு சென் செம்பு. ஐந்து, பத்து சென் நிக்கல். ஐம்பது சென் வெள்ளி. ஒரு யென் நோட்டு. ஒரு யென் மதிப்பு சுமார் 12 அணா.

ஜப்பானியரின் சராசரி வயது 43. பொதுவாக ஜப்பானிய இளைஞர்கட்கு 25 வயதுக்கு மேல்தான் திருமணம் நடைபெறுகிறது. பெண்களுக்கு 22, 23-வது வயதில் திருமணம் நடைபெறும். தாகர்கள்

தான் திருமணத்தை முடித்து வைப்பார்கள். தற்பொழுது கல்யாணம் ஆவதற்குமுன்னதாகவே மாப்பிள்ளையும் பெண்ணும் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்து அவர்கள் விருப்ப மறிந்து திருமணம் செய்ய முற்படுகின்றனர். கல்யாணச் சடங்குகள் மிகச் சொற்பம். சில சடங்குகளுக்குப் பின்னர் பெண்வீட்டாரும் மாப்பிள்ளை வீட்டாரும் எதிர் எதிரே இருந்து உணவருந்து வார்கள். மிகச் சுருங்கிய செலவில் இத்திருமணங்கள் முடிந்து விடும்.

ஜப்பானியக் கடவுள்கள்

1. எபிஸூ :—வியாபாரிகளின் தேவதை.
2. டைகோகூ :—செல்வத்திற்குரிய கடவுள்
3. பென்டேன் :—ஜப்பானிய ' சரஸ்வதி
4. பிஷாமோன் :—இராணுவக் கடவுள்.
5. வுதுரோதுஜின் :—தத்துவ சாஸ்திரங்களை நன்குணர்ந்த ஒரு அடியார்
6. ஜூரோஜூன் :—சாராயம் விரும்பும் தெய்வம்
7. ஹோதே :—புத்த மதத்தைச்சேர்ந்த ஒரு அடியார்.

முடிவுரை

ஜப்பானின் முன்னேற்றம் சென்ற அறுபது ஆண்டுகளுக் குள்ளாகத்தான்.

ஜப்பானியர்களுக்குத் தேசபக்தி ரத்தத்திலேயே ஊறியிருக்கிறது. நாம், நமது நாடு என்ற உணர்ச்சி ஜப்பானியர்களுக்கு மிக அதிகம். சமயம் நேர்ந்த காலத்து நாட்டிற்காகத் தங்களையும், தங்கள் உடைமைகளையும் தியாகம் செய்ய ஜப்பானியர் ஒரு பொழுதும் பின் வாங்கியதில்லை. அவர்களுக்குள் ஆயிரக் கணக்கான அபிப்பிராயங்கள் இருக்கலாம். ஆனால் அவர்களின் லட்சியம் ஒன்று. அந்த லட்சியத்தை அடைவதற்கு, தியாகம் செய்வதற்கோ அல்லது விட்டுக் கொடுப்பதற்கோ அவர்கள் தயங்கியதே யில்லை.

அதிர்ஷ்டவசமாக ஜப்பானியர்களுக்குத் தேசபக்தியும் ராஜபக்தியும் ஒன்றாக அமைந்திருக்கின்றது. தேசத்தை எவ்வளவு தூரம் நேசிக்கிறார்களோ, அவ்வளவு தூரம் ராஜனையும் நேசிக்கிறார்கள். அவர்கள் ராஜபக்தி உடையவர்கள் என்று கூறுவதைவிட, ராஜப்பைத்தியம் பிடித்தவர்கள் என்றுகூடக் கூறி விடலாம். சென்ற 2500 ஆண்டுகளாக ஜப்பானில் ஒரே பரம்பரையினர் ஆட்சி செலுத்தி வருகின்றனர். உலகத்தில் எந்த நாட்டிலும் இத்துணை ஆண்டுகள் தொடர்ந்து ஆட்சி நடத்தும் அரச பரம்பரையினரைச் சரித்திரம் அறியாது.

சரித்திரம் அறியாத இப்பெருமையினை எண்ணி எண்ணி ஜப்பானியர் மகிழ்கின்றனர்.

ஜப்பானியர்களுக்கு ஏகாதிபத்தியப் பித்தம் தலைக்கேறி யிருக்கிறது. ரஷ்யர்களை முறியடித்ததி லிருந்தே, அவர்கள் தங்களைக் குறித்துப் பிரமாதமாக எண்ணிக் கொள்கிறார்கள். ஜப்பானியக் கப்பற் படை உலகில் சிறந்த படைகளிலே மூன்றாவதாகும். கீழ் நாடுகளைத் தங்கள் ஆதிக்கத்திற்குக் கொண்டு வருவது ஜப்பானின் நோக்கங்களில் ஒன்றெனத் தெரிகின்றது.

சமீபத்தில் ஜப்பானியர் அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய இரு பெரிய வல்லரசுகளின்மீது போர் தொடுத்து ஆரம்ப வெற்றியும் அடைந்துள்ளார்கள்.

ஏகாதிபத்தியத்தை நாம் மனதார வெறுக்கி றோம். ஏகாதிபத்தியம் வெள்ளை நிறத்தில் வந்தாலும் மஞ்சள் நிறத்தில் வந்தாலும் நமக்கு வித்தியாசமே யில்லை. நமது நாட்டைச் சுரண்டுபவர்களோ அல்லது சுரண்ட முயற்சிப்பவர்களோ, அவர்கள் யாரா யிருந்தாலும் நமது எதிரிகளேயாவர். அவர்களைத் தொலைத்து நமது நாட்டின் சுதந்தரத்தை நிலை நாட்டுவதே நமது முதற் கடமையாகும்.

அநுபந்தம்

புதிய ஜப்பான்

குறிப்பிடத்தக்க சில நிகழ்ச்சிகள்

1868 மெஜி அரசரின் பாட்டாபிஷேகம்.
1869 டோக்கியோவைத் தலைநகரமாக மாற்றியது.
புதிய அரசியல் திட்டம் அமுலுக்கு வந்தது.
1870 வெளிநாடுகட்கு மந்திரிகள் அனுப்பப் பெற்றனர்.
1871 ஜப்பான் 72ஜில்லாக்களாகப் பிரிக்கப்பெற்றது.
1872 கட்டாய தேசீயக் கல்வி முறை ஆரம்பம்.
1874 பர்மோஸாவைக் கண்டு பிடிக்கத் தூதனுப்பியது.
1877 டாகமோரி சைக்கா கோஷ்டியாரின் கலகம்.
1879 சட்டசபைகள் ஆரம்பம்.
1882 மேனாட்டு அரசியல் விஷயங்களைத் தெரிந்துவர ஹிரோமிமி இதோ ஐரோப்பாவுக்குச் சென்றது.
1885 மந்திரி சபை அமைப்பு.
1890 இம்பீரியல் டயட் (பார்லிமெண்டு) ஆரம்பம்.
1894 ஆங்கிலோ—ஜப்பானிய உடன்படிக்கை.
1894-05 சீனா—ஜப்பான் யுத்தம்.
1910 கொரியா, ஜப்பான் ஆட்சிக்கு வந்தது.
1912 மெஜி அரசர் மரணம்.
டெய்ஸோ சக்ரவர்த்தியின் ஆட்சி.
1914-18 உலக யுத்தம்.

1915 சீனாவுடன் உடன்படிக்கை.

1918 உலக யுத்தம் முடிவு.

1919 வர்செயில்ஸ் உடன்படிக்கை. தென்கடல் தீவுகள் ஜப்பானைச் சேர்ந்தன. ஜப்பான் சர்வதேச சங்கத்தில் அங்கம் பெற்றது.

1921 இளவரசரின் மேலைநாட்டுப் பிரயாணம்.

1923 பெரிய பூகம்பம்.

1925 ரஷ்ய—ஜப்பான் உடன்படிக்கை.

1926 டேய்ஸோ சக்ரவர்த்தி மரணம். ஷோவா சக்ரவர்த்தி பட்டாபிஷேகம்.

1927 பொருளாதார நெருக்கடி.

1930 தங்க நிர்ணயத்தைக் கைவிடல்.

1931 மஞ்சூரிய யுத்தம்.

1932 ஷாங்காய் சம்பவம்.

1933 ஜப்பான் சர்வதேச சங்கத்திலிருந்து விலகியது.

1934 மஞ்சுகோவா தனிப்பட்ட அரசாங்கமாகத் தோன்றியது.

1937—சீன சம்பவம்

1941—ஜப்பான் பிரிட்டன்மீதும் அமெரிக்கா மீதும் போர் தொடுத்தது.

ஜப்பான்

ஜப்பான்:—பசிபிக் மகாசமுத்திரத்திலுள்ள ஆறு பெரிய தீவுகளும் மற்ற தீவுகளும் கொண்டது.

விஸ்தீரணம்

ஜப்பான் பிரதம தீவு	238946	சதுர மைல்

ஹொன்ஸு	143938	சதுர மைல்
ஷிகோகு	11734	,,
கியூஸு	26299	,,
ஹொக்கைடோ	55484	,,
ரியூகியூ	1441	,,

ஜப்பானின் ஆதிக்கத்திலுள்ள நாடுகள் ச. மைல்

சோசன் அல்லது கொரியா	137864
பர்மோஸா	22404
பொகேடோ	79
காபாபூடா	22555
குவாண்டாங்	2164
வடகிழக்குத் தீவுகள்	1342
எஸ். எம். ஆர். (மஞ்சூரியா)	184
ஜப்பான் ஏகாதிபத்தியத்தின் மொத்த விஸ்தீரணம்	425 640 44

மலைகள்

6000 அடிக்கு உயரமானவை

ஜப்பானில்	250
பர்மோஸா	130
கொரியா	51

உயரமான மலைகள்	உயரம் (அடி)
வுஜியாமா	12367
கிடா	10462
மஜேைகி	10453

நதிகள்

பெயர்	நீளம் (மைல்)	கப்பல் செல்லும் தூரம்
ஷிநாஞே	243	177 மைல்
தொனே	201	172 மைல்
கிடாகமி	152	145 மைல்

ஏரிகள்

பெயர்	சதுர மைல்	ஆழம் (அடி)
பிவாகோ	421	311
ஹாச்சிரோகதா	138	13
காசுமிகௌரா	110	23

ஜனத் தொகை

1872-ல்	சுமார்	3 கோடி
1889-ல்	,,	4 கோடி
1909-ல்	,,	5 கோடி

பெயர்	ஜனத்தொகை	ஒரு ச. மைலுக்கு
ஜப்பான் பிரதம தீவு	64450005	270
கொரியா	21058305	152
பர்மோஸா	4592537	205
காபாபூடா	259196	12
தென் மஞ்சூரியா	1325011	520
மார்ஷல் தீவுகள்	69626	83
ஜப்பான் சாம்ராஜ்யம்	90396043	208

தொழில் வாரியாக ஜனத்தொகை

தொழில்	ஆண்	பெண்	மொத்தம்
விவசாயம்	7791030	6365000	14156030
மீன் பிடித்தல்	521040	47000	568040
சுரங்கத் தொழில்	198180	38000	236180
கைத்தொழில்	4289560	1004000	5290560
வியாபாரம்	3026110	1437000	4463110
போக்குவரத்து	1027560	81000	1108560
அரசாங்க வேலை	1685060	346010	2031070
வீட்டு வேலைகள்	87000	719000	806000
சில்லரை.	466980	94020	501000
மொத்தம்	19092520	10131030	29160550

முக்கிய பட்டணங்களின் ஜனத்தொகை

1.	டோக்கியோ	5863350
2.	ஒஸாக்கா	2722700
3.	கியோத்தோ	1052500
4.	நகோயா	1017700
5.	கோபை	853800
6.	யோகஹாமா	703900

பட்டணங்களும் கிராமங்களும்

வருஷம்	நகரங்கள்	கிராமங்கள்
1889	754	12632
1898	1221	13,557
1920	1449	10,782
1933	1794	9,784

பூகம்பங்கள்

1596-லிருந்து 1933-க்குள்	27 பூகம்பங்கள்
வருடம்	உயிர்ச் சேதம் (பேர்)
1792	15,200
1847	12,000
1896	27,122
1923	44,279

விவசாயம்

ஜப்பானின் மொத்த நிலம்

சாகுபடிக்கு லாயக்கானவை 15,071,910 சுமார் ஏகரா

குடியானவர் பயிரிட்டது	7,964,205
குத்தகைக்குப் பயிரிட்டது	7,107,705
நெல் வேளாண்மை மட்டும்	8,064,057
ஜப்பானின் மொத்த ஜனத்தொகை	64,450,005
விவசாயிகள் மட்டும்	5,621,535
ஜப்பானில் மொத்த வீடுகள்	12,160,736
விவசாயிகள் வீடு மட்டும்	2,375,833

கால் நடைகள்

	மொத்தம்
மாடு	1,559,833
குதிரை	1,501,177
பன்றி	913,502
ஆடு	30,156
வெள்ளாடு	160,262

ஜப்பானின் தேசீயச் செல்வம்

ஆயிரம் ரூபாய்களில்)

1.	நிலம்	24,873,078
2.	சுரங்கம்	519,721
3.	துறைமுகங்கள்	274,514
4.	பாலம்	386,400
5.	மரம்	5,365,452
6.	கால்நடை	277,085
7.	கட்டிடம்	58,274,640
8.	கைத்தொழில் யந்திரங்கள் முதலியன	1,447,505
9.	ரயில், டிராம்வே	2,878,510
10.	மோட்டார், ஆகாய விமானம்	528,235
11.	கப்பல்கள்	1,648,189
12.	எலெக்ட்ரிக் உற்பத்திச் சாமான்	1,524,035
13.	நீர்ப்பாசன சாமான்கள்	282,223
14.	ஸ்டேட்டிலுள்ள சாமான்கள்	15,077,848
15.	மற்றவைகள்	1,800,412
16.	வெளிநாட்டிலிருந்து வரவேண்டியது	153,277
	மொத்தம்	115,311,124

ஜப்பானின் மொத்த சொத்தில்

தனிப்பட்டவருடையது	100-க்கு	84 பங்கு
அரசாங்கத்தாருடையது	—	12 ,,
பொது ஜனங்களுடையது	—	4 ,,
		100

சரஸ்வதி மஹால் நூலகம்

தொழிற்சாலைகள்

1914-ல்	31,717
1924-ல்	49,161
1934-ல்	71,940

தொழிலாளர்

ஆண்கள்	933,432
பெண்கள்	967,659
மொத்தம்	1,901,091

வயது வாரியாக

16-க்குக் கீழ்ப்பட்டவர்கள்	185,725
16-க்கும் 50-க்கும் இடையில்-	1,680,148
50-க்கு மேல்	35,218

தொகை				தொழிற்சாலை	நூற்றுக்கு
5 பேருக்கு மேல்		50 பேருக்குள்		61,569	85·5
30	,,	100	,,	7,902	10·6
100	,,	200	,,	1,174	2·1
200-க்கு மேல்				1,295	1·8
			மொத்தம்	71,940	100·0

கூலி விகிதம்

தொழில்	மொத்த நேரம் (மணி)	மொத்தக் கூலி (ரூபாய்)	மணி ஒன்றுக்கு பைசா
1. நெசவு	2,599,851,096	2,079,880,876	$10\frac{1}{2}$
2. உலோகத் தொழில்	372,269,184	57,209,852	$28\frac{1}{2}$
3. யந்திர உற்பத்தி	750,924,389	126,6[illegible]2,068	30
4. ரசாயனத் தொழில்	479,950,976	53,152,552	21
5. அச்சுத் தொழில்	164,578,811	27,150,072	$31\frac{1}{2}$
6. உணவுப் பொருள்	302,897,411	52,136,072	$19\frac{1}{2}$
7. மின்சாரம்	33,402,376	5,784,444	33
8. சில்லறை	310,271,021	25,399,956	15

மணிக்கு சராசரி கூலி 18 பைசா

தொழிலாளர் சங்கம்

சங்கம்	942
அங்கத்தினர் தொகை	304,613
மொத்தத் தொழிலாளர் அங்கத்தினர் 100க்கு	7·5

நெசவுத் தொழில்

வருடம்	கஜம் துணி உற்பத்தி
1904	80,947,248
1908	177,443,839
1912	342,584,684
1916	560,181,108
1920	762,037,360
1924	1,030,905,958
1934	1,793,845,440

வருடம்	இறக்குமதி (ரூபாய்)	ஏற்றுமதி (ரூபாய்)
1868	2,034,384	5,160
1872	3,910,424	1,328
1876	3,926,524	8,504
1880	4,418,412	26,916
1884	1,990,536	87,924
1888	3,673,588	122,876
1924	9,492,692	261,269,988
1928	5,947,316	28,177,428
1932	3,304,544	230,970,264
1933	2,363,364	306,572,312
1934	761,664	393,880,816

ரயில்வே

1872-ல்	ரயில் பாதை	17	மைல்
1934-ல்	,,	1,419,188	,,
1934-ல்	அரசாங்கத்தாருடையது	973,687	,,
	தனிப்பட்ட கம்பெனிகளுடையது	445,501	,,

தபால்

1871-ல்	180	தபால் நிலயங்கள்
1933-ல்	10,557	நிலயங்கள்

ரேடியோ

பிராட்காஸ்டிங்ஸ் ஸ்டேஷன்	40
வைத்திருப்போர் தொகை	1,714,223

மின்சாரம்

பவர் ஸ்டேஷன்கள்	1,730
மொத்த வீடுகள்	1,25,00,000
மின்சாரம் உபயோகிக்கும் வீடுகள்	11,400,000

சினிமா

தியேட்டர்கள்	1,200

புத்தகங்கள்

வருடத்திற்கு சுமார்	20,000

ஏ. கே. செட்டியார்

எழுதிய

இதர நூல்கள்

---

1. உலகம் சுற்றும் தமிழன்

14 கட்டுரைகள் கொண்டது

விலை அணு 12

2. அமெரிக்கா

பிரயாணப் புத்தகம்

அமெரிக்க நாட்டின் அழகிய

16 படங்களுடன்

விலை ரூ. 1

சக்தி காரியாலயம்

ஜி. டி. :: சென்னை

சக்தி மலர்

சக்தி மலர்ப் பதிப்பு நூல்கள் தமிழ்மொழிக்கும் தமிழ்நாட்டிற்கும் ஏற்ற உயரிய நற்கருத்துக்களைத் தெளிவான எளியநடையில் வெளியிட எழுந்தனவாகும். இக்கருத்துக்கள் பிறநாட்டு நூல்களிற் காணப்பட்டாலும் அவையும் மொழிபெயர்க்கப்பெற்று இப்பதிப்புகள் வாயிலாய் வெளியிடப்பெறும்.

ஜப்பானிலே விளம்பரங்களைத் துண்டுப் பிரசுரங்களாக மட்டுமல்லாமல், தீப்பெட்டிகளாகவும் கொடுக்கிறார்கள்!

ஜப்பானியர் கல்யாணமான தம்பதிகளையும் சுவீகாரம் செய்து கொள்கிறார்கள்.

இவை போன்ற பல விஷயங்களை இந்நூலில் படிக்கலாம்.

சக்தி காரியாலயம்

ஜார்ஜ் டௌன் :: சென்னை